விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு
# வலம்புரி
# Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 14 புதன்கிழமை (27.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 130

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-4440)

## வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்
# ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்கள் வெள்ளியன்று கொழும்பு வருகை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் குறித்து இலங்கை அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின்னரான இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், சவால்கள் குறித்து மதிப்பீடு செய்வதற்காக ஐ.நாவின் இரண்டு சிறப்பு அறிக்கையாளர்கள் நாளை மறுதினம் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்புக்கு வருகை தரவுள்ளனர்.

(23-ம் பக்.)



## சகோதரர்களுக்கு கத்தி வெட்டு

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் பள்ளிவாசலுக்கு முன்னால் நின்று புகைப்பிடித்துக் கொண்டிருந்த இருவரை தடுக்க முயன்ற அண்ணன், தம்பி இருவரும் கத்தி வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில், சாவகச்சேரி தனக்கிளப்பு வீதிக்கு முன்னால் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலுக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

24ஆம் பக்கம் பார்க்க....

## தரம் - 5



புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

## தமிழீழ வைப்பகத்தின் தங்க நகை; மீட்கும் நடவடிக்கை ஆரம்பம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நீதிமன்றத்தின் அனுமதியுடன் நில அகழ்வு

24ஆம் பக்கம் பார்க்க....

## சமஷ்டி முறையிலான தீர்வை சுவீடன் அமைச்சர் ஏற்பு
### சந்திப்பின் பின் முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்படுத்தப்படவுள்ள புதிய அரசியல் யாப்பு மாற்றத்தில் சமஷ்டி முறையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும் என நாம் கோரி வருகின்ற விடயத்தை, சுவீடன் வெளிவிவகார அமைச்சர் மார்க்கொட் வால்ஸ்டொம் ஏற்றுக்கொண்டுள்ளார் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்ரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்ட சுவீ

24ஆம் பக்கம் பார்க்க....



## அழைத்தது நான் இல்லை

(யாழ்ப்பாணம்)

போராளிகளை நான் விசேடமாக கொழும்புக்கு அழைக்கவில்லை என தெரிவித்த முன்னாள் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், அவர்களை புனர்வாழ்வுப் பிரிவு படைத் தரப்பினர் அழைத்திருக்க

23ஆம் பக்கம் பார்க்க....

### நீர்வேலி பகுதியில் ரி.ஐ.டியினரால்
## சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் சிறப்பு தளபதி நகுலன் கைது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் சிறப்பு தளபதியாக இருந்த நகுலன் என அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை சிறிசிவமூர்த்தி என்பவர் நேற்றைய தினம் காலை

24ஆம் பக்கம் பார்க்க....



## சனல் 4 வெளியிட்ட புகைப்படத்திலிருந்த 5-வது நபரும் அடையாளம் காண்பிப்பு
### ஞானச்செல்லம் உதயராசா என மனைவி சாட்சியம்

(கிளிநொச்சி)

நாட்டில் இடம்பெற்ற இறுதிப் போர் குறித்து சனல் 4 ஊடகத்தினால் வெளியிடப்பட்டிருந்த ஆவண புகைப்படத்திலிருந்த 5-வது நபர் ஒருவரும் நேற்றையதினம் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறுதிக்கட்ட போரின்போது இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த முன்னாள் போராளியான தனது கணவரை, ஆடைகளைக் களைந்து இராணுவத்தினர் அழைத்துச் செல்கின்ற மற்றும் கிடங்கு ஒன்றின் அருகில் உட்கார வைத்துள்ள புகைப்படங்கள் சனல் 4 தொலைக்

24ஆம் பக்கம் பார்க்க....




## பன்றிக்கு வைத்த மின்கம்பியில் சிக்குண்ட குடும்பஸ்தர் மரணம்
### சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

(கரணவாய்)

பன்றிக்கு வைக்கப்பட்ட மின்சாரக் கம்பியில் சிக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்ததாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்

ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விளாத்திக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பனிக்கன் புளியங்குளம், வவுனியாவைச் சேர்ந்த வில்வராசா விஜயசீலன் (வயது - 29) என்ற இளம் குடும்பஸ்தரே பலியானவர் ஆவார்.

பன்றிக்கு வைக்கப்பட்டிருந்த மின்கம்பியை அறியாத அக்குடும்பஸ்தர் சென்றுகொண்டிருந்தபோது.

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தை தனியார் துறையுடன் இணைக்க அனுமதி

## அமைச்சரவை அனுமதித்ததாக பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான விமான சேவை நிறுவனமான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தை தனியார் துறையுடன் இணைப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பலத்த நஷ்டத்தை சந்தித்துள்ள காரணத்தினாலேயே ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தை தனியார் நிறுவனமொன்றுடன் இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் பிரதமர் ரணில் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் சந்தித்துள்ள பெரும் நஷ்டத்தால் நாட்டின் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார். சுமார் 3.2 பில்லியன் அமெரிக்க டாலர் கடனுடன் நஷ்டத்தில் இயங்கி வரும் அந்த நிறுவனத்தை பாதுகாப்பதற்கு இன்னொரு தனியார் நிறுவனத்துடன் அதனை இணைப்பது அவசியம் என்றார். (செ-12)


## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

**Manufactured by:**
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
தொ.பே - 021 - 222 2567
(C-4439)



## உங்கள் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?

- இன்னொருவர் வாழ்க்கையை மலர வைப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் காண விரும்புகிறீர்களா?
- தற்கொலைச் செய்திகள் வருத்தம் தருகின்றனவா?
- முன்பின் தெரியாதவருக்கும் உதவ நீங்கள் தயாரா?
- மற்றவர்களின் துயரங்களைப் பொறுமையுடன் செவிமடுக்க உங்களால் முடியுமா?

*ஒரு தொண்டராகச் சேர்வீர்!*

தற்கொலைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே எமது ஒரே நோக்கம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் நாம் உணர்வுபூர்வமான ஆதரவை வழங்குகிறோம். எம்முடன் இணைந்து, அர்ப்பணிப்புடன் பணியாற்ற விரும்பின் உடனே தொடர்பு கொள்ளுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்களை ஒதுக்க வேண்டும். சம்பளம் எதுவுமில்லை. ஏற்ற பயிற்சி வழங்கப்படும்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
**(021) 222 8117 / 077 900 8776**
(மு.ப. 9.00 - பி.ப. 1.00)

Sri Lanka Sumithrayo, Jaffna (Probationary Branch)

-(*அரசியல், மத சார்பு எதுவுமற்ற அமைப்பு*)

*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*

(தி-4398)


## வடக்கு முதலமைச்சருடன் அமைச்சர் றிசாத் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் திடீர் விஜயம் செய்த கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றிஷாட் பதியுதீன் வட மாகாண முதலமைச்சர் சி.வி விக் னேஸ்வரனை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சந்தித்து நலன் விசாரித்தார்.

இச்சந்திப்பின்போது யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும்பங்கேற்றிருந்தார். (இ-4)


**பணிப்பெண் தேவை**

வெள்ளவத்தையில் வசிக்கும் கௌரவமான சிறிய குடும்பத்திற்கு உதவியாக இருக்க பணிப்பெண் ஒருவர் உடனடியாக தேவை.
**தொடர்புகளுக்கு :**
**0775651122** (4311)



## செனஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

**யாழ் மாவட்ட சென்ஜோன் அம்புலன்ஸ் இல் கீழ்க் குறிப்பிட்ட சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது.**

1. அம்புலன்ஸ் சாரதி ( A தர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அவசியம்)
2. ஆண், பெண் நோயாளர் பராமரிப்புத்தொண்டர்கள் (ஆண் தொண்டர்களுக்கு நாள் ஒன்றிற்கு 1500/= ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படும்)
3. எழுதுவினைஞர் (கணனி அனுபவம் அவசியம்)

தகுதியானோர் உரிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் 01.05.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 3.00 மணிக்கு இல.161, 1 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ் மாட்ட தலைமை அலுவலகத்திற்கு சமுகம் தரவும்.

**மேலதிக விபரங்களுக்கு**
**அவசர அம்புலன்ஸ் சேவை**
**தொ.பேசி இலக்கம் - 021 321 4444**

மாவட்ட ஆணையாளர்,
சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
யாழ்.மாவட்டம்.
(4310)



## பணிநிலை வெற்றிடங்கள்

*ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன.*

**01. ஆசிரியர்கள் :-**
*பாடங்கள் :* சங்கீதம், நாடகமும் அரங்கியலும், வர்த்தகமும் கணக்கீடும்

***தகைமைகள் :-***
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்குறிப்பிட்ட பாடங்களில் பட்டத்தினை பூர்த்தி செய்திருத்தல். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:
- இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்பித்தல் வேண்டும்.
- உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
- சம்பளம் மாதம் ரூபா 18000/= க்கு குறையாது வழங்கப்படும்

**02. பராமரிப்பாளர்கள்**

***தகைமைகள்:***
1. க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை.

2. அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத் துறையில் அனுபவம்மிக்கவர்கள் இவ் பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.

3. வயதெல்லை – 30–65

4.விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவநெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சமூக அர்ப்பணிப்பு மிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

குறிப்பு:
- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும்.
- உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்..சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**03. சமையலாளர்கள்**

**04. இல்ல நடைமுறைகளுக்கு அமைவாக இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.**

**05. வயதெல்லை- 30-65**

**06. குடும்பப் பொறுப்பற்ற தனியாட்கள் விரும்பத்தக்கது**

குறிப்பு:
- உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு 10.05.2016 ற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :**
தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள்
சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல : 077 060 4950, 021 492 3118
மின்னஞ்சல் முகவரி : rasa46@yahoo.com
(C-4442)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

1. வணிக முதற் தேர்வு - 2013 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக முதற்தேர்வு - 2013 (பழைய பாடத்திட்டம்)
3. வணிக இரண்டாம் தேர்வு - 2013 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக மாணி - பகுதி - I- 2013 (பழைய பாடத்திட்டம்)
5. வணிக மூன்றாம் தேர்வு - 2013 (புதிய பாடத்திட்டம்)
6. வணிக மாணி - பகுதி -II- 2013 (பழைய பாடத்திட்டம்)
7. வணிக நான்காம் தேர்வு - 2013 (புதிய பாடத்திட்டம்)
8. வணிக மாணி - பகுதி - III - 2013 (பழையபாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை 09.05.2016 (திங்கட்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. வணிக முதற் தேர்வு – 2013 (புதிய பாடத்திட்டம்) | 09.05.2016 – 17.05.2016 | 1.00 – 4.00 |
| 2. வணிக முதற் தேர்வு – 2013 (பழைய பாடத்திட்டம்) | 09.05.2016 – 17.05.2016 | 1.00 – 4.00 |
| 3. வணிக இரண்டாம் தேர்வு – 2013 (புதிய பாடத்திட்டம்) | 20.05.2016 – 28.05.2016 | 1.00 – 4.00 |
| 4. வணிக மாணி பகுதி - I - 2013 (பழைய பாடத்திட்டம்) | 20.05.2016 – 28.05.2016 | 1.00 – 4.00 |
| 5. வணிக மூன்றாம் தேர்வு – 2013 (புதிய பாடத்திட்டம்) | 30.05.2016 – 04.06.2016 | 9.00 – 12.00 |
| 6. வணிக மாணி பகுதி - II - 2013 (பழைய பாடத்திட்டம்) | 30.05.2016 – 04.06.2016 | 9.00 – 12.00 |
| 7. வணிக நான்காம் தேர்வு – 2013 (புதிய பாடத்திட்டம்) | 06.06.2016 – 11.06.2016 | 9.00 – 12.00 |
| 8. வணிக மாணி பகுதி - III - 2013 (பழைய பாடத்திட்டம்) | 06.06.2016 – 11.06.2016 | 9.00 – 12.00 |

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 05.05.2016 (வியாழக்கிழமை) தொடக்கம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.**

**பதிவாளர்**
25.04.2016
(C-4441)

# போர்க்குற்றங்கள் சாதாரண விடயமல்ல



## பெண்களுக்கே பாதிப்பு அதிகம்; சுவீடன் அமைச்சர் சுட்டிக்காட்டு

போர்க்குற்றம் போன்ற பாரிய விடயங்களில் பெண்கள் பாதிக்கப்படுவதை சாதாரண விடயமாக கருதுவது தவறானதென சுவீடன் வெளிவிவகார அமைச்சர் மார்கொட் வோல் ஸ்ரொம் தெரிவித்துள்ளார்.

(19 ஆம் பக்கம் பார்க்க...)

### சுவீடன் அமைச்சரின் வருகைக்காக காத்திருந்து

## ஏமாற்றத்துடன் திரும்பிய நலன்புரி நிலைய மக்கள்

சுவீடன் அமைச்சரின் வருகைக்காக காத்திருந்த நலன்புரி முகாம் மக்கள் அமைச்சரின் வருகை திடீரென இரத்து செய்யப்பட்டதால் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றுள்ளனர்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்டிருந்த சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சர் மார்கொட் வோல் ஸ்ரொம் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்துக்கு வருகை தருவதாக பிரதேச செயலர்களால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அந் நிலையில் குறித்த நலன்புரி நிலையத்தில் முற்பகல் 11 மணியில் இருந்து பிற்பகல் 1 மணிவரை அமைச்சரின் வருகைக்காக காவலிலிருந்த மக்கள் அமைச்சர் வருகை தராததினால் ஏமாற்றமடைந்து வீடுகளுக்கு திரும்பிச் சென்றனர்.

இது தொடர்பாக மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது முகாமுக்கு வருவதாக கூறிவிட்டு சுவீடன் அமைச்சர் இங்கு வராமல் சென்றது எமக்கு மிகவும் ஏமாற்றமாகவும் வேதனையாகவும் உள்ளது.

அனைவரும் எம்மை வந்து பார்த்துவிட்டு தான் செல்கிறார்கள்.ஆனால் எமக்கு எந்த தீர்வும் கிடைக்கவில்லை. எவரையும் வர வேண்டும் என நாம் கட்டாயப்படுத்தவில்லை.

நாம் கூலிவேலைக்கு செல்பவர்கள்.காலையில் இருந்து காத்திருந்து பயன் இல்லை.இவ்வாறு எம்மை அலைக்களிப்பது வேதனை அளிக்கிறது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (இ-9)

## இலங்கையில் சீனாவின் உதவியுடன் கடல்சார் அவதானிப்பு நிலையம்

இலங்கையில் கடல்சார் அனர்த்த அவதானிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு சீனா உதவி வழங்கவுள்ளது. மீனவர்கள் கடல் அனர்த்தங்களில் சிக்கிக் கொள்வதைத் தடுக்கவே இந்த அவதானிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, கடந்த வாரம் சீனாவின் அரச சமுத்திர நிர்வாக பிரதி நிர்வாகி சாங் ஹொங்செங் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழு இலங்கை வந்திருந்தது.



இந்தக் குழுவினர், இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இதன்போது, கடல்சார் அனர்த்த அவதானிப்பு நிலையத்தை, மீரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தில் நிறுவுவதற்கு சீனத் தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. (இ-5)

## சம்பந்தன் எழுதிய கடிதத்துக்குரிய பதிலை ஜனாதிபதி, பிரதமருக்கு கையளித்துள்ளேன்

### மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

பொருத்து வீட்டுத்திட்டத்தினை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என எதிர்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் எழுதிய கடிதத்துக்குரிய பதிலை ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கையளித்துள்ளதாகவும் குறித்த வீட்டுத்திட்டப்பணிகள் தொடர்ச்சியாக நடைபெறும் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட சுவீடன் வெளிவிவகார அமைச்சரை மீள்குடியேற்ற அமைச்சினால் நிர்மாணிக்கப்படும் 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் உரும்பிராயில் அமைந்துள்ள பொருத்து வீட்டை பார்வையிடுவதற்காக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நேற்றைய தினம் அழைத்து சென்றிருந்தார். குறித்த வீட்டினை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுவீடன் வெளிவிவகார அமைச்சரை சந்தித்த போது எம்மால் அமைக்கப்பட்ட பொருத்து வீட்டினை வந்து பார்வையிடுமாறு கோரிக்கை விடுத்திருந்தேன்.அந்த வகையில் அவர் வந்து குறித்த வீட்டினை பார்வையிட்டுள்ளார்.

அனைவரும் வந்து பாருங்கள். அதில் உள்ள நன்மையை அறியுங்கள். சிலர் கூறுகிறார்கள் இப்போதே வீடு உடைந்துள்ளது அது பொய்யான கருத்து. குறித்த வீடு மக்களுக்கு நன்மையாக இருக்கிறது.

மக்களுக்காக தான் நாம் செய்கிறோம்.இத் திட்டத்துக்கான அமைச்சரவை அனுமதி கிடைத் துள்ளது. சிறு சிறு வேலைத் திட்டங்கள் மேற்கொண்ட பின்னர் தொடர்ச்சியாக இத் திட்டம் நடைபெறும்என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## சம்பந்தனைக் கைது செய்தால் கலவரங்கள் உருவாகும்

### அமைச்சர் இராதாகிருஷ்ணன் எச்சரிக்கை

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனைக் கைது செய்தால் வடக்கு மற்றும் கிழக்கில் கலவரங்கள் தோன்றலாம் என கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவரான இரா. சம்பந்தன் கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் இராணுவ முகாமிற்குள் சென்றதை அடுத்து பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, சம்பந்தனை கைது செய்யவேண்டும் என தெரிவித்திருந்தார்.

அது குறித்து கருத்து தெரிவிக்கும் முகமாகவே நேற்று முன்தினம் எட்டியாந்தொட்டையில் மலையக மக்கள் முன்னணியின் புதிய கட்சி அலுவலகத்தைதிறந்து வைத்து உரையாற்றும் போது இராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மரண அறிவித்தல்கள்

## சிவஞானசுந்தரம் பனிமதி



உடையார்வளவு நவாலி கிழக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் பனிமதி (26.04.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்ளான தம்பையா - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அரசர்கோன் - சொர்ணம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் (ஒய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் யோகேஸ்வரி (ஜேர்மனி), பரிமளேஸ்வரி, நீலேஸ்வரி (ஒய்வுபெற்ற ஆசிரியை), ஆகியோரின் அன்புத் தாயும் இரட்ணசிங்கம் (ஒய்வுபெற்ற உத்தியோகத்தர் C.T.B), தில்லைநாதன், விஜயசுந்தரம் (ஒய்வு பெற்ற உத்தியோகத்தர் C.T.B ) ஆகியோரின் அன்பு மாமியும் கண்ணன், தயாளன், ரேகன், மதுரி, யசிதரன், யதுகுலதரன், யதுபாலதரன், சதீஸ்கரன், நிசங்கரன், ரவீஸ்கரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2016) புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் வளவு,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

(C-4446)

தகவல் :
குடும்பத்தினர்

## வேலுப்பிள்ளை அருணகிரிநாதர்

(சிரேஷ்ட சட்டத்தரணி - வவுனியா)



யாழ்ப்பாணம் அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல் குட்சட்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அருணகிரிநாதர் (சிரேஷ்ட சட்டத்தரணி - வவுனியா) அவர்கள் 26.04.2016 நேற்றுக் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 28.04.2016 வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

(C-4447)

# சறுக்கல் அடைந்த இலங்கை மீண்டும் புத்துயிர் பெறும்

## சங்கா நம்பிக்கை



சமீபத்திய சறுக்கலுக்கு இலங்கை அணி வீரர்கள் சிறப்பான ஆட்டத்தின் மூலம் கண்டிப்பாக பதிலளிப்பர் என்று குமார் சங்கக்கார கூறியுள்ளார். இலங்கை அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார இங்கிலாந்தில் நடக்கும் கவுண்டிப் போட்டியில் விளையாடி வருகிறார்.

இந்நிலையில் பிபிசியின் நிகழ்ச்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த சங்கக்கார, எங்களிடம் பல திறமையான வீரர்கள் உள்ளனர்.

ஆனால்முதல்தரப்போட்டிகளில் சிறந்த கட்டமைப்பு என்பது அவசியம்.

அவர்களின் தரம், மனத்திறன், குணம் என அனைத்தையும் அடிக்கடி ஆராய்ந்து சர்வதேசதரத்திற்கு கொணடு வர வேண்டும்.

இது இலங்கை கிரிகெட்டுக்கு முக்கியமான காலகட்டமாக இருக்கப் போகிறது.

கண்டிப்பாக முன்னாள் மற்றும் தற்போதைய வீரர்கள் மீண்டும் அணியை ஒரு புதிய நிலைக்கு எடுத்துச் செல்வார்கள் என்று நம்புகிறேன்.

மேலும் சர்வதேச போட்டிகளின் போது ஆடுகளத்தில் களமிறங்கி நீண்டநேரம் துடுப்பெடுத்தாடுவது என்பதற்கு நிகராக ஏதும் இருக்க முடியாது.

சர்வதேச போட்டிகளின் அந்த தருணத்தை நான் மிகவும் மிஸ் செய்கிறேன். அது இனி நடக்காது.

ஆனால் வாழ்வோடு நாமும் ஒருகிணைந்து போக வேண்டியுள்ளதே என்று கூறியுள்ளார். (க)

# பார்சிலோனா ஓபன் டென்னிஸ் ஸ்பெயின் ரபெல் நடால் சம்பியன்



ஸ்பெயினில் நடைபெற்ற பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நட்சத்திர வீரர் ரபேல் நடால் 9ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியன் ஜப்பான் வீரர் கெய் நிஷிகோரியுடன் மோதிய நடால் 6:4 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் நிஷிகோரி கடுமையாகப் போராடியதால் ஆட்டத்தில் அனல் பறந்தது.

எனினும் தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்தி நிஷிகோரியின் சர்வீசை முறியடித்த நடால் 6:4, 7:5 என்ற நேர் செட்களில் வென்று 9ஆவது முறையாக பார்சிலோனா ஓபன் கோப்பையை முத்தமிட்டார் (2005-09 மற்றும் 2011-13, 2016). கடந்த 2014 மற்றும் 2015 இல் பட்டம் வென்றிருந்த நிஷிகோரி ஹட்ரிக் சாதனை வாய்ப்பை வீணடித்தார்.

களிமண் தரை மைதானங்களில் தனது 49ஆவது சம்பியன் பட்டத்தை வென்ற நடால், ஆர்ஜென்டின வீரர் கில்லர்மோ வலாஸ் சாதனையை சமன் செய்து அசத்தினார்.

கடந்த வாரம் நடந்த மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் போட்டியிலும் பட்டம் வென்ற நடால், தற்போது நல்ல போர்மில் உள்ளதால் களிமண்தரை மைதானத்தில் நடக்க உள்ள பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் 10ஆவது முறையாக கிண்ணத்தை கைப்பற்றி மகத்தான சாதனை படைப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. (க)

## கண்ணீர் அஞ்சலி



மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலய பரிபாலன சபைத் தலைவர்
திரு.இ.தில்லைநாதன் அவர்களின் அன்பு மாமியார்

திருமதி **சிவஞானசுந்தரம் பனிமதி**
(உடையார்வளவு, நவாலி கிழக்கு)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**பரிபாலன சபை**
மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலயம் (இ)

# சுவீடன் வெளிவிவகார அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம்



சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சர் மார்கொட் வோல் ஸ்ரொம் உள்ளிட்ட குழுவினர் நேற்றைய தினம் யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் செய்து பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இவர் மூன்றாவது நாளாக நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். பின்னர் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார். அத்துடன் உரும்பிராயில் அமைக்கப்பட்டுள்ள பொருத்து வீட்டினையும் பார்வையிட்டார்.

(படங்கள்:-பொ.சோபிகா, கு.கஜரூபன்)

## முற்றோதல்

பன்னிருதிருமுறை, கந்தபுராணம் திருப்புகழ் முற்றோதல் பெருவிழா வட்டுக்கோட்டை, மூளாய் வீதி, கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. தொடர்ந்து தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை சுமார் ஒரு மாதங்களுக்கு இம் முற்றோதல் நடைபெறவுள்ளது. இதில் பங்கு கொள்ள விரும்புவர்கள் சமய தீட்சை பெற்ற மாமிச போசனம் அற்றவர்கள்தங்கியிருந்து ஓதக்கூடியவர்கள் 0772262572 என்ற தொலைபேசி இலக்கத்துடன் இரவு 8 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்.

உலக அமைதி வேண்டியும் "தமிழ் மக்களாகிய எமக்கு நிரந்தரத் தீர்வு வேண்டியும்'' இத் தொடர் பிரார்த்தனை நடைபெறுகிறது. (இ)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இராணுவத்துக்கு முக்கிய பங்குண்டு

## பிரித்தானியா வலியுறுத்தல்

நீண்டகாலப் பிரச்சினைகளாக உள்ள நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமை விவகாரங்களில், நாட்டின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில், இலங்கை இராணுவத்துக்கு முக்கிய பங்கு இருப்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

அமைதியான, செழிப்பான, ஒன்றுபட்ட நாட்டைக்கட்டியெழுப்பும், இலங்கை அரசாங்கத்தின் முயற்சிக்கு பிரித்தானியா ஆதரவு அளிக்கும் என்று கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான வதிவிடமற்ற தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள, கப்டன் ஸ்ருவார்ட்போர்லனட், மற்றும் பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று கடந்த வாரம் மேற்கொண்ட பயணம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையின் அழைப்பின் பேரில் கப்டன் போர்லனட் மற்றும் பிரதித் தூதுவர் லோறா டேவிஸ் ஆகியோர் திருகோணமலை கடற்படைப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றிருந்தனர்.

கொழும்பில், கப்டன் போர்லனட், இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர், ஜேம்ஸ் டோரிசுடன் இணைந்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கடற்படை, விமானப்படை மற்றும் இராணுவத் தளபதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

கப்டன் போர்லனட், பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சின், அனைத்துலக இராணுவ கொள்கை மற்றும் திட்டமிடல், பிரிவின் பிரதித் தலைவர் பற்றீசியா பார்க்கின் தலைமையிலான குழுவுடன் இணைந்து, பாதுகாப்பு அமைச்சு, சிவில் சமூகம், இராஜதந்திர சமூகப் பிரதிநிதிகளுடன் சந்திப்புகளை நடத்தியிருந்தார். (இ-5)

## இராசி பலன்

27.04.2016
(சித்திரை 14, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பஞ்சமி மாலை 5.37 மணிவரை
மூலம் பிற்பகல் 5.06மணிவரை
சுபநேரம் 4.29-5.59 மணிவரை
இராகுகாலம் 11.59-1.29 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி சுக் புத | | |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் ரோகினி, மிருகசீரிடம் | | குரு ராகு |
| சந் | சனி செவ் | | |

**மீனம்:** செய்தொழில் மேன்மையுண்டு, வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெண் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மேடம்:** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், முயற்சிகள் தாமதமாகும்.

**மிதுனம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், தனவரவு திருப்திகரமாக அமையும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உடல் நலன் சீராகும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், கௌரவமான நாள்.

**மகரம்:** உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், வீட்டுத் தேவைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**கன்னி:** குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், வாகன பழுதுச் செலவுகள் குறையும், ரோக பயமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.



தந்தை செல்வாவின் 39 ஆவது நினைவு தினம் நேற்றையதினம் யாழில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது. இதன்போது தந்தை செல்வா நினைவுப் பேருரையை கனடா நாட்டை சேர்ந்த விரிவுரையாளர் கலாநிதி சந்திரகாந்தன் ஆற்றியிருந்தார். இந்நிகழ்விற்கு தந்தை செல்வா அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளார் தலைமை தாங்கியிருந்தார். இந்நிகழ்வில் யாழ்.இந்திய துணைத்தூதர் ஆ.நடராஜன், தந்தை செல்வா அறக்கட்டளை நிதியத்தின் செயலாளர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், மாகாண சபை பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:உ.சாளின்)

# யாழில் இடம்பெறும் குற்றச்செயல்களை உடன் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

## பொலிஸ்மா அதிபருக்கு செல்வம் எம்.பி.கடிதம்

(யாழ்ப்பாணம்)

**யாழ் மாவட்டத்தில் அண்மைக் காலங்களாக இடம்பெற்று வருகின்ற அசம்பாவிதங்கள் குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களின் இயல்பு நிலை பாதிக்காத வகையில் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

குறித்த சம்பவம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றை நேற்றைய தினம் அனுப்பி வைத்துள்ளார். அந்த கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, கடந்த சில தினங்களாக யாழ். மாவட்டத்தின் சில பகுதிகளில் இடம் பெற்று வருகின்ற வன்செயலகளின் காரணமாக மக்கள் பாதிப்படைந்துள்ளனர். குறித்த சம்பவங்கள் எனக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளன.

இடம் பெறுகின்ற சம்பவங்கள் குறித்து பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இரவு நேரங்களில் அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்து சமாதானத்தையும்,சக வாழ்வையும் சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் குறித்த சம்ப வங்கள் குறித்து மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இதற்கு பொலிஸார் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண் டும் என பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதேவேளை யாழில் தற்போது வாள்வெட்டு சம்பவங்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் மிகக்கூடிய அளவில் அதிகரித்து காணப்படும் நிலையில், நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸார் இந்த குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. மேலும் அண் மையில் பொலிஸ்மா அதிபராக பொறுப்பேற்றுள்ள பூஜித ஜெய சுந்தர, முன்னர் வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பி டத்தக்கது. (இ-4)




## ஈழத்து மக்களோடு இந்தியா என்றும் இணைந்தே இருக்கும்

### யாழ்.இந்தியத்தூதுவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் ஒரு காந்தி போல, ஆபிரிக்காவில் நெல்சன் மண்டேலா போல ஈழத்தில் தந்தை செல்வா தான் ஈழத்து காந்தி என யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார். தந்தை செல்வாவின் 39 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி நேற்றைய தினம் தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவிற்கு காந்தி அடிகள் எந்தளவிற்கு தியாகம் செய்தாரோ அந்தளவிற்கு தந்தை செல்வாவும் ஈழத்தமிழ் மக்களுக்காக தியாகம் செய்துள்ளார்.

அதனால் தான் தந்தை செல்வா ஈழத்து காந்தியாக வர்ணிப்பு செய்யப்படுகின்றார். தந்தை செல்வா ஈழத்து மக்களுக்கு செய்த சேவையை தமிழ் மக்கள் ஒரு போதும் மறக்கமாட்டார்கள். ஈழத்து மக்களோடு இந்தியா என்றும் இணைந்தே இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நினைவஞ்சலி கூட்டத்தில் உரையாற்றிய அனைவருமே தந்தை செல்வா தமிழ் மக்கள் தொடர்பில் கூறிய தமிழ் மக்களை அந்த கடவுள் தான் காப்பற்ற வேண்டும் என்ற வசனத்தை உச்சரிக்க தவறவில்லை.

தற்போது இது மெய்ப்பட்டுக் கொண்டே செல்கின்றது என்பதனையும் அவர்கள் தமது பேச்சில் வலியுறுத்தி இருந்தனர். (இ-4)

## கடவுள் சுவாமிகளின் 111 ஆவது ஜயந்தி விழா

நிகழும் துர்முகி வருட சித்திரை மாதம் 15 ஆம் நாள் (28.04.2016) வியாழக்கிழமை ஸ்ரீலஸ்ரீ சிவஸ்ரீ முருகுப்பிள்ளை மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 111 ஆவது ஜயந்தி விழா தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் காலை 8 மணிக்கு வேல் பெருமானுக்கு அன்னாபிஷேகம், 10 மணிக்கு விசாகரத்தின ஐயா மட் சுவாமிகள் வாசஸ்தலத்தில் பூஜை பிரார்த்தனை, ஆத்மீக சொற்பொழிவுகள் என்பன நடைபெறும். தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூஜையும் இடம் பெறும். (இ

## கற்கை நெறி பிற்போடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள் வாரி) முழுநேரம்-2016 27. 04. 2016 அன்று ஆரம்பிக்கப்படவிருந்த மேற்படி கற்கை நெறியானது தவிர்க்க முடியாத காரணத்தினால் 04.05.2016 அன்று ஆரம்பமாகும்.ஏற்கனவே குறிப்பிட்டது போன்று வணிக முகாமைத்துவ பீட புதிய கட்டடத்திற்கு மாணவர்கள் காலை 9மணிக்கு சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்.மாவட்ட த் தில் உள்ள காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் விருந்தோம் பல் கற்கை நெறிகளான சமைய லாளர், வெதுப்பாளர், அறைபரா மரிப்பாளர், உணவு மற்றும் குடி பானம் பரிமாறுபவர் என்பவற்றை எதிர்வரும் வைகாசி மாதத்தில் ஆரம் பிக்கவுள்ளது.

இக் கற்கை நெறிகளுக்கான பதிவுகள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இல.12 கே.கே.எஸ் வீதி வீர சிங்கம் மண்டபம் (1ம் மாடி) இல் அமைந்துள்ள இலங்கை தொழி ற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

எனவே இக்கற்கை நெறிகளினை கற்க விரும்புவர்கள் தங்கள் சுய விபரக்கோவை மற்றும் கல்வி சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு இ.தொ.அ. யாழ். உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

➤ ➤ ➤ ➤ ➤ ➤ ➤


இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்.மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம் மற்றும் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட் பவியலாளர், கணனிவன்பொருள் திருத்துநர், கணனிபடவடிமைப்பாளர், குளிர்சாதன இயந்திர திருத்துநர் மற்றும் டீசல் வாகன இயந்திர திருத்துநர் கற்கை நெறிகளை பகுதி நேரமாக கற்பதற்கு எதிர்வரும் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கை நெறிகள் கற்க விரும்பு வர்கள் தங்கள் பதிவகளை அலுவலக நேரத் தில் மாவட்ட அலு வலகம் 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில எதிர்வரும் 29.04. 2016 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளு மாறு இ.தொ.அ.யாழ். உதவிப்ப ணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# சம்பூர் அனல்மின் நிலைய திட்டத்தை நிறுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

**சம்பூர் அனல் மின் நிலையப் பணிகளை இடைநிறுத்தக் கோரி நேற்று காலை அமைதி வழி எதிர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.**



திருகோணமலை பசுமை இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டமானது கிழக்கு மாகாணசபை கட்டடத்திற்கு முன்பாக நடைபெற்றது.

சமபூர் பகுதியைச் சேர்ந்த மக்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு அனல்மின் நிலையத்தினால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டியதுடன், அவ் விடத்தில் அனல்மின் நிலை யத்தினை அமைக்க வேண்டாம்என அரசிடம கோரிக்கை விடுத்தனர்.

தாம் நுரைச்சோலை அனல் மின்நிலையத்தினை பார்வையிட்டு அதன் குறைபாடுகளையும் குறிப்பாக அதன் சுற்றுப்புறச் சூழலையும் பார்வையிட்டதாகவும் தெரிவித்த மக்கள், செழிப்பாக இருக்கும் சம்பூர் நிலமானது நுரைச்சோலை பகுதியானது தற்போதைய நிலைமையில் காட்சியளிப்பது போல் மாறிவிடக்கூடும்எனும் அச்சத்தில் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

மேலும் அனல்மின் நிலையம் தவிர்த்த வேறேனும் சூழலுக்கு பாதகமற்ற தொழிற்சாலையினை நிறுவுவதற்காக முயற்சிக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்தனர். (இ-5)

## சமஷ்டி ஆட்சி முறைக்கு சு.க.ஆதரவு அளிக்காது

### மகிந்த சமரசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

சமஷ்டி ஆட்சிமுறைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் ஆதரவு வழங்காது, அதுபற்றிப் பேச்சுக்களையும் நடத்தாது என்று, அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையினால் முன்மொழியப்பட்டுள்ள சமஷ்டி ஆட்சி முறை பற்றிய யோசனை தொடர்பாக, கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

"வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டும். சமஷ்டி ஆட்சி முறை கொண்டு வரப்பட வேண்டும் என்று வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

மாகாண சபைகளில் பல்வேறு பிரேரணைகள் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் அவற்றுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைப்பதற்கு ஆளுநரின் அனுமதிதேவை.



வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு வடமாகாண ஆளுநரின் அனுமதி கிடைக்கப் போவதில்லை.

வடக்கு, கிழக்கை மீண்டும் இணைத்தல் மற்றும் சமஷ்டி முறைமையிலான தீர்வு என்பனவற்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடுமையாக எதிர்க்கிறது.

இது தொடர்பான பேச்சுகளுக்கே இடமில்லை. அது பற்றிப் பேசவும், நடத்தவும் அரசாங்கம் தயாரில்லை. இதுபோன்று நகர்வுகள் இப்போதுள்ள அரசியல் உறுதித்தன்மையை சீர்குலைத்து விடும்.

அனைத்து தீர்வும், 13 ஆவது திருத்தத்துக்குட்பட்டதாகவே முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)



**அவுஸ்திரேலியா சிட்னியில் உலக சைவப்பேரவையின் விழாவில் கலாநிதி ஆறு.திருமுருகன் உரையாற்றினார். வைத்திய கலாநிதி இளமுருகனார் பாரதி இவ் விழாவுக்கு தலைமை தாங்கினார்.**




**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா:14
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/4257

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 73சூரிசெவ் 8 இல்
தகைமை/தொழில்:A/Lலண்டன் PR
தொ.இ: B/4261

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 15சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்HNDE/பொறியியலாளர்
தொ.இ: B/4263

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 2
உயரம்: 6'
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: B/4265

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 56செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்
தொ.இ: G/5104

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 50செவ் 12 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5107

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 6செவ் 2 இல்
உயரம்: 164cm
தகைமை/தொழில்: HND/தனியார் தொழில்
தொ.இ: G/5109

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 16செவ் 4 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: AAT, HNDIT, B.COM (reading)
தொ.இ: G/5113

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை

## நியமித்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலக பிரிவுகளில் 4 பிரதேச செயலக பிரிவுகளுக்கு நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (RDO) நியமிக்கப்படாதுள்ளதுடன் 3 பிரதேச செயலக பிரிவுகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இல்லாது இருப்பதுடன் முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பணிமனையிலும் போதியளவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதால் கிராம மக்கள் மற்றும் முன்னாள் போராளிகள் என பல தரப்பினரும் தமக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள், கிராம அபிவிருத்தி உதவிகள் என்பனவற்றை இழந்து வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டமானது இறுதிப் போரின் போது முற்றுமுழுதாக பாதிப்பை எதிர்நோக்கிய மாவட்டமாகும்.

இங்கு மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு 6 வருடங்கள் கடந்த நிலையில்துறை சார்ந்த பிரிவுகளுக்கு ஆளணிகள் நிரப்பப்படாமையால், மக்கள் தமக்கான உதவிகளையும் சேவைகளையும் பெற முடியாது இருப்பதாக சுட்டிக் காட்டுகின்றனர்.

இந் நிலையில் ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, வெலிஓயா, மாந்தை கிழக்கு ஆகிய 4 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை.

அத்துடன் மாந்தை கிழக்கு, வெலிஓயா, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை.

மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பணிமனையிலும் போதியளவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்கு துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வாரத்தில் இரு நாட்கள் பதில் கடமையில் ஈடுபட்டு வருகின்றார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்கு கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வாரத்தில் இரண்டு நாட்கள் பதில் கடமையில் ஈடுபட்டு வருகின்றார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்கு கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வாரத்தில் இரண்டு நாட்கள் பதில் கடமையாற்றுகின்றார்.

வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவிற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

எனவே இவ் விடயத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் கவனத்தில் கொண்டு மேற்படி ஆளணியினரை நியமித்துத் த்ருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)




# ஆயிரத்து 196 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் தேவையாகவுள்ளன

**36 குடும்பங்களின் வீடுகள் புனரமைக்க வேண்டியுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு**

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலக பிரிவிலுள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளில் இடப்பெயர்வின் பின்னர் 3 ஆயிரத்து 543 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 336 அங்கத்தவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், இன்னும் ஆயிரத்து 196 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

அத்துடன் 36 குடும்பங்களின் வீடுகள் புனரமைக்கப்படவேண்டியுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் இடப்பெயர்வின் பின்னர் 3 ஆயிரத்து 543 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினால், 2 ஆயிரத்து 43 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 470 குடும்பங்களின் வீடுகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இன்னமும் ஆயிரத்து 196 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளதுடன் 36 குடும்பங்களின் வீடுகள் புனரமைப்பு செய்யப்படவேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)


## 271 பேர் நேற்று முன்தினம் சாட்சியங்களை பதிவு செய்தனர்

காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி குழுவின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான சாட்சி பதிவு செய்யும் இரண்டாம் நாள் அமர்வு நேற்று காலை நடைபெற்றது. ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான சாட்சிகளை பதிவு செய்யும் அமர்வுகள் நாளை வரையும் நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் சாட்சியமர்வில் 271 பேர் தமது சாட்சியங்களைப் பதிவு செய்ததுடன் 69 பேர் புதிய பதிவுகளையும் மேற்கொண்டுள்ளனர். (2-15)

# மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த குழு நியமனம்

வடக்கு, கிழக்கு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபடுகின்ற தென்பகுதி மீனவர்களின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மீன்பிடித்துறை அமைச்சர் மகிநதஅமரவீர குழுவொன்றை நியமித்துள்ளார் என கடற்றொழில் நீரியல் வளத் துறைப் பணிப்பாளர் நாயகம் எம்.சி.எல்.பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொக்கிளாய் களப்பை பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொணட பணிப்பாளரிடம் ஊடகவியலாளரொருவர் அண்மைக் காலமாக முல்லைத்தீவில் வெளி மாவட்ட மீனவர்களால் இப்பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அண்மையில் முல்லைத்தீவிற்கு வருகை தந்த மீனவ அமைசசர் வெளி மாவட்ட மீனவரை தடை செய்வதாக கூறிச் சென்றார். இருப்பினும் அதன் பின்னர் இன்னும் இன்னும் படகுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பான தங்களது நிலைப்பாடு என்ன என்று வினவியதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தென்பகுதி மீனவர்களின் அத்துமீறல்கள் தடுக்கப்பட வேண்டியது அவசியம். இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்படுகின்ற சவால்களை சமாளித்து வருகின்ற வடக்கு, கிழக்கு மீனவர்கள், தென்பகுதி மீனவர்களின் அத்துமீறல்களினால் பாதிக்கப்பட்டும் வருகின்றனர். இந்த நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற நிலையில், "நாட்டின் காலநிலை மற்றும் அமைவிடங்கள் காரணமாக மீனவர்கள் தங்களது பகுதிகளிலிருந்து வேறு இடங்களுக்குச் சென்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது வழமை.

அன்று முதல் இன்று வரை இந்தச் செயற்பாடு களுக்கு குறித்த பகுதிகளில் வாழும் மீனவர்கள் மத்தியில் எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகின்றது. இந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் மீன்பிடி அமைச்சர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இப் பிரச்சினை குறித்து அந்தந்த பகுதிகளிலுள்ள மீனவ சங்கங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் இந்தக் குழு கலந்துரையாடவிருக்கின்றது.

எனினும் எதிர்காலத்தில் இநத நடவடிக்கை கட்டுப்படுத்தபபட வேண்டியது அவசியம். தறபோது அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை கிடைக்கப் பெறும் வரை மீனபிடி அமைச்சரும், திணைக்களமும் இந்த இடம்பெயர் மீனவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்" என்றார். (2-281)

# நீதிமன்ற அபராதங்கள்

## மது போதையில் ஆட்டோவை செலுத்திய நபருக்கு 15ஆயிரம் ரூபா தண்டப்பணம்

(மல்லாவி)

மதுபோதையில் ஆட்டோவை செலுத்தியவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், அவரது வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தையும் ஒரு வருடத்திற்கு இடை நிறுத்தும்படி மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதியினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி இமானுவேல் கயஸ் பல்டானோ முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிபதியினால் மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

## வடிசாராயம் விற்பனை செய்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிப்பு

(மல்லாவி)

சட்டவிரோதமான முறையில், வடிசாராயம் விற்பனை செய்த நபர் ஒருவருக்கு எதிராக வங்காலை பொலிஸாரினால் மன்னார் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணையை அடுத்து சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து மன்னார் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதியினால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (2-15)




தற்போது நிலவி வரும் கடும் வெப்பத்தைத் தணிக்கும் பொருட்டு, வவுனியா நகரின் பிரதான வீதிக்கு தண்ணீர் பவுசர் மூலம் நீர் விசிறப்படுவதைப் படத்தில் காணலாம்.

# அமைச்சர் தயாகமகே கொண்ட குழுவினர் மாங்குளம் விஜயம்



(மல்லாவி)

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக வாணி பத்துறை அமைச்சர் தயாகமகே அவரது அமைச்சு அதிகாரிகள் கொண்ட குழுவினர் உலங்கு வானூர்தி மூலமாக மாங்குளத்திற்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் மு/மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் வந்திறங்கினர்.

அதன் பின்னர் கனகராயன் குளத்திற்கு சென்று மன்னகுளத்திலுள்ள கால்நடை மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு பண்ணையாளர்களின் தொழில் முயற்சியைப் பார்வையிட்டதுடன் அவர்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்து கொண்டனர்.


அதனைத் தொடர்ந்து ஓமந்தை, வவுனியா ஆகிய பகுதிகளிலும் பல்வேறு துறை சார்ந்த முயற்சியாளர்களை சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் உலங்குவானூர்தி ஊடாக கொழும்பு திரும்பினர். (2-15)

# கிளிநொச்சியில் இரண்டாம் நாள் அமர்வு











காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான சாட்சிய விசாரணைகளைப் பதிவு செய்யும் அமர்வுகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நாளை வியாழக்கிழமை வரை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறும். இந்நிலையில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இரண்டாம் நாள் அமர்வில் சாட்சி விசாரணைகளைப் பதிவு செய்வதற்காக கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 362 பேருக்கு அழைபபு விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்வதை படங்களில் காணலாம்.

(படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# தமிழ் மக்களுக்கு எதிராக 242 தடவைகள் இனப்படுகொலைகள் நடந்தேறியுள்ளன

## அதற்கான ஆதாரங்கள் உள்ளன—சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

**தமிழ் மக்களுக்கு எதிராக 242 தடவைகள் இனப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. அதற்கான ஆதாரங்கள் உள்ளன. தற்போது இந்த அரசியலமைப்பை நடைமுறைப் படுத்த முன் காணிகளை சுவீகரிக்கப் பார்க்கிறார்கள். அதற்கெதிராக போராட வேண்டியுள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.**


வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் தாயகம் இல்லத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற தந்தை செல்வா நினைவு தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

1947 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கிய போது ஜின்னா அவர்களால் தனிநாடு கேட்கப்பட்டு பாகிஸ்தான் உதயமாகியது. அதுபோல் இலங்கை சுதந்திரமடைந்த போது தமிழ் மக்களுக்கான தனியாட்சியை பிரித்தானியர் வழங்கியிருக்க வேண்டும். அந்த வரலாற்றுத் தவறைத் தொடர்ந்து எமக்கான சுதந்திரம் கோரி போராடத் தொடங்கினோம். கொடியில் சிங்களவர்களின் அடையாளத்தை சேர்த்துக் கொண்டார்கள். எமது அடையாளத்தை சேர்ப்பதற்காக தமிழ் தலைவர்கள் போராடினார்கள். இறுதியில்சிங்கக்கொடியே பறந்தது. தமிழர்கள் நந்திக் கொடியுடன் பாராளுமன்றம் சென்ற வரலாறு கூட உள்ளது. ஆகை யால் நாம் சுதந்திரம் வேண்டி போராட ஏற்பட்டது. சுதந்திரம் பெற்று 6 மாதத்திற்குள்ளேயே 10 இலட்சம் இந்திய தமிழர்களின் வாக்குரிமையை பறித்து வாழ்வுரிமையை பறித்தார்கள். அதன்பின் இராஜதந்திரம் என்ற நரித்தந்திரம் ஊடாக தமிழர்களை உடைத்தார்கள். நாங்கள் அன்றிருந்து அகிம்சைப் போராட்டத்தை நடத்தினோம். அதன் மூலம் தீர்வு எட்டாத நிலையே ஆயுதப் போராட்டத்திற்கு சென்றது.

எமக்கு எதிரான இனப்படுகொலை என்பது இன்று நாம் ஏற்றுக் கொள்கின்ற வசனமாகவுள்ளது. என்னிடம் ஒரு பதிவுள்ளது. 242 தடவைகள் எமது மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இங்கினியாகல கரும்புத் தொழிற்சாலை படுகொலைதான் முதலாவது இனப்படுகொலை. 1983 இல பாரிய இனப்படுகொலை நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுகிறார்கள். ஒரு ஜூலையில் குட்டிமணி, தங்கத்துரை உட்பட 37 தமிழர்கள் கொல்லப்பட்டனர். காவலாக இருக்க வேண்டிய இராணுவமே இனப்படுகொலையை அரங்கேற்றியது. 1986 இல் ஒதிய மலையில் 36 தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுகிறார்கள். அதன்பின் 1985 இல் வல்லைவெளியில் ஒரு தடவை 70 பேரும், ஒரு தடவை 50 பேரும் கொலை செய்யப்படுகிறார்கள். இந்த வரலாறுகளின் பின்னர் தான் எங்களது ஆயுதப்போராட்டம் வலுப்பெற்றது. இந்த ஆயுதப் போராட்டம் மௌனித்த நிலையில் கூட தமிழ் மக்களுக்கான சுய கௌரவமான தீர்வு கிடைக்கவில்லை.

தொடர்ச்சியாக ஒரு இனத்தை இன்னொரு இனம் அடக்கிக் கொண்டு இருக்க முடியாது. நிச்சயமாக அந்த இனம் விடுதலை பெறும் வரை போராடிக் கொண்டே இருக்கும். உலகத்தில் இது தான் வரலாறு. அடக்கப்பட்ட இனம் தமக்கான போராட்டத்தை தொடங்கிய பின் அடங்கிப் போனதாக வரலாறு எங்குமே இல்லை. தனது இலக்கை அடையும் வரை அந்த இனம் போராடிக் கொண்டே இருக்கும். இனறு நாம் முக்கியமான கட்டத்தில் இருக்கின்றோம். வன்னியில் நிலங்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முல்லையில் இராணுவத்தின் காணி சுவீகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என போராடவுள்ளோம். இந்த அரசியல் யாப்பு நடைமுறைப்படுத்த முன்னதாகவே தமக்கான காணியை சுவீகரிக்க முனைகிறார்கள். இந்த இராணுவத்திறகு எதிராக போராட்டத்தை ஜனநாயக ரீதியில் நடத்த வேண்டியுள்ளது. எமக்கு எதிராக அடைக்குமுறை இருக்கும் வரை அதற்கு எதிரான எமது போராட்டங்களும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கப் போகிறது எனத் தெரிவித்தார். (2-250)

# சுற்றிவளைப்பின்போது ஒரு தொகுதி மதுபானங்கள் பொலிஸாரால் மீட்பு




கிளிநொச்சி மாவட்ட விசேட மது ஒழிப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஒரு தொகுதி மதுபானங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் உள்ள வீடொன்றில் விற்பனை செய்வதற்கு வைக்கப்பட்டிருந்த 25 பியர்ரின்கள், 325 சாராயம் (250 மி.லீ) என்பன மீட்கப்பட்டுள்ளன. சம்பவத்துடன் தொடர்பு பட்டவர் என சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரும், இன்றையதினம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் கைப்பற்றப்பட்ட மதுபானங்களும் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-15)

வன்னி வலம்

# மக்களின் எதிர்ப்பை அடுத்து விசுவமடு தொட்டியடிப் பகுதியில் காணி அளவிடும் பணி கைவிடப்பட்டது



முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தொட்டியடிப் பகுதியில் இராணுவத்திற்கென காணி அளப்பதற்காக வருகை தந்த நில அளவையாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து காணி அளக்கும் பணியை கைவிட்டு திரும்பி சென்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தொட்டியடியில் தனியாருக்கு செந்தமான 1971 ஆம் ஆண்டு படித்த வாலிபர் திட்டத்தினூடாக வழங்கப்பட்ட ஆறு பேருக்கு செந்தமான பதினெட்டு ஏக்கர் காணி இன்றையதினம் இராணுவத்திற்கு வழங்குவதற்கென அளப்பதற்காக நில அளவையாளர்கள் வருகை தந்த போது பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா மற்றும் பொது மக்களின் எதிர்ப்பை அடுத்து காணி அளக்கும் பணியை கைவிட்டு திரும்பி சென்றனர்

இந்த காணிகளில் பயன்தரு மரங்கள், தென்னை மரங்கள் உள்ளிட்ட பல பெறுமதியான மரங்கள் இருப்பதாகவும் தாம் இவற்றைப் பெறமுடியாது மிகவும் கஸ்ரப் படுவதாகவும் இந்த பலனைப் பெறவே இராணுவம் இந்த இடத்தை கைப்பற்ற முயற் சிப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (2)

# மோ.சைக்கிள்-துவிச்சக்கரவண்டி நேருக்குநேர் மோதுண்டு விபத்து

## ஒருவர் படுகாயம்





மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் தலையில் படுகாயம் அடைந்த நிலையில் தர்மபுரம் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.10 மணியளவில் பரந்தன்-முல்லைவீதியில்தர்ம புரம் பொது வைத்தியசாலைக்கு அருகாமையில் நடைபெற்றது.

இதில் தர்மபுரம் முதலாம் யூனிற்றை சேர்ந்த தம்பிராசா ரவி (வயது-21) என்ற இளைஞரே படுகாயம் அடைந்தவராவார். இது தொடர்பில் தெரியவருவதாவது,

பரந்தன் பகுதியில் இருந்து புதுக்குடியிருப்புக்கு சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் தர்மபுரத்தில் இருந்து பரந்தன்நோக்கிசென்றுகொண்டிருந்த துவிச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியே விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த தர்மபுரம் பொலிஸ்நிலைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-309)



# சுதந்திரக் கட்சியைத் துண்டாடும் பாவச்செயலை செய்யாதீர்கள்



## மகிந்தவிடம் மாகாண முதலமைச்சர் கோரிக்கை

**(கொழும்பு)**

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் துண்டாடும் பாவச் செயலை மகிந்த ராஜபக்ஷ தவிர்த்துக் கொள்வதற்கான காலம் இன்னும் கடந்து விடவில்லை என ஷான் விஜயலால் சில்வா தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் கொழும்பு நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போது தென்மாகாண முதலமைச்சர் ஷான் விஜயலால் சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் ஆலோசகர் என்ற வகையில் கட்சியின் ஏனைய உறுப்பினர்களை கட்சிக்குள் தக்க வைத் துக் கொள்வது மகிந்த ராஜபக்ஷவின் கடமையாகும்.

பொதுமக்களின் ஆதரவு இல்லாத சிறு கட்சிகள் சில ஒன்றிணைந்து தமது இருப்புக்காக நடத்தப்படும் மேதினக் கூட்டமே கிருலப்பனையில் நடைபெறவுள்ளது.

அத்துடன் சுதந்திரக் கட்சியை துண்டாடுவதே இக்கூட்டத்தை ஏற்பாடு செய்கின்றவர்களின் நோக்கமாகும்.

அவ்வறிருக்கையில் அதில் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வது அவருக்கு அழகல்ல.

எனவே சுதந்திரக் கட்சியைத் துண்டாடும் செயற்பாட்டில் இருந்து மகிந்த ராஜபக்ஷ தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

அதற்கான காலம் இன்னும் கடந்து விடவில்லை என்றும் விஜயலால் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்திரிகாவின் தீர்வு யோசனையை பிரபாகரனிடம் சமர்ப்பித்தேன்-மனோ

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சமாதான யோசனையை தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் கையளித்ததாக தமிழ் முற்போக்கு கூட்டமைப்பின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தம்மை அழைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் யோசனையை பிரபாகரனிடம் கையளிக்குமாறு கோரினார்.





ஐக்கியதேசியமுன்னணியின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் இந்த கோரிக்கை தம்மிடம் விடுக்கப்பட்டது.ரணில்விக்கிரமசிங்க தமது பாணியில் தீர்வுத் திட்டத்தை முன்னெடுத்தார்.

தாம்தமதுபாணியில்தீர்வை முன்னெடுக்கவுள்ளதாக சந்திரிகாதம்மிடம்கூறியதாக மனோ கணேசன் தெரிவித் துள்ளார்.

இதன் படி தாம் சந்திரிகாவின் யோசனையை பிரபாகரனிடம் கையளித்ததாக குறிப்பிட்ட மனோ கணேசன் இதுவே தாம் பிரபாகரனை சந்தித்த முதல் தடவை என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல் மேலாதிக்கத்தின் காரணமாகவே சமாதானபேச்சுக்கள்தோல்வியடைந்தன என்று மனோ கணேசன் தெரிவித்தார்.(இ-5)

# மக்கள் மீது வரிச்சுமையை திணிப்போர் விரட்டியடிக்கப்பட வேண்டும் - தினேஷ்

(கொழும்பு)

மக்கள் மீது வரிச்சுமையை திணிக்கும் பொருளியல் நிபுணர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.



சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்கூறுகையில்

கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களை கட்சியை விட்டு விரட்டியடிப்பதற்கு முன்னதாக மக்கள் மீது வரிச்சுமையை திணிக்கும் பொருளியல் நிபுணர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டும்.

கிருலப்பனைக் கூட்டத்தில் பங்கேற்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை கட்சியை விட்டு வெளியேற்ற முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாகவும் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

நுகோகொடை இரத்தினபுரி,கண்டி,மாத்தறை கூட்டங்களின் போதும் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.பின்னர் அவ்வாறு எச்சரிக்கை விடுத்த சுசில் பிரேமஜயந்தவும் எங்களுடன் இணைந்து கொண் டார்.


தேர்தலின் பின்னர் ஹைட் மைதானக் கூட்டத் தில் பங்கேற்க வேண்டாம் என அறிவிக்கப்பட்டது. என்ன நடந்தது அவ்வாறு எவரும் விரட்டியடிக்கப்ப டவில்லை.

நான் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் அல்ல.எனினும் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் என்ற ரீதியில் இதனைக் கூறுகின்றேன்.கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்களை சபாநாயகர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

நாம் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்க்கும் தரப்பில் இருக்கின்றோம் என தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். (இ-5)

# முன்னாள் சபாநாயகர் முஹம்மது காலமானார்

முன்னாள் சபாநாயகரும் சிரேஷ்ட முஸ்லிம் அரசியல்வாதியுமான எம். எச். முஹம்மது நேற்று காலை கொழும்பில் காலமானார்.



1925 ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்த அவர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் சமகால அரசியல்வாதியாக மாநகர சபை ஊடாக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்து நாடாளுமன்ற உறுப்பினர் போக்குவரத்து முஸ்லிம் விவகார அமைச்சர் சபாநாயகர் என்று பல்வேறு பதவிகளைஅலங்கரித்துள் ளார்.

1990 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுக்கு எதிரான தேசத்துரோக குற்றச்சாட்டின் போது அவரைப் பாதுகாப்பதில் எம்.எச்.முஹம்மது மற்றும் முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகர் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஆகியோர் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

எம்.எச்.முஹம்மது சபாநாயகர் என்ற வகையில் அரசியல் ரீதியாக பிரேமதாசவுக்கு உதவஅஷ்ரப்சட்டஆலோசனைகள் மூலம் அவருக்கு பக்கபலமாக செய ற்பட்டிருந்தார்.

அதன்பின்னர் 2006ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து சுதந்திரக்கட்சிக்கு தாவிய எம்.எச். முஹம்மது மேற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சராக செயற்பட்டிருந்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையும் இவரின் கீழ் செயற்பட்டிருந்தது. இவர் அக்காலத்தில் முன்னெடுத்த செயற்றிட்டங்களை பின்வந்த காலத்தில் பூர்த்தி செய்த முன் னாள் பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய எம்.எச். முஹம் மதுவுக்கு கிடைக்க வேண்டிய பெருமையைதட்டிப்பறித்துக்கொண்டிருந்தார். (இ-5)

# 3 வாகனங்கள் மோதி விபத்து

## 15 பேர் காயம்

(கொழும்பு)

பாணந்துறை பிரதான வீதியின் மொரட்டுவ பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற வாகன விபத்தில் 15க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து பேருந்து சபைக்கு சொநதமான பேருந்து ஒன்று எதிரே வந்த லொறி ஒன்றுடன் மோதியுள்ளது. குறித்த லொறி மற்றுமொரு அதிசொகுசு பேருந்து ஒன்றுடன் மோதியுள் ளது.

இவ் விபத்தில் காய மடைந்த நபர்கள் பாணந்துறை மற்றும் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-5)

# வெப்பத்தால் கடும் பாதிப்பு

யாழ்.வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் கடும் வெப்ப நிலை காரணமாக விவசாய நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கூடுதலான விவசாய நிலப்பரப்புக்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாமல் காணப்படுகின்றன.

மேலும் விவசாயம் செய்கின்றவர்கள் கூட கடும் வெப்ப நிலை காரணமாக தோட்டக் கிணற்று நீர்கள் வற்றிய நிலையில் காணப்படுவதால் விவசாயத்திற்கு கூட நீரைப் பெற முடியாமல் உள்ளது. இதனால் தற்போது விவசாயச் செய்கை பாதிப்படைகிறது . (இ-134)

# முன்னாள் எம்.பிக்களுக்கு முன்னுரிமை அவசியமில்லை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் ஆட்சியில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பங்களுக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கக்கூடாது என்று கோர ப்பட்டுள்ளது.

காணாமற்போனோரின் பெற்றோர் சங்கத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

19 ஆவது அரசியலமைப்பின் மூலம் நாட்டுக்கு புதிய ஜனநாயக தோற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் இதற்குள் முன்னாள் அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சுக்களை பொறுப்பேற்று ஒழிந்து கொண்டிருப்பதாக பெர்னாண்டோ குற்றம் சாட்டியுள்ளார்.இவர்களது விருப்புக்க ளுக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கக்கூடாது. புதிய அரசாங்கம் பொது மக்களின் நம்பிக்கையை பெற்ற அரசாங்கமாகும்.

எனவே எதிர்க்கட்சியினரின் விருப்புக்களுக்கு அடிபணியத் தேவையில்லை என்று பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (இ-5)

# தியானப்பயிற்சி

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தின் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவினால் எதிர்வரும் 01.05. 2016 ஞாயிற்றுக்கிழமை முதல் 07. 05. 2016 சனிக்கிழமை வரை தினமும் காலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை தியானப்பயிற்சி நடத்தப்படவுள்ளது.

பயிற்சியில் பங்குபற்ற விரும்புவர்கள் முன் கூட்டியே பதிவுகளை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை மீண்டும் கிடைக்க சுவீடன் ஒத்துழைக்கும்

## ஜனாதிபதியிடம் உறுதியளிப்பு

(கொழும்பு)

**ஜி.எஸ்.பி.பிளஸ் (GSP +) வரிச்சலுகையை மீண்டும் இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்க சுவீடன் அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என சுவீடன் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.**

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் சுவீடன் வெளிவிவ கார அமைச்சர் மார்கொட் வோல்ஸ்ரொம் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத் தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார். இச்சந் திப்பின் போதே அவர் இந்த உறுதி மொழியினை ஜனாதிபதிக்கு வழங் கினார்.

இலங்கைக்கும் சுவீடனுக்கும் இடையே இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது தொடர்பாக இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு இலங்கையின் அபி விருத்தி நடவடிக்கைகளுக்கு சுவீ டன் அரசாங்கம் வழங்கியுள்ள ஒத்துழைப்புகளுக்கு ஜனாதிபதி இதன்போது நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் சிறுநீரக நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்குத் தேவை யான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு சுவீடன் அரசு உதவ வேண்டும் என ஜனாதிபதி சுவீடன் வெளி விவகார அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார். அதற்கு இணக்கம் தெரிவித்த சுவீடன் வெளி விவகார அமைச்சர், சுவீடன் நாட்டின் உப்சலா பல்கலைக் கழகமும் கெரோலின்ஸ்கா வைத்திய நிறு வனமும் தற்போது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்துடன் இணைந்து அது தொடர்பான ஒரு விசேட கருத்திட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் தொழில் பயிற்சி வாய்ப்புகளை அதிகரிப்பதற்குத் தேவை யான தொழில் பயிற்சி மத்திய நிலையத்தை அமைப்பது தொடர் பாகவும் குறிப்பாக கல்வி, மீன்பிடி, சுற்றாடல் ஆகிய துறைகளில் அவர்களது தொழில் பயிற்சி வாய்ப்பு களை மேம்படுத்துவதற்கு உதவுமாறும் ஜனாதிபதி இதன போது சுவீடன் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் நிலவும் முதலீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தாம் சுவீடன் முத லீட்டாலர்களுக்கு அழைப்பு விடுப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசாங்கம் அதற்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தா.

நாட்டு மக்களின் ஜனநாயகத் தையும் சுதந்திரத்தையும் உறுதிப் படுத்தி யுத்தத்திற்குப் பின்னர் நிறைவேற்ற வேண்டிய பொறுப் புக்களை உரிய முறையில் நிறை வேற்றுவதற்கு அரசாங்கம் முன்னெடுத்து வரும் நிகழ்ச்சித் திட்டங்களை சுவீடன் அமைச்சர் இதன்போது பாராட்டி னார் என ஜனாதிபதி ஊடகம் விடுத்துள்ள செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ராஜபக்ஷவினருக்கு சிறை செல்வது ஒன்றும் புதிதல்ல

### பசில் பெருமிதம்

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு சிறை செல்வது என்பது புதிய விடயம் இல்லை என்றுமுன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

1936 ஆம் ஆண்டு டி.எம் ராஜபக்ஷ வெலிக்கடை சிறைச் சாலையில் இருந்தவாறே முதன் முதலில் தேர்தலில் போட்டியிட்டார். தேர்தலுக்காக 100 ரூபாயைப் பெற்றுக் கொண்டமைக்காகவே அவர் சிறைக்கு சென்றார்.

அவரது காலக்கட்டத்தில் சிவில் வழக்குகளுக்காகவும் சிறைக்குச் செல்வார். அவ்வாறு சிறையில் இருந்து வந்த பிறகு தான் அவர் தேர்தலில் வெற்றிபெற்றார். அவ்வாறே மகிந்த ராஜபக்ஷ முல்கிரிகல தேர்தலுக்குப் பின்னர் கொலைச்சம்பவம் ஒன்று தொடர்பாக சிறைக்கு சென்றார்.

இறுதியாக நானும், யோசிதவும் சிறை சென்று வந்தோம். எனவே சிறை என்பது எங்களுக்கு பழகிய ஒன்று. அதற்கு நாம் பயப்படமாட்டோம் என பெருமிதம் அடைந்து உரையாற்றிய பசில், மக்கள் இருக்கும் இடத்தில் மகிந்த ராஜபக்ஷவின் பரம்பரை இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## அரிசித் திப்பிலி

**Botanical Name-** Piper longum
**Family-** Piperaceae
**Engl-** Long pepper
**Sinh-** Tippili

திப்பிலியில் அரிசித் திப்பிலி, ஆனைத் திப்பிலி, முறுக்குத் திப்பிலி என வகைகள் உண்டு. அரிசித் திப்பிலியில் மருத்துவக் குணங்கள் அதிகம் உண்டு. பெரும்பாலும் வெப்பமான பகுதிகளில் பரம்பல் அதிகம் காணப்படும். மணமுடைய மெல்லிய தண்டுக் கொடி. மற்றத் தாவரங்களைப் பற்றிப் படரும். இலைகள் நீள்மானவை. இதய வடிவின மஞ்சரி தண்டுடையது. செங்குத்தானது. ஆண்மஞ்சரி மெல்லியது. கனி கள் மஞ்சள் கலந்த செவ்விளநீர் நிறமுடையது. நீள்கோள வடிவினது. சதைப்பற்றுடையவை. மஞ்சரி தண்டில் பதிந்தவை.

யாழ்.மாவட்டத்தில் இனங்காணும் பொருட்டு மூலிகைத் தோட்டங்களில் பயிரிடப்படுகிறது. இதில் பெரும்பாலும் ஓடிக்கொடியாக வளரும் திப்பிலி காட்டுத் திப்பிலியாகும். துண்டங்கள் மூலமும் வேர்க்கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

இதன் உலர் கனியும் வேரும் மருத்துவ குணமிக்கவை.


சுக்கு, மிளகு, திப்பிலி எனும் திரிகடுகம் தங்கள் இல்லத்தில் இருந்தால் அங்கு நோய் இருக்காது.

உலர்ந்த திப்பிலிப்பழத்திலிருந்து நீராவி வடிப்பில் தைலம் வடிக்கப்படுகிறது.

தேனில்ஊறவைத்ததிப்பிலியை வாயில் அடக்கிவர நாளடைவில் குரல் இனிமை பெறும்.

தேவையானளவு திப்பிலிகளை எடுத்து அம்மியில் வைத்து இடித்து இடித்த தூளை ஒரு மெல்லிய துணியில் போட்டு அரித்து எடுத்த தூளை புட்டியில் சேமித்துக் கொண்டு தேவையானபோது 1-2 கிராம் அளவு எடுத்து தேனில் குழைத்து உட்கொள்ள இருமல், வாய்வு நீங்கி நல்ல ஜீரண சக்தி உண்டாகும்.

ஒரேயளவில் சுக்கு (வேர்க்கொம்பு), மிளகு, திப்பிலி மூன்றையும் எடுத்து சுக்கிற்கு மேற்றோலை சீவி (சுரண்டி) உரலில் போட்டு இடித்து அரித்து தூள் செய்து கொள்ளவும். இத்தூளில் 500 மி.கிராம் அளவு எடுத்து



வாயில் போட்டு இளஞ்சூட்டு நீர் அருந்தவும். நாளடைவில் மந்தத்தால் ஏற்பட்ட பேதி நின்று விடும்.

தேவையானளவுதிப்பிலி, நெல்லி வற்றல், நெற்பொரி, சீரகம் ஆகிய நான்கையும் உரலில் போட்டு இடித்து, காரிக்கன் துணியில் அரித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு அதற்கு 4 பங்கு நீர் விட்டு அடுப்பில் வைத்து சிறுதீயாக எரித்து கால்பங்காக வற்றக்காய்ச்சி 30 மில்லி அளவு காலை மாலை சாப்பாட்டின் முன்பு அருந்த பித்தத்தால் ஏற்பட்ட வாந்தி நீங்கும்.

தேவையானளவு திப்பிலியும் சுக்கும் எடுத்து உரலில் போட்டு இடித்து ஒரு மெல்லிய துணியில் தூளைப் போட்டு அரித்து சேகரித்து வைத்துக்கொள்ளவும். 3 கிராம் அளவு தூள் எடுத்து வாயில் போட்டு வெந்நீர் அருந்தவும். தலைவலி, காய்ச்சல், அஜீரணம் ஆகியவை நீங்கி பசியைத் தோற்றுவிக்கும்.

தேவையானளவு திப்பிலியை எடுத்து நன்கு தூள் செய்து வைத்துக்கொண்டு ஒரு கிராம் அளவு தேனுடன் 40 நாட்கள் அருந்த தேமல் மறையும்.

### திப்பிலி சட்னி

திப்பிலி- 50 கிராம், மிளகு- ஒரு தேக்கரண்டி, சீரகம்- அரைத்தேக்கரண்டி, கொத்தமல்லி- ஒரு தேக்கரண்டி, ஓமம் - 1/4 தேக்கரண்டி உப்பு- அரைத்தேக்கரண்டி, பெருங்காயம் சிறிதளவு, புளி- தேவையானளவு

உப்பு, புளியைத் தவிர மேற்குறிப்பிட்ட பொருட்களை ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்து சாதாரணமாக வறுத்துக் கொள்ளவும். பின்பு புளியைச் சுட்டு வைக்கவும். கடைசியாக உப்பையும் வறுத்துக்கொண்டு அனைத்தையும் மிக்சியில் போட்டு சிறிது நீர் விட்டு இளகலாக அரைத்து எடுக்கவும். தேவையானளவு தக்காளியும் சேர்த்துக் கொள்ளலாம். இந்தத் திப்பிலிச் சட்னியை சோற்றுடன் சேர்த்துச் சாப்பிடலாம்.

இதனால் இருமல், அஜீரணம், வயிற்றுப்பொருமல், வாய்வுத் தொல்லை நீங்கி நல்ல பசியுண்டாகும். இவ்வாறான மருத்துவக் குணமிக்க மூலிகைப் பொருட்களை இயற்கையான உணவு முறையில் சேர்த்துக்கொள்வதால் ஆரோக்கியத்தைப் பேணலாம்.

தலைப்பாரத்திற்கு திப்பிலி 50 கிராம், கஸ்தூரி மஞ்சள் 25 கிராம், சந்தனம் 25 கிராம், படிகாரம்/ சீனாக்காரம் 5 கிராம்.

திப்பிலியை மண்சட்டியில் போட்டு 200 மில்லி பசும்பாலை ஊற்றி 6 மணி நேரம் ஊறவைத்து வெண்ணெய்போல் அரைத்துக்கொள்ளவும்.

கஸ்தூரி மஞ்சளை ஒன்றிரண்டாகத் தட்டி மண்சட்டியில் போட்டு தூயநீரை விட்டு ஊறவைத்து வெண்ணெய் போல் அரைத்து படிகாரத்தையும் சேர்த்தரைத்து சந்தனத்தையும் சேர்த்தரைத்து தட்டையாகத் தட்டி மண்சட்டியில் வைத்து உலர்த்தி உலர்ந்தபின்பு பொடித்து வைத்துக்கொள்ளவும். இதில் சிறிதளவு எடுத்து முகர மூக்கடைப்பு, தலைப்பாரம், தலைவலி தீரும்.

மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்றுவலிக்கு

திப்பிலி-100 கிராம், கருஞ்சீரகம்- 50 கிராம், சுக்கு-50 கிராம், மிளகு- 25 கிராம், நச்சீரகம்-25 கிராம்.

எல்லாவற்றையும் இளவறுப்பாக வறுத்து இடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். வலி நேரத்தில் மூன்று நாட்களும் காலை, மதியம், மாலை 2 கிராம் அளவு தேனில் சாப்பாட்டின்பின்பு அருந்த வேண்டும்.

திப்பிலி வேரை பால் விட்டரைத்து பாலில் கலக்கி கொடுக்க வாத நோய்கள், நாவறட்சி தீரும்.

வல்லாரை இலைகளை இடித்து சாறு எடுத்து ஒரு மண்பானையில் ஊற்றி அந்த சாற்றினுள்ள திப்பிலிகளை போட்டு வெயிலில் வைத்து சாறுகள் திப்பிலியில் சுவறியதும் தேனையூற்றி ஊற விடவும். தினமும் ஒரு திப்பிலி எடுத்து வாயில் மென்று தேன் ஒரு தேக்கரண்டி அருந்திவர உடலுக்கு கற்பமாக அமைந்து நோய்கள் வராமல் தடுக்க உதவும்.

திப்பிலி-10, கராம்பு-5, மிளகு-5, மஞ்சள்தூள்-அரை தேக்கரண்டி

600 மில்லி நீரில் மேற் கூறியவற்றைப் போட்டு கொதிக்கவைத்து ஆறியதும் வாய்கொப்பளித்துவர காது, மூக்கு, தொண்டை சார்ந்த நோய்கள் குணமாகும். திப்பிலியை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து உலர்த்தி, பொடித்து, தினமும் 2 கிராம் பொடியை தேனில் குழைத்து சாப்பிட்டுவர நெஞ்செரிச்சல், புளிப் பேப்பம் குணமாகும்.

திப்பிலி, சிற்றரத்தை, அதிமதுரம், கல்லாக்காரம் ஒரேயளவு எடுத்து பொடித்து தினமும் 2 கிராம் காலை, மாலை தேனில் எடுக்க தலைப்பாரம், தும்மல், இருமல் ஆகியன குணமாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கருக்கு ஐ.எஸ். அச்சுறுத்தல்



உலகையே அச்சுறுத்தி வரும் தீவிரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ்'க்கு அமைதிச் செய்தி அனுப்பிய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கருக்கு, பதிலுக்கு அந்த அமைப்பு தலை துண்டிக்கப்பட்ட உடல் ஒன்றின் படத்தை அனுப்பி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ஸ்ரீஸ்ரீ ரவி சங்கர். இவர் அண்மையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்கு அமைதிச் செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதில் பேச்சுவார்த்தை நடத்த தான் தயாராக இருப்பதாகவும், ஐ.எஸ். அமைப்பு தீவிரவாதத்தைக் கைவிட்டு விட்டு அமைதிப் பாதைக்குத் திரும்ப வேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார்.


ஆனால் அதற்குப் பதிலாக தலை துண்டிக்கப்பட்ட உடல் ஒன்றின் படத்தை ரவசங்கருக்கு அனுப்பி வைதுள்ளது ஐ.எஸ். அமைப்பு. இது குறித்து அகர்தலாவில் செய்தியாளர்களிடம் ரவிசங்கர் கூறுகையில், "ஐ.எஸ் அமைப்புடன் அமைதிப் பேச்சு நடத்த நான் முயன்றேன்.

இது தொடர்பாக ஒரு செயதியையும் அனுப்பியிருநதேன். ஆனால் அவர்களோ பதிலுக்கு துண்டிக்கப்பட்ட தலை ஒன்றின் புகைப்படத்தை அனுப்பியுள்ளனர்.

இதனால் எனது முயற்சி முடிந்து விட்டது. அமைதிப் பேச்சுக்கு அவர்கள் தயாராக இல்லை என்று நான் நினைக்கிறேன். எனவே அவர்களை இராணுவ ரீதியாக மட்டுமே அடக்க முடியும் என்று நம்புகிறேன்" என்றார். (இ)

## பாரதச் செய்தி

# ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு ரூ.118.58 கோடி



## கருணாநிதிக்கு ரூ.62.99 கோடிக்கு சொத்து உள்ளதாக வேட்பு மனுவில் தகவல்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தனது சொத்து மதிப்பு ரூ.118.58 என வேட்பு மனுவில் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடங்கி நடைபெற்று வருகிறது. ஆர்.கே. நகரில் போட்டியிடும் முதலமைச்சர் ஜெயலலிதா, திருவாரூர் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் முக்கிய பிரமுகர்கள் தங்கள் தொகுதிகளில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர். வேட்பு மனுக்களுடன் தேர்தல் விதி முறைப்படி தங்கள் சொத்து விபரங்களையும் தாக்கல் செய்தனர்.

அந்தவகையில், முதலமைச்சர் ஜெயலலிதா தனக்கு 118.58 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் இருப்பதாக தெரிவித்துள்ளார். இதில் அசையும் சொத்துக்கள் ரூ.41.63 கோடிக்கும், அசையா சொத்துக்கள் ரூ.76.95 கோடிக்கும் இருப்பதாக கூறியுள்ள அவர், தனது பெயரில் ரூ.2.04 கோடிக்கு வங்கிக் கடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தாக்கல் செய்த வேட்பு மனுவில் தன் பெயரிலும், தன் மனைவியர் பெயரிலும் மொத்தம் ரூ.62.99 கோடி மதிப்பிலான சொத்துக்கள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில், கருணாநிதி, அவரது மனைவியர்களான தயாளு, ராசாத்தி ஆகியோர் பெயர்களில் அசையும் சொத்து ரூ.58.77 கோடிக்கு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனைவியர் பெயர்களில் ரூ.4.21 கோடி மதிப்பில் அசையா சொத்துக்கள் உள்ளன. ராசாத்தி பெயரில் 11.94 கோடி ரூபாய் வங்கிக் கடன் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# ஜெயலலிதா பற்றி அவதூறு பேச்சு; இளங்கோவன் கொடும்பாவி எரிப்பு

ஜெயலலிதாலை அவதூறாகப்பேசிய இளங்கோவனை கண்டித்து அவரது கொடும்பாவி எரிக்கப்பட்டது. திருவாரூர் தெற்கு வீதியில் தி.மு.க. பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. கூட்டத்தில் தி.மு.க. தலைவர் கருணா நிதி, தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள.

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பேசும் போது முதல் அமைச்சரும், அ.தி.மு.க. பொது செயலாளருமான ஜெயலலிதா குறித்து அவதூறாக பேசியதாக கூறப்படுகிறது.

இதனை கேட்ட அ.தி.மு.கவினர் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர். கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

திருவாரூர் புதிய பேருந்து நிலையம் அருகே நேற்று முன்தினம் நள்ளிரவு இளங்கோவன் கொடும்பாவியை



அ.தி.மு.கவினர் தீ வைத்து கொளுத்தினார்கள். அவருக்கு எதிராக கோஷங்களும் எழுப்பினார்கள்.

இதே போல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் கொடும்பாவி எரிப்பு நடைபெற்றது. திருத் துறைப்பூண்டியில் பேருந்து நிலையம் அருகிலும், வலங்கைமானில் கடைத்தெருவிலும், மன்னார்குடி பேருந்து நிலையம் அருகே நகர செயலாளர் மாதவன் தலைமையிலும் இளங்கோவன் கொடும்பாவி எரிக்கப்பட்டது. அவருக்கு எதிராக கோஷங்களும் எழுப்பினார்கள்.

நள்ளிரவு நடைபெற்ற இந்த போராட்டத்தால் திருவாரூர் மாவட்டத்தில் பரபரப்பு உருவானது. (இ-5)

# 'நீதித்துறையைக் காப்பாற்றுங்கள்'

# மோடியிடம் கண்ணீர் மல்கிய நீதிபதி

(சென்னை)

சாதாரண ஏழை மக்களுக்கும் விசாரணைக் கைதிகளாக சிறையில் வாடுபவர்களுக்கும் நீதி வழங்க நீதித்துறையின் சுமையைக் குறைத்து நீதித்துறையை காப்பாற்றுங்கள் என்று இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்கூர் பிரதமர் மோடியிடம் கண்ணீர்மல்க உணர்ச்சிகரமாக வேண்டுகோள் விடுத்தார்.

டில்லியில் நேற்று முன்தினம் ஞாயிறன்று வருடாந்திர முதல்வர்கள் மற்றும் தலைமை நீதிபதிகள் மாநாடு நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நீதிபதி தாகூர் பேசும்போது, நாட்டின் வளர்ச்சிக்காக நான் இந்தத் தருணத்தில் கெஞ்சிக் கேட்பது என்னவென்றால், நீதித்துறையை விமர்சிக்காதீர்கள். ஒட்டுமொத்த சுமையையும் நீதித்துறை மீது சுமத்த வேண்டாம்.

மற்ற நாடுகளை ஒப்பிடும்போது நம் நாட்டு நீதிபதிகள் அதிகமாக, கடினமாக உழைக்கிறார்கள். பல விடயங்களில் உயர்ந்து நிற்கின்றார்கள். நீதிமன்ற வழக்கில் ஈடுபட்டுள்ளவர்கள், சிறையில் வாடும்



ஏழை வழக்காளிகள் ஆகியோருக்கு மட்டுமல்லாது நாட்டின் முன்னேற்றம் கருதி கூறுகின்றேன்.

நீதித்துறையை விமர்சிப்பது மட்டும் போதுமானதல்ல என்பதை நீங்கள் உணருமாறு கேட்டுக் கொள்கின்றேன். நீதித்துறை மீது ஒட்டுமொத்த சுமையையும் ஏற்க முடியாது. நீதிக்கு வேறு எதுவும் உதவாத நிலையில் உணர்ச்சிகர முறையீடு உதவும் என்று நான் உணர்கிறேன். உயர் நீதிமன்றங்களில் 454 நீதிபதி பதவிகள் நிரப்பப்படாமலுள்ளன.

நாட்டில் உள்ள சிறைகள் நிரம்பி வழிகின்றன. அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் மட்டும் 10 இலட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. மக்கள் தொகைக்கேற்ற நீதிபதிகள் விகிதாசாரம் இல்லை.

கடந்த 1987 ஆம் ஆண்டு சட்டக்கமிஷன் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது.

10 இலட்சத்திற்கு 10 நீதிபதிகள் என்ற எண்ணிக்கையை 50 ஆக உயர்த்த வேண்டும் என கூறியுள்ளது. இது தொடர்பாக பேசப்படுகிறது, நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்படுகிறது.

மக்கள் பேசுகின்றார்கள். ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

மத்திய அரசு மாநில அரசு தான் முன்னெடுக்க வேண்டும் என்றும் மாநில அரசுகளோ மத்திய அரசுதான் முன்னெடுக்க வேண்டும் என்றும் மாறி மாறி கூறி வரு கின்றனர். இப்படியான மோதல் போக்கு தொடர நீதிபதிகள் எண்ணிக்கை அப்படியே தொடர்கிறது. பலர் சிறையில் தத்தளிக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 5 கோடி வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

ஆனால் நீதிபதிகளால் 2 கோடி வழக்குகளையே முடித்து வைக்க முடிகிறது. வழக்குகளை முடித்து வைக்கும் எங்களது விகிதம் பற்றி ஒருவரும் பேசுவதில்லை. நீதிபதிகள் தங்கள் திறமையைச் செயலாக்கம் செய்வதற்கும் வரம்புள்ளது.

எங்களால் இயன்றவற்றை சிறப்பாகச் செய்கிறோம். இது குறித்து வாக்குறுதிகள் மேற்கொள்ளப்பட்டன. நாடாளுமன்றத்தில் விவாதித்தனர். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை என்றார்.

இவர் பேசி முடித்து அமர்ந்தவுடன் பிரதமர் மோடி உறுதி அளித்த போது நம் அரசமைப்புச் சட்டத்தின் தூண்களில் ஒன்றான நீதித் துறையை வலுப்படுத்த இதுவே சரியான தருணம். அரசும் நீதி பதிகளும் ஒன்றிணைந்து வலுவான எதிர்காலத்தை வடிவமைக்க வேண்டும் தவிர, 1987 இல் கூறியது என்று கடந்த காலத்தில் உளல்தல் கூடாது என்று தெரிவித்தார். (இ-5)

# சட்டசபை தேர்தலில் போட்டியிடவில்லை

## வைகோ திடீர் அறிவிப்பு

கோவில்பட்டி தொகுதியில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் திடீரென அக் கட்சியை சேர்ந்த விநாயகா ரமேஷ் என்பவர் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

சட்டசபை தேர்தலில் தான் போட்டியிடப்போவதில்லை என்று வைகோ அறிவித்தார்.

மக்கள் நல கூட்டணியில் தே.மு.தி. தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி கூட்டணியில் ம.தி.மு.கவுக்கு கோவில்பட்டி உள்ளிட்ட 29 தொகுதிகள் ஒதுக்கீடுசெய்யப்பட்டன. மதிமுகவின் 29 தொகுதிகளில் தமிழர் முன்னேற்றப்படை தமிழ்ப் புலிகள் கட்சிக்கு தலா ஒரு தொகுதி ஒதுக்கீடு செய்ய வைகோ சம்மதித்தார். இதை யடுத்து ம.தி.மு.க. 27 தொகு திகளில் போட்டியிடுகிறது. இதில் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் வைகோ போட்டியிடுவார் என வேட்பாளர் பட்டியலில் பெயர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து தொண்டர்கள் உற்சாகத்தில் இருந்தனர். இதனிடையே வைகோ வேட்புமனு தாக்கல் செய்ய வுள்ளதாக தகவல் வெளியானது.

அலுவலர் அலுவலகத்திற்கு வேட்புமனு தாக்கல் செய்யும் தோரணையில் தொண்டர் படையோடு வந்த வைகோ தான் வேட்புமனு தாக்கல் செய்ய வுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிடத் தொடங்கின. இந் நிலையில் வைகோ வேட்புமனுவை தாக்கல் செய்யாமல் அப்பகுதி ம.தி.மு.க. நிர்வாகி விநாயகா ரமேஷை வேட்டுபு மனு தாக்கல் செய்ய வைத்து பரபரப்பு ஏற்படுத்தினார். வைகோ கடைசி நேரத்தில் எடுத்த இந்த முடிவு அவரது கட்சியினரையே அதிர்ச்சியடைய வைத்தது.

இதன் பிறகு தொண்டர்கள் மத்தியில் திறந்த வானில் இருந்தபடி வைகோ இதற்கான காரணம் குறித்து தெரிவித்தார்.

தன்னை தோற்கடிப்பதற்காக தி.மு.கவை தற்போது ஆட்டுவித்து வருபவர் தேவர்–நாயக்கர் சமூக மக்களிடையே ஜாதிக் கலவரத்தை தூண்ட முயலுவதாகவும் அதற்கான அறிகுறிகள் வெளியாக தொடங்கியதாகவும் எனவே கோவில்பட்டி தொகுதியில் போட்டியிடுவதில்லை என முடிவு செய்ததாகவும் வைகோ அறிவித்தார். மேலும் இந்த சட்டசபை தேர்தலில் தான் போட்டியிட போவதில்லை எனவும் கூட்டணி வெற்றிக்காக உழைக்கபோவதாகவும் வைகோ அறிவத்தார். (இ-5)

## பிறந்தநாள் விழாவில்

# இனிப்பு உண்ட 25 பேர் மரணம்

## பாகிஸ்தானில் துயரச் சம்பவம்

(லாகூர்)

**பாகிஸ்தானில் பிறந்தநாள் விழாவில் இனிப்பு சாப்பிட்ட 25 பேர் பலியான சோகச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கரார் லால் இசான் பகுதியை சேர்ந்தவர் உமர் ஹயாத்.

இவர் தனது பேரனின் பிறந்த நாள் விழாவை மிக விமரிசையாக கொண்டாடினார். அதற்காக ஒரு கடையில் இனிப்பு பண்டங்கள் வாங்கி இருந்தார். அவற்றை விழாவில் பங்கேற்றவர்களுக்கும், தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் வழங்கினார்.

அதை சாப்பிட்டதும் பலருக்கு வாந்தி-மயக்கம் ஏற்பட்டது. அதை தொடர்ந்து 10 பேர் அங்கு பரிதாபமாக இறந்தனர். மேலும், பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி 15 பேர் இறந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

இவர்கள் தவிர 5 பேர் பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கடையில் இருந்து வாங்கி வரப்பட்ட இனிப்பு பண்டங்களில் விசம் கலக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

பிறந்த நாள் விழா அன்று இனிப்பு சாப்பிட்ட குழந்தையின் தந்தை மற்றும் அவனது 7 மாமன்மார்களும் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## மகிழ்ச்சி குறித்து போப் விளக்கம்

மகிழ்ச்சி என்பது தொலைபேசியில் தரவிறக்கம் செய்யும் ஆப் போன்றதல்ல என ரோம் நகரில் இளைஞர்களுக்கு சொற்பொழிவாற்றிய போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

ரோம் நகரில் நடைபெற்ற இளைஞர்களுக்கான கூட்டத்தில் போப் பிரான்சிஸ் சொற்பொழிவாற்றினார்.

அப்போது அவர், கடவுள் இல்லாத வாழ்க்கை என்பது சிக்னல் இல்லாத செல்போனை போன்றது. எனவே பாடசாலையோ, குடும்பமோ எங்கே சென்றாலும் இணைப்பு இருக்கும் இடத்துக்கு செல்லுங்கள்.

சுதந்திரம் என்பது நாம் நினைத்ததை செய்வதல்ல. அது நமக்கு கிடைத்த பரிசு, நாம் தான் சரியானதை தேர்ந்தெடுக்க வேண்டும்.

உங்கள் மகிழ்ச்சிக்கு விலை என்பதே இல்லை. அதை வாங்கவோ விற்கவோ முடியாது. தொலைபேசியில் அப்ஸ் (Application) தரவிறக்கம் செய்வது போல் அல்ல.

என்ன தான் புதிய பதிப்பாக இருந்தாலும் கூட நீங்கள் அன்பில் வளருவதற்கு அது உதவாது என்று பேசினார். சுமார் 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் இதில் கலந்து கொண்டனர். (இ-5)

## இந்துக் கோவிலில் சிலைகள் உடைப்பு; ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது குற்றச்சாட்டு



மலேசியாவில் இந்து கோவில் சிலைகள் உடைக்கப்பட்ட விவகாரத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மலேசியாவின் பேராக் மாகாண தலைநகர் ஈப்போவில் கிரீன்டவுன் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முனஸ்வரர் அம்மன் கோயிலில் கடந்த ஞாயிற்றுககிழமை மாலை 5 மணிக்கு மேல் மரமநபர் ஒருவர் உள்ளே புகுந்து அங்கிருந்த சிலைகளை உடைத்து உள்ளார். நவக்கிரகசிலைகள் உடைக்கப்பட்டுள்ளது. பூட்டியிருந்த கோவிலின நுழைவுகதவை உடைத்துக்கொணடு மர்மநபர் உள்ளே வந்துள்ளார். காரில் இருந்து வெட்டுக்கத்தி மற்றும் இரும்பு கம்பியுடன் கோவிலுக்குள் நுழைந்து சிலைகளை உடைத்துள்ளார். பின்னர் அவர் காரை எடுத்துக் கொண்டு வேகமாக சென்று பேருந்து நிலையம் மீது மோதச் செய்துவிட்டு தப்பி விட்டார்.

இச்சம்பவம் மலேசிய தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக கோவில் நிர்வாகம் பொலிஸில் புகார் கொடுத்தது. இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரித்து வரும் பொலிஸார் தஞ்சோங்ரம் புத்தான் என்பவரை கைது செய்து உள்ளனர்.

இவ்விவகாரத்தில் பொதுமக்கள் அமைதி காக்க வேண்டும் என்று பொலிஸ் கேட்டுக் கொண்டு உள்ளது. கைது செய்யப்பட்ட நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர், அவர் மனநல சிகிச்சை மையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்து கோவிலில் சிலைகள் உடைக்கப்பட்டது அந்நாட்டில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கோவிலில் சிலை உடைக்கப்பட்டது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் செய்திகள்வெளியாகியதைதொடர்ந்து அப்பகுதியில் குவிந்த மக்கள் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மலேசிய இந்துக்களின் கூட்டமைப்பான ஹிண்ட்ராப் தலைவர் வேதமூர்த்தி பேசுகையில், கோவில சிலைகளை உடைத்த நபர் செலுத்தி வந்த காரில் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் கொடியும் பறக்கவிடப்பட்டிருந்ததாகத் தெரி கிறது. இது தனிநபரின் செயலாகத் தெரியவில்லை. ஐ.எஸ். அமைப் பின் சதித்திட்டமாகத் தெரிகிறது. இந்தச் சம்பவத்தில் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி உண் மையை கண்டறிய வேண்டும் என்று கூறியுள்ளார். (இ-5)

## கார்க் குண்டுத் தாக்குதலால் சிரியாவில் 15பேர் உயிரிழப்பு



சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸின் தெற்கில் உள்ள சய்யிடா ஜெயினப் என்ற பகுதியில் ஷியா பிரிவு வழிபாட்டுத்தலம் அருகே நேற்று முன்தினம் கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தக் கார் வெடிகுண்டுத் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். 20 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.


ஷியா பிரிவு வழிபாட்டு தலத்திற்கு செல்வதற்கான வழி அமைந்துள்ள அல்திய பியாஹ் என்ற பகுதியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடியை குறி வைத்து தாக்குதல் நடத்தியதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

சோதனைச் சாவடியில் நாங்கள் அந்தக் காரினை நிறுத்தினோம். காரினை சோதனை செய்வதற்கு தொடங்கியவுடன் அவர்கள் காரை வெடிக்கச் செய்தனர். இதில் எங்களுடைய அதிகாரிகள் கொல்லப்பட்டனர் என்றார்.

வழிபாட்டுத்தலத்தை சுற்றியுள்ள பகுதிகளில் இந்த ஆண்டில் மட்டும் ஐ.எஸ். தீவிரவாதிகள் பலமுறை தாக்குதல்களை நடத்தி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## உலகை சுற்றும் சூரியசக்தி விமானம்



சூரிய சக்தியில் இயங்கும் சோலார் இம்பல்ஸ் (solar impulse) விமானம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் தரையிறங்கியுள்ளது. பசுபிக் கடல் பகுதியில் மூன்று நாட்கள் பயணித்த பின்னர் இந்த விமானம் அங்கு தரையிறங்கியது. ஹவாயிலிருந்து புறப்பட்ட சோலார் இம்பல்ஸ், சான்பிரான்ஸிஸ் கோவில் உள்ள கோல்டன் கேட் பாலத்திற்கு மேலாக பறந்தது.

இந்த விமானத்தின் மெல்லிய மேற்பரப்பில் பொருத்தப்பட்டுள்ள கலங்கள் சூரிய ஒளி மூலம் மின் சக்தியை உற்பத்தி செய்கின்றன. போயிங் 747 விமானத்தின் இறக்கையை விட பெரிய இறக்கையை கொண்ட இந்த விமானத்தின் எடை, அந்த போயிங் விமானத்தின் எடையின் நூறில் ஒரு மடங்கிலும் குறைவானது.

உலகை வலம் வரும் முயற்சியை அபுதாபியில் ஆரம்பித்த இந்த சூரிய சக்தி விமானம், தற்போது அதன் பயணத்தின் ஒன்பதாவது கட்டத்திலுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதமே சோலார்இம்பல்ஸின்பயணம்தொடங்கியிருந்தாலும், அதன் மின்கலங்கள் அதிகம் வெப்பமடைந்ததை அடுத்து, திருத்த வேலைகளுக்காக நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருந்தது. (இ-5)

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நியமனம்

## சுகாதார அமைச்சர் தகவல்

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிலவிய வைத்தியர் வெற்றிடங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மாகாண சுகாதார அமைச்சர்களின் மாநாடு நேற்று முன்தினம் நாரஹேன்பிட்டியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர், இலங்கையில் தற்போதைக்கு 3800 வைத்தியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றது.

இதில் ஆயுரத்துக்கு மேற்பட்ட வெற்றிடங்களுக்கான வைத்தியர் நியமனங்கள் கடந்த நாட்களில் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய வெற்றிடங்களுக்கும் வைத்தியர்கள் மிக விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசாங்க வைத்தியசாலைகளுக்கான வைத்தியர்கள் பகிர்ந்தளிப்பில் அரச வைத்தியர்களின் சங்கம் நியாயமான முறையில் நடந்து கொள்ளவில்லை என்றும் அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-26.04.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.46 | 147.27 |
| பிரிட்டன் | பவுண்ட் | 207.59 | 214.96 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 160.89 | 167.33 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.42 | 152.52 |
| கனடா | டொலர் | 112.68 | 117.38 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 109.84 | 114.97 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.72 | 109.76 |
| இந்தியா | ரூபா | 2.1578 | ------- |
| சீனா | யுவான் | 22.1661 | ------- |

மத்திய கிழக்கு நாடு


| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6672 |
| குவைத் | டினார் | 476.9955 |
| ஓமான் | ரியால் | 373.7420 |
| கட்டார் | ரியால் | 39.5178 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3703 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1767 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 70 | 40 | 50 | 70 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 65 | 80 | 60 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 50 | 100 | 70 | 100 | 80 |
| தக்காளி | 100 | 100 | 90 | 100 | 100 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 45 | 50 | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 60 | 80 | 80 | 80 | 60 |
| கரட் | 100 | 100 | 90 | 80-200 | 90 | 120 | 80 |
| பூசணி | 30 | 30 | 15 | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 80 | 30 | 30 | 60 | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 35 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 70 | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 80 | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 60 | 80 | 70 | 80 | 80 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 100 | 140 | 160 | 140 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 80 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 60 | 100 | 30 | 70 | 100 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 400 | 250 | 300 | 300 | 300 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 140 | 120 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 30 | 50 | — | 40 | 60 |
| கீரை-1பிடி | 20 | 30 | 20 | 40 | 30 | 30 | 400 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 400 | 200 | 600 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 10-20 | 50 | 40 | 30-35 | 140 |
| இராசவள்ளி | 130 | 300 | 100 | 160 | 140 | 160 | — |
| வெங்காயப்பூ | — | 200 | — | — | — | — | — |
| முள்ளாங்கி | 60 | 100 | 40 | 50 | 40 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 20 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 30 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | — | — | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலி தளபதி மாத்தையாவுக்கு மரண தண்டனை 166



தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன் உங்கள் கடைசி ஆசை என்ன? என்று கேட்கப்பட்டது. என் மனைவியையும் குழந்தையையும் பார்க்க வேண்டும் என்று மாத்தையா கூறினார்.

**மனைவி பதில்**

மாத்தையாவின் மனைவி கல்பனாவும் விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்தவர். விதவையான அவரை மாத்தையா மறுமணம் செய்திருந்தார்.

மாத்தையா மீது விசாரணை நடத்தப்பட்டதையும் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதையும் கல்பனாவுக்கு விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். உங்களையும் குழந்தையையும் பார்க்க வேண்டும் என்று மாத்தையா தனது கடைசி விருப்பமாகத் தெரிவித்திருக்கிறார். நீங்கள் எப்போது வருகிறீர்கள்? என்று கேட்டனர்.

அதற்கு மாத்தையாவின் மனைவி கல்பனா, குழந்தை அவருக்குரியது. இப்போதே அழைத்துச் சென்று காட்டுங்கள். ஆனால் நான் வருவதாக இல்லை. ஏனென்றால் நான் திருமணம் செய்தது ஒரு விடுதலைப்புலியை, ஒரு துரோகியை அல்ல என்று பதில் அளித்தார்.

மாத்தையா மனைவி கூறிய பதிலைக்கேட்டு விடுதலைப் புலிகள் மெய்சிலிர்த்துப் போனார்கள். குழந்தையை அழைத்துச் சென்று மாத்தையாவிடம் காட்டினார்கள்.

மனைவி தன்னைப் பார்க்க வரவில்லை என்பதை அறிந்த மாத்தையா மிகவும் துயரம் அடைந்தார். குழந்தை அழைத்துச் செல்லப்பட்ட பிறகு, மாத்தையாவைப் புலிகள் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனையை நிறைவேற்றினர்.

இவ்வாறு புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

**புஷ்பராஜா தகவல்**

தமிழீழ விடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவரான சி.புஷ்பராஜா ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். அதில் மாத்தையா பற்றி அவர் கூறியிருப்பதாவது,

மாத்தையா வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். படித்து விட்டு வெளிநாடு போக இருந்த வேளையில் பிரபாகரனின் தொடர்பு ஏற்பட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். தனது திறமையால், செயற்பாட்டால் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுக்கு அடுத்தபடியாக உயர்ந்தார்.

நாளடைவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குள் பிரபாகரன் குழு, மாத்தையா குழு என இரு குழுக்கள் உருவாகின. காலப்போக்கில் இருவருக்குமிடையேயான முரண்பாடுகள் பூதாகரமாயின. விடுதலைப் புலிகள் பிளபட்டிருந்த வேளையில் பிரபாகரன் மீது காரசாரமான குற்றச்சாட்டுகளை மாத்தையா கூறினார்.

**சுற்றிவளைப்பு**

1993 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி மாத்தையாவின் முகாமை பிரபாகரனால் அனுப்பி வைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்தனர். மாத்தையாவையும் அவருடன் இருந்த முக்கிய நபர்களையும் கைது செய்தனர். மாத்தையாவின் பாதுகாவலர்களும் அவர் சார்பான விடுதலைப் புலிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மாத்தையா, விடுத்தலைப்புலிகளின் புலனாய்வுப்பிரிவால் கடுமையாக விசாரிக்கப்பட்டார். இந்திய உளவுப்படையுடன் சேர்ந்து பிரபாகரனைக் கொல்ல வும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கைப்பற்றவும் திட்டமிட்டார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

நீண்ட கால விசாரணைக்குப் பிறகு மாத்தையாவும் அவரைச் சேர்ந்தவர்களும் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

**மனைவியின் வேண்டுகோள்**

மாத்தையாவின் மனைவி கல்பனா, விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளி. மாத்தையா- கல்பனா தம்பதியருக்கு 2 பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் உண்டு. பிரபாகரனை கல்பனா சந்தித்து தன் கணவரை விடுதலை செய்யும்படி மன்றாடினார். தன் கணவரைப் பிரபாகரன் விடுதலை செய்வார் என்றே கல்பனா நம்பினார்.

இந்த சமயத்தில் பிரபாகரன் சென்று மாத்தையாவைச் சந்தித்தார். என்னைப் போர்களத்துக்கு அனுப்புங்கள். அங்கு இறந்து விடுகிறேன். துரோகி என்ற பட்டத்துடன் சாக விரும்பவில்லை என்று பிரபாகரனிடம் மாத்தையா கேட்டுக் கொண்டார்.

மாத்தையா விடயத்தில் எந்தவித கருணையும் காட்ட பிரபாகரன் மறுத்துவிட்டார்.

சிறையில் ஒரு முறை மாத்தையா தூக்குப்போட்டுத் தற்கொலை செய்ய முயன்றார். அன்று முதல்வெறும் கால்சட்டையுடன் இருக்கும்படி அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார்.



(தொடரும்)

## ஏற்றுமதிப் பொருட்களின் கொடுப்பனவுகளை

# வெளிநாடுகளில் சேமிக்கத்தடை

### நிதியமைச்சர் கட்டுப்பாடு

(கொழும்பு)

**இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான கொடுப்பனவுகளை வெளிநாடுகளில் நிறுத்தி வைக்கும் செயற்பாடுகளுக்கு நிதியமைச்சு தடை விதித்துள்ளது. இலங்கையின் அந்நியச் செலாவணியை அதிகரித்து பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேற்கொண்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இனிவரும் காலங்களில் ஏற்றுமதிப் பொருட்களுக்கான கொடுப்பனவுகளை வெளிநாடுகளில் சேமிக்கவோ நிறுத்தி வைக்கவோ வங்கிகளில் வைப்பிலிடவோ முடியாது.

அவை 90 நாட்களுக்குள் இலங்கைக்கு கொண்டு வரப்படவேண்டும்.

அதேபோன்று இதற்கு முன்னர் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் கொடுப்பனவு நிதிகள் இதுவரை இலங்கைக்கு எடுத்து வரப்படவில்லையாயின் அதனையும் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக இலங்கைக்குள் கொணடுவர வேண்டும்.

அதேநேரம் இதுவரை காலமும் இலங்கையரின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளில் நிதி மற்றும் சேமிப்புக்களை கொணடிருப்பதற்கு அளிக்கப்பட்டிருந்த தடை நீக்கம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஆனால் வர்த்தக வங்கிகளின் ஊடான கொடுப்பனவுகளுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அந்நியச் செலாவணியில் அதிகரிப்பு ஏற்பட்டு இலங்கையின் நிதி நெருக்கடியிலிருந்து விடுபட முடியும் என்று நிதியமைச்சு எதிர்பார்ப்பதாகவும் குறித்த வர்த்தமானி அறிவித்தல் தெரிவித்துள்ளது. (இ-5)

# இரண்டு வருடங்களுக்குள் 60 பல்கலைக்கழக விடுதிகள்

### உயர்கல்வி அமைச்சர் தகவல்



இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் விடுதிப் பற்றாக்குறை பிரச்சினை எதிர்வரும் 2018 ஆம் ஆண்டுக்குள் தீர்த்து வைக்கப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அழகியற் கலைப்பீடம் மற்றும் சுதேச வைத்தியத் துறை பீடங்களுக்கான இரண்டு புதிய விடுதிகள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் கிரியெல்ல இதனைத் தெரிவித்துள்ளார். வைபவத்தின்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் கிரியெல்ல. எமது அரசாங்கம் பாடசாலை கல்வி, பல்கலைக்கழக கல்வி என்றில்லாது ஒட்டுமொத்த கல்வித்துறைக்கும் பாரிய நிதி ஒன்றை ஒதுக்கியுள்ளது.

அதிலும் குறிப்பாக நாங்கள் உயர்கல்வித் துறைமீது கூடுதல் கரிசனை கொண்டுள்ளோம்.

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியாகும் மாணவர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் தொழில் ஆற்றல்களை கொண்டவர்களாக வெளியாக வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் கரிசனையுடன் செயற்படுகின்றார்.

எமது அரசாங்கத்தில் மாணவர்களுக்குப் போதுமான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அரசியல் தலையீடின்றி பல்கலைக்கழக நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்லும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவ விடுதிகளின் பற்றாக்குறை குறித்தும் நாங்கள் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம்.

அதனை நிவர்த்தி செய்யும் வகையில் துரிதகதியில் 60 விடுதிக் கட்டடங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

இதன்மூலம் 2018 ஆம் ஆண்டுக்குள் அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் விடுதிப் பற்றாக்குறைப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்றும் அமைச்சர் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# முதலீடுகளை கொண்டுவரக்கூடிய அதிக யோசனைகள் ஜூனில் சமர்ப்பிக்கப்படும்

### மங்கள சமரவீர தெரிவிப்பு



இலங்கைக்கு அதிக முதலீடுகளை வரவழைக்கும் நோக்குடன் எதிர்வரும் ஜூனில் பல யோசனைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளன.

வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இதனை தெரிவித்துள்ளார்.

சுவீடனின் வெளியுறவுத்துறை அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் இநதத தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூனில் முன்வைக்கப்படவுள்ள யோசனைகள் முற்றிலும் இலங்கைக்கு முதலீடுகளை கொண்டுவரக்கூடிய யோசனைகளாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவற்றின் மூலம் நலிவடைந்து போயுள்ள பொருளாதாரத்தை சீர்செய்ய முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### எப்போது மழுப்ப வேண்டும்?

சட்டம் காரணமாகவோ நமக்கிருக்கும் பொறுப்புணர்வு அல்லது கடமையுணர்வு காரணமாகவோ நாம் பதில் சொல்ல வேண்டி வந்தால் நேரடியான பதிலையே கூற வேண்டும்.

இத்தகைய சந்தர்ப்பங்கள் தவிர,மழுப்ப வேண்டிய சந்தர்ப்பங்கள் என்று சில உண்டு.

நம்மை ஒரு விடயம் பாதிக்கும் என்கிற சூழ்நிலை உருவானாலோ நாம் வெட்ட வெளிச்சமாக்கும் ஒரு விடயம் பிறரைப் பாதிக்கும் என்கிற ஒரு சூழ்நிலை உருவானாலோ மழுப்பல் தான் சரிப்பட்டுவரும்.

உங்கள் தோழியைப் பற்றி அல்லது தோழனைப் பற்றிச் சிலர் விசாரிக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவளோ அல்லது அவரோ பல வழியாலும் சரியில்லை என்று வைத்துக் கொள்வோம்.நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்களோ அதை வைத்துத் தான் அவர்களுக்கு ஒரு திருமணமே அமையப் போகிறது என்ற ஒரு சூழ் நிலையில்...

அவர்களைப் பற்றி மிக உயர்வாகவும் மனசாட்சிக்கு விரோத மாகவும் சொல்லி ,நல்ல காரியம் நம்மால் தடைப்படுவானேன் என்ற எண்ணத்தில் செயற்படுவீர்களா?

அல்லது-உண்மையைச் சொல்லி அந்தத் திருமணம் நடக்காத படி செய்வீர்களா?

முதல் செயலைச் செய்தால் உங்கள் தோழன் அல்லது தோழிக்கு வாழ்க்கைத் துணையாக அமையப் போகும் ஒருவருத்கு நரக வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கும் தவற்றைச் செய்தவர் ஆகிறீர்கள்.

இரண்டாவது செயலைச் செய்தால் அது உங்கள் தோழிக்கு அல்லது தோழருக்கு தெரிய வந்தால்-உங்களிடையே உள்ள நட்பு என்ன ஆகும்?

ஆக இரண்டையும் செய்யாமல் மழுப்புவதே சிறந்த வழி என்ன சொல்லி மழுப்புவீர்களோ, அது உங்கள் பாடு!ஆனால் உங்களை விசாரிக்க வந்தவர்,இவர் ஒன்றும் பிடி கொடுக்காமல் பேசுகிறாரே என்றும் ,நீங்கள் பேசியதை அறிய நேர்ந்தால் அப்படி ஒன்றும் நம்மைப் பற்றித் தவறாகச் சொல்லி விடவில்லை என்றும் உங்கள் மழுப்பல் அமைய வேண்டும் என்பது மட்டும் மிக முக்கியம்.

ஒரு விடயத்தில் தெளிவான முடிவுக்கு வர முடியாத போதும் மழுப்ப வேண்டியது தான்.

சற்றும் எதிர்பாராத கேள்விகளையோ, கடனுதவிகளையோ எதிராளி கேட்கும் போதும் மழுப்பல் தான்.

மற்றவர்களோடு நல்லுறவு வைத்துக் கொள்ளவும் நம்மை நாம் பல வழியாலும் பாதுகாத்துக் கொள்ளவும் மழுப்பல் உத்தி ஓரளவு அவசியமே.


அசட்டுப் புன்னகை கூட ஒரு வகை மழுப்பல் தான்.பதில் சொல்ல விருப்பமில்லை என்பது இதன் பொருள்.

மேற்கூறிய வழி முறைகளில் நம்பிக்கை இல்லாமல் எனக்கு இந்த வேலையெல்லாம் பிடிக்காது. எதையும் நேருக்கு நேராகச் சொல்லி விடுவேன் என்று பெருமையுணர்வுடன் பேசிக் கொண்டும் அதைச் செய்து கொண்டும் இருப்பவர்களுக்கு விரோதிகளே மிஞ்சுவார்கள்! வெறுத்து ஒதுக்குபவர்களே எஞ்சுவார்கள்!

லேனா தமிழ்வாணன்




# நன்றியுள்ள நண்பன்



**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று.**

**ஒருவர் நமக்கு செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல.**

**அவர் செய்த தீமையை அக்கணமே மறந்து விடுவது நல்லது.**

மருத நாட்டு இளவரசன் வீரசிம்மனும், ஏழைக குடும்பத்தில் பிறந்த கலைதாசனும் ஒரே குருகுலத்தில் பயின்ற போது இணை பிரியா நண்பர்களாக இருந்தனர்.

வீரசிம்மன் மன்னனாக முடிசூடியதும், பழைப நட்பை மறக்காமல் கவிதைகள் புனைவதில் வல்லவனான கலைதாசனை தனது ஆஸ்தான கவிஞனாக்கினான். அன்று முதல ஏழ்மை நிலையிலிருந்து விடுபட்டு வசதியான வாழ்க்கையை கலைதாசன் வாழ்ந்தான்.

அரசவையில் இடம் கிடைத்தாலும், கடவுள் அளித்த கவிதை எழுதும் திறமையை கடவுளுக்காக மட்டுமே பயன்படுத்துவதில் உறுதியாக இருந்த கலைதாசன், கடவுள் துதிப் பாடல்கள் எழுதுவதில் மட்டுமே ஆர்வம் காட்டினான்.

கலைதாசன் மீது பொறாமை கொண்டிருந்த மற்ற அரசவைக் கவிஞர்கள் இதனை சாதகமாக்கிக் கொண்டு, அவனைப் பற்றி மன்னனிடம் தவறாக சொல்லிக் கொடுத்தனர். அதனால் வீரசிம்மன் மனம் சஞ்சலமடைந்தது. ஒருநாள் கலைதாசனை அழைத்த வீரசிம்மன், தன்னைப் பற்றி புகழ்ந்து கவிதை பாடுமாறு கேட்டான். ஆனால் தான் கடவுளைத் தவிர வேறு யாரையும் புகழ்ந்து பாடுவதில்லை என கலைதாசன் மறுத்து விட்டான். ஏற்கனவே சஞ்சலத்திலருந்த வீரசிம்மன் இப்போது கடும் கோபம் கொண்டு கலைதாசனை பதவியிலிருந்து நீக்கியதோடு, அவனை நாடு கடத்தி காட்டில் வாழும்படி உத்தரவிட்டான்.

சில மாதங்கள் கழித்து காட்டுக்கு வேட்டையாடச் சென்ற வீரசிம்மன், பாதை மாறிச் சென்று வழி தெரியாமல் காட்டுக்குள் திண்டாடினான். அப்போது சூறைக் காற்று வீசியதால் மரம் ஒன்று முறிந்து அவன் மீது சாய்ந்தது. பலத்த காயங்களோடு மரத்திறன் அடியில் தவித்துக்கொண்டிருந்தான். காட்டில் வசித்து வந்த கலைதாசன் அவ்வழியே செல்லும் போது வீரசிம்மனைப் பார்த்து அவனைக் காப்பாற்றி தன் குடிசைக்கு தூக்கிச் சென்று சிகிச்சை அளித்தான்.

கலைதாசனின் பராமரிப்பால் உடல் நலம் தேறிய வீரசிம்மன் கண்ணீர் மல்க, "நண்பா, உனக்கு தீங்கிழைத்த போதும் நீ என் மேல் இவ்வளவு பரிவு காட்டுகிறாயே.. என் மீது கோபம் இல்லையா?" எனக் கேட்டான்.

"அரசே, ஏழையாய் இருந்த என்னை ஆஸ்தானக் கவிஞனாக்கி நல்வாழ்வு அளித்தீர்கள். அரசருடைய கட்டளையை ஏற்காதவன் தண்டனைக்குரியவனாவான. அதனடிப்படையில் நீங்கள் செய்தது தீங்கல்ல. ஆகவேதான் நீங்கள அளித்த தண்டனையை உடனே மறந்துவிட்டேன். நீங்கள் எனக்கு செய்த நன்மையை மட்டுமே நினைவில் வைததுள்ளேன்" என கலைதாசன் பதிலளித்தான்.

இதைக் கேட்டு தன் செயலுக்காக வருந்திய வீரசிம்மன், "நண்பா! உன்னுடைய தண்டனையை இந்த வினா டியே ரத்து செய்கிறேன். உடனே அரண்மனைக்கு திரும்பு" எனக் கூறி கலை தாசனை கட்டியணைத்துக் கொண்டான்.




- 1124 - முதலாம் டேவிட் ஸ்கொட்லாந்து மன்னனானான்.
- 1296 - இங்கிலாந்தின் முதலாம் எட்வேர்ட் மன்னன் டன்பார் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் ஸ்கொட்லாந்தரைத் தோற்கடித்தான்.
- 1521 - நாடுகாண் பயணி பேர்டினண்ட் மகலன் பிலிப்பீன்சில் பழங்குடியினரால் கொல்லப்பட்டார்.
- 1522 - மிலான் நகரைக் கைப்பற்ற இடம்பெற்ற போரில் பிரெஞ்சு மற்றும் சுவிட்சர்லாந்துப் படையினரை ஸ்பானியப் படையினர் தோற்கடித்தனர்.
- 1565 - பிலிப்பீன்சின் முதலாவது ஸ்பானியக் குடியேற்ற நாடு சேபு (Cebu) அமைக்கப் பட்டது.
- 1667 - பார்வையற்ற ஜோன் மில்ட்டன் தான் எழுதிய பரடைஸ் லொஸ்ட் என்ற காவியத்தின் காப்புரிமையை +10க்கு விற்றார்.
- 1813 - 1812 போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் ஒண்டாரியோவின் தலைநகர் யோர்க்கை கைப்பற்றினர்.
- 1840 - லண்டனில் புதிய வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் அடிக்கல் நாட்டப்பட்டது.
- 1904 - அவுஸ்திரேலியாவின் முதலாவது தேசிய அரசை அவுஸ்திரேலியத் தொழிற் கட்சி அமைத்தது.
- 1909 - துருக்கியின் சுல்த்தான் இரண்டாம் அப்துல் ஹமீட் பதவியிலிருந்து அகற்றப்பட்டு அவனது சகோதரன் ஐந்தாம் மெஹ்மெட் ஆட்சிக்கு வந்தான்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் கிரேக்கத் தலைநகர் ஏத்தன்ஸ் நகரை அடைந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: கடைசி நாசி ஜேர்மன் படைகள் பின்லாந்தில் இருந்து வெளியேறினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நாசிக் கட்சியின் அதிகார பூர்வ பத்திரிகையான வோல்கிஷெர் பியோபாக்டர் நிறுத்தப்பட்டது.
- 1959 - மக்கள் சீனக் குடியரசில் இருந்து கடைசி கனேடிய மதபரப்புனர் வெளியேறினர்.
- 1960 - பிரெஞ்சு நிர்வாகத்தின் கீழ் ஐ.நாவின் நேரடி ஆட்சியின் கீழிருந்த டோகோ விடுதலை அடைந்தது.
- 1961 - சியேரா லியோனி ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1967 - கனடாவின் மொன்ட்ரியால் நகரில் எக்ஸோ 67 கண்காட்சி ஆரம்பமானது.
- 1974 - அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனுக்கெதிராக வோஷிங்டன் டிசியில் 10,000 ற்கு மேற்பட்டோர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றனர்.
- 1978 - இராணுவப் புரட்சியை அடுத்து ஆப்கானிததான் மக்கள் ஜனநாயகக் கட்சி ஆப்கானித்தானின் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் ஆப்கானித்தானில் போர் தொடங்கியது.
- 1981 - Xerox PARC முதன் முறையாக கணனி mouse I அறிமுகப்படுத்தியது.
- 2002 - நாசாவின் பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தடவையாக தொடர்புகள் கிடைத்தது.

**பிறப்புகள்**

- 1723 - பிலிப்பு தெ மெல்லோ, கொழும்பில் பிறந்த கிறிஸ்தவத் தமிழ் அறிஞர் (இ. 1790)
- 1852 - சர் பி. தியாகராய செட்டி, திராவிட அரசியல் தலைவர் (இ. 1925)
- 1902 - கந்தமுருகேசனார், ஈழத்துப்பெரியார், மூதறிஞர் (இ. 1965)
- 1912 - சோரா சேகல், இந்தியத் திரைப்பட நடிகை (இ. 2014)
- 1942 - வலேரி பொல்யாக்கொவ், ரஷ்ய விண்வெளி வீரர்
- 1945 - பிரபஞ்சன், தமிழ் எழுத்தாளர், விமர்சகர்

**இறப்புகள்**

- 1521 - பெர்டினென்ட் மகலன், போர்த்துக்கேய மாலுமி (பி. 1480)
- 2015 - க. அருணாசலம், ஈழத்து தமிழறிஞர், பேராசிரியர் (பி. 1946)

**க. அருணாசலம் - ஈழத்து தமிழறிஞர், பேராசிரியர்**

கனகசபை அருணாசலம் 14 ஜனவரி 1946 யாழ்ப்பாண மாவட்டம், சாவகச்சேரி, அல்லாரை என்ற ஊரில் கனகசபை, காசிப்பிள்ளை ஆகியோருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

இவர் இலங்கைத் தமிழ்ப் பேராசிரியரும், எழுத்தாளரும், தமிழறிஞரும் ஆவார். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தவர். ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

தனது ஆரம்பக் கல்வியை அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் உயர்கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகப் பயின்று 1971 இல் இளங்கலை சிறப்புப் பட்டம் பெற்றார்.

1972 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார். ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் தொடர்பாக ஆராய்ந்து 1974 இல் முதுகலைப் பட்டமும் தமிழ் வரலாற்றுப் புதினங்கள் தொடர்பாக ஆராய்ந்து 1979 ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டமும் பெற்றார்.


1996 இல் தமிழ்ப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். 1995 முதல் 1998 வரை பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார். மலையகத்தில் நீண்ட காலம் பணியாற்றியதன் காரணமாக, மலையக இலக்கியத்தில் இவர் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

"மலையகத் தமிழ் இலக்கியம்" என்ற ஆய்வு நூலை எழுதினார். பழந்தமிழ் இலக்கியத்திலும் நவீன இலக்கியத்திலும் பல நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.



# அரசியலில் மகிந்த கிரிக்கெட்டில் அர்ஜுன

## அதிகாரப் பேராசையில் விடாமுயற்சி



மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் பேராசை போன்றே அர்ஜுன ரணதுங்க கிரிக்கெட் அதிகார பேராசை காரணமாக அவமானப்பட்டுக்கொண்டிருப்பதாக ராவய பத்திரிகை விமர்சித்துள்ளது.

ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் தோற்ற பின்பும் மீண்டும் அரசியலில் தலையெடுக்க நினைக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்காக நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டிருந்தார்.

இந்நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர் என்ற ஒரே காரணத்துக்காக ஜனாதிபதி பதவியில் ஆயுள்வரைக்கும் உட்காரும் பேராசை அவருக்குள் உண்டு.

அதேபோன்று கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்று வந்த ஒரே காரணத்துக்காக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரம் தன்னிடம் மட்டுமே தொடர்ந்திருக்க வேண்டும் என்ற நினைப்பில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

அதற்கான தேர்தலில் வெல்ல முடியாத பட்சத்தில் இடைக் கால நிர்வாக சபை ஊடாக வேனும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவது அவரது இலக் காக உள்ளது.

ஆனால் இலங்கை கிரிக்கெட் அணியின் வீழ்ச்சிக்கு அர்ஜுன ரணதுங்கவும் ஒரு வகையில் காரணம் என்று கூறலாம்.

அவர்அணிக்குத் தலைமை வகித்த காலத்தில் புதியவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க ஒருபோதும்முன்வந்ததில்லை.

அத்துடன் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் பாரிய ஊழல்களை மேற்கொண்ட அவரது சகோதரர் நிஷாந்த ரணதுங்கவின் கீழ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நிர்வாகத்தை மீண்டும் கொண்டு வருவதற்கும் அவர் விரும்புகின்றார்.

இதன்மூலம் ஊழலுக்கும் வழியேற்படுத்திக் கொடுக்க முயற்சிக்கிறார்.

ஆயினும் இடைக்கால கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஒன்றை ஸ்தாபிக்கப் போவதில்லை என்று விளையாட்டுத்துறை அமைச்சர் திட்டவட்டமாக தெரிவித்துள்ள நிலையில் அர்ஜுனவின் கனவில் மண் விழுந்துள்ளதாகவும் ராவய பத்திரிகை தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (இ-5)

## ஆதரவைப் பெருக்கும்

# முன்னாள் அமைச்சரின் முயற்சி கைகூடுமா?

(கொழும்பு)

எதிர்வரும் மேதினக் கூட்ட ஏற்பாடுகளுக்காக பிரதேச சபைத் தலைவர்களுக்கு முன்னாள் அமைச்சர் ஒருவர் பத்து இலட்சம் ரூபா வழங்கியுள்ளதாக அரசாங்க பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிருலப்பனையில் நடைபெறவுள்ள மேதினக் கூட்டத்தின் போது தமது பெயர் பொறிக்கப்பட்ட தொப்பிகளை அணிந்து ஊர்வலத்தில் செல்வதனை ஏற்பாடு செய்வதற்காக இவ்வாறு பிரதேசசபைத் தலைவர்களுக்கு தலா பத்து இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமது ஆதரவாளர்கள் அதிகளவில் மே தினக் கூட்டத்தில் பங்கேற்றனர் என காண்பிக்கும் நோக்கில் இவ்வாறு பெருமளவு பணத்தை செலவிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கின் பிரதேச சபைத் தலைவர்களுக்கும் முன்னாள் பிரதேச சபை தலைவர்களுக்கும் இவ்வாறு பணம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தைச் சேர்ந்த பிரபலமான முன்னாள் அமைச்சர் ஒருவரே இவ்வாறு பணம் வழங்கியுள்ளார்.

இந்த முன்னாள் அமைச்சர் தெற்கின் பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் முன்னாள் தலைவர்களின் வீடுகளில் நடைபெற்ற கூட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

கிருலப்பனை மே தினக் கூட்டத்தில் தமது ஆதரவாளர்களே அதிகளவில் இருக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை தமக்கும் கட்சிக்கும் கடந்த பத்து ஆண்டுகளாக அளப்பரிய சேவையாற்றிவரும் முன்னாள் அமைச்சரை மறந்துவிட முடியாது எனவும் பணம் இன்றி எதனையும் செய்ய முடியாது எனவும் அதனால் பணத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் தெற்கின் பிரதேசசபைத் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த முன்னாள் அமைச்சர் கடந்த காலங்களில் சுதந்திரக் கட்சியை அழிவடையச் செய்தவர் எனவும் அவரது நடவடிக்கைகளினால் கூட்டு எதிர்க்கட்சிக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறித்த ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார். (இ-5)

# 600 பொலிஸார் கொலையுடன் ராமுக்கு தொடர்பு என சந்தேகம்

(கொழும்பு)

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள்விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரான ராம் 600 பொலிஸார் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ராமிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலமாக இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஆனையிறவு மற்றும் பூநகரி இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் தலைமை வகித்த ராம் யால தேசிய சரணாலயத்தில் இடம் பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களுடனும் தொடர்பு பட்டிருக்கலாம் என கூறப்படுகின்றது.

கடந்த 24 ஆம் திகதி திருக்கோயில்-தம்பிலுவில் பகுதியிலுள்ள அவரது வீட்டிலிருந்த வேளை இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டதாக அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட ராம் பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

முன்னதாக புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண தளபதியாக செயற்பட்ட கருணா அம்மான் புலிகள் அமைப்பிலிருந்து விலகியதையடுத்து ராம் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு ஆயுதப் பிரிவுக்குப் பொறுப்பாக விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனால் நியமிக்கப்பட்டார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அவர் 2013 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 703

Search for people, places and things Nagendram Home

ரட்தை




ரட்தி




தர்மா




ரகுதரன்




தர்சினி




வின் ஜக்ஷன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



*கன்னி ராசியில் குரு வந்தபின் எண்ணியதெல்லாம் நிறைவேறும்! நிதானத்தோடு செயறபட்டு வெற்றிகளை குவிக்கும் மகர ராசி நேயர்களே!*

# “துர்முகி வருஷ” இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017

மன்மத வருடம் முடிந்து துாமுகி வருடம் தொடங்கியிருக்கின்றது. இப் புத்தாண்டில் அஷ்டமத்தில் ராகுவும், குருவும் சஞ்சரிப்பதால் அதிர்ஷ்டம் ஏற்படுமா? இல்லை அல்லல்கள் ஏறபடுமா? சென்ற ஆணடைக் காட்டிலும் இந்த ஆண்டு சிறப்பாக இருகுமா? செய்யும் செயல்களில் செலவு கூடுமா? வரவு வந்து சேருமா? உடல் ஆரோக்கியத் தொல்லை அகல உடனடியாக செய்ய வேண்டிய வழிபாடு என்ன என்றெல்லாம் வருடம் பிறக்கும் முன்னாலேயே சிந்தனை ஓட்டம் இருக்கும்.

உண்மையிலேயே இந்த ஆண்டின் தொடக்கத்தில் அஷ்டமத்தில் குருவும், ராகுவும் கூடியிருக்கின்றார்கள். ராசிநாதனோ வக்ரம் பெற்ற ராசியைப் பார்க்கின்றார். எனவே, பொறுமையைக் கடைப்பிடித்து பெருமையை அடைய வேண்டிய வருடமாக அமைகின்றது. கன்னி ராசியில் குரு வந்த பிறகு உங்கள் எண்ணாங்கள் ஓரளவு நிறைவேறும்.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு பங்குனி 31 ஆம் திகதி மாலை நேரததிலேயே நிகழ்ந்திருக்கினறது. புதன் உங்கள் ராசிக்கு 6, 9-க்கு அதிபதியாவார். அவருககுரிய புதன் கிழமையில் 6 இல் சந்திரன் சஞ்சரிக்கும் பொழுது திருவாதிரை நட்சத்திரத்தில் புத்தாண்டு பிறந்திருக்கின்றது. திருவாதிரை என்பது ராகுவிற்குரியது. ராகு உங்கள் ராசிக்கு 8 இல் அல்லவா இருக்கின்றார்.

மறைந்த ராகு நிறைந்த தனலாபத்தை தரும் என்றாலும் சூரியன் வீட்டில் சஞ்சரிப்பதால், உங்களுக்கு எதிர்பாராத திருப்பங்கள் இந்த ஆண்டு வரப்போகின்றது. காரியங்களில் தாமதங்களும் அதிகரிக்கலாம்.

இரண்டாமிடத்தில் கேதுவும், எட்டாமிடத்தில் ராகுவும் இருப்பது சர்ப்ப தோஷத்தின் அறிகுறியாகும். எண்ணற்ற வாய்ப்புகள் வந்தும் கைநழுவி செல்லலாம். இருக்கும் தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை கைகளில் வந்துசேரும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டு பிறப்பதால் தொழிலில் கவனம் செலுத்த இயலாது. தொல்லை தந்த எதிரிகளின் பலம் கூடும். முன்கோபத்தின் காரணமாக முன்னேற்றத் தடைகளும் வந்து சேரலாம்.

# கன்னி ராசியில் குரு வந்தபின் எண்ணியதெல்லாம் நிறைவேறும்!

குரு உங்கள் ராசியைப் பொறுத்தவரை 3, 12-க்கு அதிபதியாவார். அவர் 8 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயறபடும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு திடீரென கிடைக்கும்.

கடமையில் தொய்வு இருந்தாலும் கடைசி நேரத்தில் முடிவடைந்து விடும். ஆயினும் ஆரோக்கியத்தில் மட்டுமே அதிக கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும். மருத்துவச் செலவு கூடும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்பு ஏற்பட்டு அகலும். இல்லம் கட்டிக் குடியேறுவதற்காக ஒரு தொகையைச் செலவிட உகந்த நேரமிது.

### ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி 17 வரை!

இக்காலத்தில் உள்ள கிரக நிலைகளின் அமைப்பின் படி சுக்ரன் உச்சம் பெற்றிருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். 5, 10-க்கு அதிபதி உச்சம் பெற்றிருப்பதால் ஆண்டின் தொடககத்தில் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும் என்று சொல்லலாம். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். புதிய ஒப்பந்தங்கள் ஒன்றிரண்டு திருப்திகரமாக இருக்கும். பழைய பங்குதாரர்களால் பிரச்சினைகள் ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். அவர்களை விலக்கிவிட்டுப் புதியவர்களை சேர்த்துக்கொள்ள முன்வரும் நேரமிது.

அஷ்டமாதிபதி சூரியன் 6-க்கு அதிபதி புதனோடு இணைந்து சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். 6, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதி இணையும் பொழுது விபரீத ராஜ யோகம் செயறபடும் அல்லவா? எனவே, திடீர் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக வந்து சேரலாம். அரசுவழிச் சலுகைகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் அனுக்கூலமாக நடந்து கொள்வர்.

பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். தந்தை வழிச் சொத்துக்களில் வைத்த பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்கள் வாங்கிக் குடியேற வேண்டுமென்ற ஆவல் ஒரு சிலருக்கு மேலோங்கும்.




அது நிறைவேறும் விதத்தில் செவ்வாய், சனியின் சேர்க்கை அமைந்துள்ளது. வருடத் தொடக்கத்தில் 4, 11-க்கு அதிபதியான செவ்வாய் இலாப ஸ்தானத்தில் இருக்கின்றார். அவரோடு ராசிநாதனாகவும், இரண்டிற்கு அதிபதியான சனி வக்ரம் பெற்று இணைந்திருக்கின்றார்.

இந்த முரண்பாடான கிரகங்களின் சேர்க்கை ஒரு வழிக்கு நன்மைதான். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும்.

உடன்பிறப்புகளும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். பாதியில் நின்ற கட்டடப பணி மீதியும் தொடரும். உடன்பிறந்தவர்களால் ஏற்பட்ட குழப்பங்கள் மாறும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் நட்பால் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள். கால்நடைகளால் உங்களுக்கு இலாபம் கிடைகக்கும்.

### ஆடி 18 இல் தேடிவரும் யோகம்!

துாமுகி வருடம் ஆடி மாதம் 18 ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்த குருப் பெயர்ச்சியின் விளைவாக நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரப்போகின்றது. பெயரச்சியாகும் குரு உங்கள் ராசியைப் பார்க்கப் போகின்றார். 1, 3, 5 ஆகிய இடங்களை குரு பார்க்கப் போகின்றார். ராசியைக் குரு பார்க்கும் பொழுது நல்ல நிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறும். ஓசை படாமலேயே உதவிக்கரம் நீட்டுபவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து உதவிசெய்வர். நேச மனப்பான்மை கொண்டவர்களின் நட்பு கூடும்.

நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பொருளாதார முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள நல்ல வாய்ப்புகள் கைகூடி வரும். இல்லத்தில் மண விழா, மணி விழா மற்றும் பெண்களின் சுபச்சடங்குகள் போன்றவை நடைபெறும் சூழ்நிலை அமையும்.

எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் வெளி ஆட்களின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் உண்டாகும். எதிர்பாராத இலாகா மாறறங்கள் கூட ஒரு சிலருக்கு கிடைக்கலாம். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் நேரமிது. மங்கல நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்க நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

9 இல்குருவருமபொழுதுஒப்பற்ற வாழ்க்கை அமையும். பொன், பொருட்கள் அதிகரிக்கும். வாங்கிய பூமி யாலும் இலாபம் கிடைக்கும். வைத்திருக்கும் பூமியாலும் இலாபம் உண்டாகும். இன்பத்தின் எல்லைக்கு செல்ல குருபகவான் அருள் வழி காட்டும்.

குருவின் பார்வை 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே, இனி உடல் நலம் சீராகும். ஆரோக்கியத்திற்காக செலவிட்ட தொகை குறையும். சீரும், சிறப்பும் பெற குருவருள் உங்களுக்கு வழிகாட்டும். புதிய பாதை உங்களுக்கு புலப்படப் போகிறது.

“ஜென்மத்தைக் குருதான் பார்த்தால் செல்வாக்கு அதிகரிக்கும்” என்பார். எனவே செல்வ விருத்தியோடு செல்வாக்கு விருத்தியும் ஏற்படும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து கூட்டு முயற்சிகளில் வெற்றி பெற வைப்பர். தீட்டும் திட்டங்கள் வெற்றி பெறும்.


“மூன்றினை குருதான் பார்த்தால் முன்னேற்றம் அதிகரிக்கும்” என்பர். சகோதர ஸ்தானத்தில் குருவின் பார்வை பதிவதால் உடன்பிறப்புகள் உற்சாகத்தோடு வந்திணைந்து பணிபுரிவர். வழக்குகளில் வெற்றி கிட்டும். சகோதர ஸ்தானத்தில் குரு பார்வை பதியும் பொழுது, முன்னோர்களின் சொத்துககளில் முறையான பங்கீடு கிடைக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

“ஐந்தினை குருதான் பார்த்தால் அனைத்திலும் வெற்றி கிட்டும்” என்பர். அந்த அடிப்படையில் புத்திர ஸ்தானத்தை குரு பார்க்கும் பொழுது பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்திகள் வந்து சேரும். அவர்களால் உதிரி வருமானங்களும் கிடைக்கும். பழைய சொத்துக்களை விற்று விட்டுப் புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். தொழிலில் இடையூறு செய்த கூட்டாளிகளை விலக்கிவிட்டு வேறு புதிய கூட்டாளிகளைச் சேர்த்துக்கொள்ளும் எண்ணம் மேலோங்கும்.

### குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!

குருவின் வக்ர காலத்தில் அற்புத பலன்கள் உங்களுக்கு வந்து சேரப்போகின்றது. சுபச்செலவுகள் அதிகரிக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். போட்டிகளில் வெற்றி காண்பீர்கள். பிரிந்த தம்பதியர் பகை மறந்து இணையும் வாய்ப்பு உண்டு. பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

சகோதர வர்க்கத்தினரின் சச்சரவு அகலும். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். தெய்வத்திருப்பணிகளை முன்னின்று நடத்துவீர்கள்.



சனியின் வக்ர காலத்தில் சஞ்சலங்கள் அதிகரிக்கும். தடுமாற்றங்கள் உருவாகும். குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும். கூடுதல் பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு விழிப்புணர்ச்சி அதிகம் தேவை. விரயங்கள் அதிகரிக்கும். விவகாரங்கள் வளரும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தை அதிகம் பெற முடியும்.

### மங்கையருக்கான மகத்தான பலன்கள்!

மகர ராசியில் பிறந்த பெண்களுக்கு சிம்மத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, குடும்பச் சுமை கூடும். விரயங்கள் அதிகரக்கும். கொடுக்கல்- வாஙகல்களில் எதிரபார்த்த பலன்கள் கிடைபபது அரிது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. குருப்பெயர்சசிக்குப் பிறகு அதன் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் மருத்துவச் செலவு குறையும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

நீண்ட காலமாக நடைபெறாத மங்கல நிகழச்சிகள் நடைபெற வழிபிறக்கும். உத்தியோகத்தில் இதுவரை தடையாக இருந்த முன்னேற்றம் இப்போது கைகூடும். கணவன-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். இடம், வாங்குவது பற்றிப் பரிசீலிப்பீர்கள். குழந்தைகளின் எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்திலும் அனுகூலம் உண்டாகும். பொது நலத்தில் உள்ளவர்களுக்கும் புதிய பதவிகள் வருடத்தின் மையப்பகுதியில் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். உறவினர்கள் பகை அகலும்.

### வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!

ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து விநாயகர், சனி பகவான், அனுமன் ஆகியோரை வழிபட்டு வருவது நல்லது. அனுமன் கவசம் பாடினால் அனுகூலங்கள் கிடைக்கும்.

நாளை கும்பம்...

# போர்க்குற்றங்கள் சாதாரண விடயமல்ல

## பெண்களுக்கே பாதிப்பு அதிகம்; சுவீடன் அமைச்சர் சுட்டிக்காட்டு

(3 ஆம் பக்கத் தொடாச்சி)

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகள் நிலையத்தில் வெளியுறவுக் கொள்கையில் பெண்ணியத்தின்பங்குஎனும்தலைப்பில் விசேட சொற்பொழிவொன்றை ஆற்றியிருந்தார்.

இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சொற்பொழிவு நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டி யாராச்சி, வெளிநாட்டு தூதுவர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

90 களில் இலங்கையில் சிறிதுகாலம் பணியாற்றியிருந்தேன். அதன்பின்னர் மீண்டும் இலங்கைக்கு வருகை தருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டும் உங்கள் முன்னிலையில் உரையாற்றக் கிடைத்தமையையிட்டும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகத்தின் பல பாகங்களிலும் பாரிய மோதல்கள் நடைபெறுகின்றன. கடந்த வருடத்தில் மட்டும் உலகத்தில் 40 பாரிய மோதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. மோதல்கள், பயங்கரவாதம், அடிப்படைவாதம் போன்றவற்றால் பல்வேறு இழப்புக்கள் ஏற்படுகின்றன. கல்வியின்மை, வறுமை என்பன ஏற்படுகின்றன. இது மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் வலுவாக அதிகரிக்கின்றது.

இயற்கை அனர்த்தம், விவாகரத்து ஆகியவற்றின் காரணமாக 125 மில்லியன் மக்களின் உயிர்ப் பாதுகாப்புக்காக 25 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருடமொன்றுக்கு செலவிடப்படுகின்றது.

நீண்டகால ஆயுத மோதல்களுக்கு முகங்கொடுத்த நாடு என்ற வகையில் பல்வேறு துர்ப்பாக்கியமான வேறுபட்ட வன்முறை அனுபவங்கள் உங்களுக்கு காணப்படலாம். வன்முறைகளற்ற நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான சர்வதேச சமூகத்தின் உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும்.

அதேநேரம் நிலையான சமாதானத்தை முறையான வகையில் கட்டியெழுப்புவதற்கான தொடர்ச்சியான முக்கியமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் இடைவிடாது முன்னெடுக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம். வெற்றிகரமான நிலையான சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்பாடொன்று முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் பால்நிலை சமத்துவம் முக்கியமாக கருத்திற் கொள்ளப்படவேண்டியது அவசியமாகின்றது.

மோதல்கள், வன்முறைச் சம்பவங்களின் போது பெண்களின் மனித உரிமைகள் ஆண்களை விடவும் அதிகமாக மறுக்கப்படுகின்றன.

சமாதானத்தை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டமை தொடர்பான வெகுவாக கவனம் செலுத்தப்படுவதோ முறையாக வெளிப்படுத்தப்படுவதோ இல்லை.

சமாதானத்தைகட்டியெழுப்புதல் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளிலும் சம அளவில் பெண்களின் பங்குபற்றுதலை உறுதி செய்ய வேண்டும். இலங்கையில் பல பெண்கள் பால்நிலை சமத்துவம் உள்ளிட்ட பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றில் பெண்களுக்கான பங்களிப்பு சம அளவில் வழங்கப்பட வேண்டும். அரசியல், பொருளாதார சமூக ரீதியாக பெண்களுக்கான உரிய அந்தஸ்துகள் வழங்கப்படவேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் பெண்ணிய வெளிநாட்டுக்கொள்கையே காணப்படுகின்றது. இதன்மூலம் சமாதானத்தை பேணுவதற்கான செயற்பாடுகள் அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்றவற்றில் முக்கியமானதொரு வகிபாகத்தை பெண்களால் வகிக்க முடிகின்றது.

வெளிநாட்டுக் கொள்கையில் பெண்ணியத்தை உள்வாங்குவதை தவறாக கருதக்கூடாது. அதன்மூலம் நிலையான சமாதானம், பாதுகாப்பு என்பன உட்பட பலவிடயங்களில் முன்னேற்றத்தை எட்ட முடியும்.

பால் நிலை சமத்து வம் என்பது தனியானதொரு பிரச்சினையல்ல. சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய முக்கியமானதொன்றான பிரச்சினையாகும்.

பெண்கள் வன்முறை, அடக்குமுறை, திட்டமிட்ட அடிமைத்தன நிலைமைகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. வெளிநாட்டுக் கொள்கையில் பெண்ணியம் தொடர்பாக பார்க்கையில் உரிமைகள், பிரதிநிதித்துவம், யதார்த்தமான பரிசீலனை ஆகிய மூன்று விடயங்கள்முக்கியமாகின்றன.

மனித உரிமைகள்,சட்டம் ஒழுங்கு ஆகியவற்றில் பெண்களுக்கான உரிய இடம் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.

பெண்களின் பிரதிநித்துவமானது அனைத்து விடயங்களிலும் குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் முதல் பாராளுமன்றம், பேச் வார்த்தை



மேசைகள், சமாதான பொறிமுறைகள் வரையில் முறையாக காணப்பட வேண்டும்.

வெளிநாட்டுக்கொள்கையில் பெண்ணியத்தை உள்வாங்குவதன் ஊடாக உயர்ந்த சமூகத்தை உருவாக்குவதோடு சமாதானம், பாதுகாப்பு,அபிவிருத்தியில் சிறந்த நாடொன்றை கட்டியெழுப்ப முடியும்.

போர்க்குற்றம் போன்ற பாரிய விடயங்களில் பெண்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

ஆனால் அதன்போதான நிலைமைகளில் அச்சம்ப வங்களைத் தவிர்க்க முடியாததொன்றாக பார்ப்பது தவறானது. பாலியல் ரீதியாக பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலைமைகளிலிருந்து உறுதியான பாது காப்பு அளிக்கப்படுவது அவசியமாகின்றது.

நிலையான சமாதானம், பாதுகாப்பை திறந்த மனத்துடன் கட்டியெழுப்புவதற்கு பால் நிலை சமத்துவம் பேணப்படுகின்றமை மிகவும் முக்கியமாதொன்றாகின்றது.

மூன்று தசாப்த யுத்தம் நிறைவுக்கு வந்துள்ளது. தற்போது நிலையான சமாதானத்தை கட்டி யெழுப்புவதற்கான தருணம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே பால்நிலை சமத்துவம்,பெண்ணியம் போன்ற விடயங்களை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இலங்கை பெண்கள் வலுவானவர்கள் அவர்களின் பங்களிப்பு, வளர்ச்சிக்கு நாம் உறுதுணையாக இருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# செய்தித்துளிகள்

## பொன்சேகாவுக்கு எதிரான மனு இன்று விசாரணைக்கு வருகிறது

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் பாராளுமன்ற உறுப்புரிமை வழங்கப்பட்டமை அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது என தீர்மானித்து அவரது நியமனத்தை இரத்து செய்யுமாறு கோரி முன்வைக்கப்பட்டுள்ள இரண்டு மனுக்களை இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பொன்சேகாவின் நியமனத்துக்கு எதிராக ஓய்வு பெற்ற இராணுவத் தளபதியான சட்டத்தரணி அஜித் பிரசன்ன முன்வைத்த ரீட் மனு மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவினல் நேற்றுமுன்தினம் முன்வைக்கப்பட்டதன் பின்னர் இந்த அறிவிப்பை நீதிமன்றம் விடுத்துள்ளது.(இ-5)

## சு.க. மே தினத்துக்குச் சென்றால் ஒழுக்காற்று நடவடிக்கை-பந்துல

(கொழும்பு)

நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு சென்றால், எனது வாக்காளர்கள் அடுத்த தேர்தலின் போது என்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து, என்னைப் புறக்கணிப்பார்கள் என முன்னாள் அமைச்சரும் கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு வருமாறு அழைப்புக் கடிதம் கிடைத்துள்ளது. இதில். எனது தொகுதியிலிருந்து 750 பேரை கூட்டத்துக்கு அழைத்து வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எனது தொகுதியிலிருந்து யாரும் ஸ்ரீல.சு.க.யின் கூட்டத்துக்கு செல்ல தயாரில்லை. அப்படியிருக்கையில் நான் எப்படி அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வது எனவும் அவர் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பினார். (இ-5)

## இரு இளம்யுவதிகள் ரயில் மோதி மரணம்

(கொழும்பு)

தெஹிவளை ரயில் நிலையத்திற்கு அருகில் ரயிலில் மோதி இரு யுவதிகள் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 அளவில் மருதானையில் இருந்து தெற்கு களுத்துறை நோக்கி பயணித்த ரயிலிலேயே இவர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் சம்பவத்தில் 19 வயதான இரு இளம் யுவதிகளே மரணமடைந்துள்ளனர். (இ-5)

## 220 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்பு

(கொழும்பு)

நவகத்தேகம பிரதேசத்தில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது 220 கிலோகிராம் கேரள கஞ்சா நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படியே குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

கஞ்சா மீட்கப்பட்டதை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இரண்டு நபர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5)

# தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றம் அரங்கேறுகிறது

## வன்மையாகக் கண்டிக்கிறார் சாந்தி எம்.பி.

தமிழ் மக்களின் காணிகள் அத்துமீறி பிடிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு தொடர்ந்து சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

இலங்கை வீடமைப்பு அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு பிரதேசத்தில் சம்பத்நுவர, இசுறுபுர என்ற பெயர்களில் சிங்கள குடியிருப்பு கிராமங்கள் புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இதனை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வீடமைப்பு அமைச்சர் நேரடியாக வருகை தந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிங்கள ஆக்கிரமிப்புக்குள்ளான மணலாறு பிரதேசத்தில் சம்பத்நுவர,இசுறுபுர என்ற பெயர்களில் சிங்கள குடியிருப்பு கிராமம் புதிதாக இம்மாதம் 11 ஆம் திகதி ஆரம்பித்து வைத்துள்ளார்

இக்கிராமங்களில் குடிநீர், மின்சார வசதி போன்ற சகல வசதிகளுடன் 24 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் நிலங்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் நில ஆக்கிரமிப்பின் சாட்சிகளில் ஓரிடமாக காணப்பட்டுவரும் மணலாறு பிரதேசம் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடப்பகுதியாகும்இங்கே மகாவலி அபி விருத்தி எல் வலயம் என்ற திட்டத் தினூடாக ஆரம்பிக்கப்பட்ட வெலிஓயா நில ஆக்கிரமிப்பு செயற்பாடு இன்றுவரை ஆட்சிக்கு வருகின்ற சகல அரசாங்கங்களினாலும் முன்னெடுக்கப்பட்டே வந்துள்ளது.

வெலிஓயா என்ற பெயரில் புதிய பிரதேச செயலர் பிரிவு முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மக்களின் காணிகள் அத்துமீறி பிடிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு தொடர்ந்து சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

எனவே இவ்வாறான நில ஆக்கிரமிப்பு செயற்பாடு களும் அவற்றில் சிங்கள மக்களை குடியேற்றுவதும் இராணுவத்தினர் தொடர்ந்தும் பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்து நிற்பதும் கண்டிக்கத்தக்க விடயமாகும்.

எமது மக்களின் அடிப்படை அபிலாசைகளை அவர்களின் உரிமைகளை புறக்கணித்து எமது நிலங்களில் மேறகொள்ளப்படும் இச் செயற்பாடுகளை இவ் அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (2-281)

# தமிழ் சினிமா வரலாறு

## 148 நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது எம்.ஜி.ஆரின் கால் எலும்பு முறிந்தது

திரையிடப்பட்ட தியேட்டர்களில் எல்லாம் காலையிலேயே ரசிகர்கள் நீண்ட கியூ வரிசையில் நின்றனர்.

படம் மெகா ஹிட் என்பது திரையிடப்பட்ட முதல் நாள்- முதல் காட்சியிலேயே தெரிந்துவிட்டது. இரட்டை வேடங்களில் எம்.ஜி.ஆர். சிறப்பாக நடித்திருந்தார். இரட்டை வேடக் காட்சிகளை ஒளிப்பதிவாளர் ஜி.கே.ராமு அருமையாகப் படமாக்கியிருந்தார்.

பாடல்களை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், சுரதா உட்பட பலர் எழுதியிருந்தார்கள். எஸ்.எம்.சுப்பையா நாயுடு இசை அமைத்திருந்தார்.

தூங்காதே தம்பி தூங்காதே, சம்மதமா, நான் உங்கள் கூட வர சம்மதமா? முதலான பாடல்கள் மூலை முடுக்கெல்லாம் எதிரொலித்தன.

ஏற்கனவே வசூல் சக்ரவர்த்தி என்று பெயர் பெற்றிருந்த எம்.ஜி.ஆர். இப்படத்தின் மூலம் தமிழ்த் திரை உலகின் முடிசூடா மன்னன் என்று புகழ்பெற்றது.



### வெற்றி ஊர்வலம்

நாடோடி மன்னன் வெற்றி விழா மதுரையில் நடந்தபோது 4 குதிரைகள் பூட்டிய அலங்கார ரதத்தில் எம்.ஜி.ஆர். ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

ஊர்வலத்தின் முன்னால் கொண்டு செல்லப்பட்ட உலக உருண்டை மீது ஒரு தங்க வாள் மின்னியது. அது 110 பவுனில் தயாரிக்கப்பட்டதாகும்.

ஊர்வலம் முடிந்த பின், தமுக்கம் மைதானத்தில் நடந்த பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் அந்த வீரவாள் எம்.ஜி.ஆருக்கு பரிசாக வழங்கப்பட்டது. வாளை வழங்கியவர் நாவலர் நெடுஞ்செழியன்.

இந்த விழாவை மதுரை முத்து ஏற்பாடு செய்திருந்தார்.

அன்றைய சபாநாயகர் யு.கிருஷ்ணாராவ், எதிர்க்கட்சித் தலைவர் வி.கே.ராமசாமி முதலியார், பி.டி.ராஜன், நடிகர்கள் கே.ஆர். ராமசாமி, எஸ்.எஸ். ராஜேந்திரன், டி.வி.நாராயணசாமி, டி.கே.பகவதி, கவிஞர் கண்ணதாசன், டைரக்டர் ஏ.எஸ்.ஏ.சாமி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு பேசினர்.

எம்.ஜி.ஆர்.மிகவும் மகிழ்ச்சியோடு இருந்த தருணத்தில் எதிர்பாராத சோதனை ஏற்பட்டது.

நாடோடி மன்னன் மகத்தான வெற்றிக்குப் பின், கண் திருஷ்டி போல் எம்.ஜி.ஆருக்கு ஒரு விபத்து ஏற்பட்டது.

புகழ்பெற்ற திரைப்பட நடிகராக விளங்கிய போதிலும் படப்பிடிப்பு இல்லாத நேரங்களில் தனது நாடாகக் குழுவின் நாடகங்களில் நடிப்பது எம்.ஜி.ஆரின் வழக்கம்.

சீர்காழியில், இன்பக் கனவு நாடகத்தில் நடித்தபோது ஒரு சண்டைக் காட்சியில் நடிகர் குண்டுமணியை அலாக்காகத் தூக்கினார்.

குண்டுமணி, மிகப் பருமனான நடிகர். அப்படியும் அவரை எம்.ஜி.ஆர் எளிதாகத் தூக்கிவிட்டார்.

ஆனால், சற்றே சரிந்தததால் எம்.ஜி.ஆர். கால் மீது குண்டுமணி விழ, எம்.ஜி. ஆரின் கால் எலும்பு முறிந்துவிட்டது.

இதனால் மேடையில் விழுந்துவிட்டார் எம்.ஜி. ஆர். (தொடரும்)

# கடற்படையை பலப்படுத்தும் ரணிலின் திட்டம் பலிக்குமா?

..விடுதலைப் புலிகளின கப்பல்களை அழிக்க, கடற்படைக் கப்பல்கள் இலங்கைக் கரையில் இருந்து 1500, 2000 கி.மீ தூரம் வரை பயணம் செய்திருந்தன. சுமத்ராவுக்கு அருகே வரை சென்று விடுதலைப் புலிகளின் கப்பல்களைத் தாக்கி அழித்திருந்தன.

அமெரிக்கா வழங்கிய சமுத்ரா என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல், இந்தியாவின் சயுர, சாகர ஆழ்கடல் ரோந்துப் படகுகள், சக்தி என்ற போக்குவரத்து விநியோக கப்பல், நந்திமித்ர, சுரணிமல போன்ற அதிவேக ஏவுகணைக கப்பல்கள் என்பனவற்றை இலங்கைக் கடற்படை இந்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியிருந்தது.

இப்போதும் இந்தக கப்பல்கள் இலங்கைக் கடற்படையிடம் இருக்கின்றன. ஆனால், கடற்புலிகளை அழிக்கும் ஆழ்கடல் நடவடிக்கைகள் தொடர் கண்காணிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை அல்ல. அது அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகள்.

ஆனால், ஆழ்கடல் கணகாணிப்பு என்பது, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியது. வாரக்கணக்கிலோ, மாதக்கணக்கிலோ, கடலிலேயே கழிக்க வேண்டியிருக்கும். அத்தகையதொரு கண்காணிப்பை ஒரு பெரும் பிரதேசத்தில் முன்னெடுப்பதற்கு அதிகளவு கப்பல்கள் தேவை, கடற் படையினரும் தேவை. அதைவிட, இதற்காக பெருமளவில் எரிபொருள் உள்ளிட்ட வளங்களையும் செலவிட வேண்டியிருக்கும்.

இலங்கைக் கடற்படை இந்தச் சவாலைத் தானாக எதிர்கொள்ளப் போவதிலலை. ஏனென்றால், இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளப் போகிறது. ஏற்கனவே இந்தியாவிடம் இரண்டு ஆழ்கடல் ரோநதுக் கப்பல்களை இலங்கை வாங்கவுள்ளது.


கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வரும் இந்தக் கப்பல்களில் ஒன்று அடுத்த ஆண்டு கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. அதேவேளை, தமது நாட்டுக்கு அகதிகள் படையெடுப்பதைத் தடுப்பதற்காக இலங்கைக் கடற்படைக்கு இரண்டு ரோந்துக் கப்பல்களை அவுஸ்திரேலியா வழங்கியமை நினைவிருக்கலாம்.

மாலைதீவு தொடக்கம் மலாக்கா நீரிணை வரையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்றிட்டத்தை இலங்கைக் கடற்படை பொறுப்பேற்றால், அதற்கு உதவ அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் தயாராகவே இருக்கின்றன.

ஏற்கனவே, இலங்கைக் கடற்படை, ஆழ்கடல் கண்காணிப்பை வலுப்படுத்துவதற்காக, ஜப்பான் இரண்டு கப்பல்களை வழங்கவுள்ளதாக 2014 ஆம் ஆண்டு செய்திகள் வெளியாகின. ஜப்பானிய பிரதமர் சின்ஷோ அபே இலங்கை வந்திருந்த போது அதனை அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பின்னர் ஜப்பான் அந்த திட்டத்தை கைவிட்டுவிட்டது. இப்போது இலங்கையுடன் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளை வளர்த்து வரும் ஜப்பான், இலங்கைக் கடற்படையை வலுப்படுத்த ஆழ்கடல் கண்காணிப்புக்கான கப்பல்களை வழங்க முன்வரக் கூடும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் மே மாதம, ஜப்பானுக்கு மேற்கொள்ளவிருக்கும பயணத்தின்போது, இதுபற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டால் ஆச்சரியத்துக்குரியதல்ல. அதுபோலவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத்தின் போது, ஒரு ஆழ்கடல் ரோந்துப் படகை இலங்கைக்கு வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.



ரஷ்யா போன்ற ஏனைய நாடுகளின் உதவிகளையும் இலங்கை எதிர்பார்க்கிறது.

எனவே, வெளி நாடுகளின் உதவிகளுடன் கடற்படையைப் பலப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் இந்த திட்டம் அமைந்திருக்கிறது.

ஜப்பான், சீனா உள்ளிட்ட பல நாடுகளுக்கு, இந்தியப் பெருங்கடல் வழியான கப்பல் பாதை மீது அதிக ஆர்வம் உள்ளது. காரணம், இதன் மீதுதான் இந்த நாடுகளின் பிரதான பொருளாதார பலம் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.

எனவே, இதனைப் பாதுகாப்பதற்காக, எந்தளவுக்கு உதவிகளையும் வழங்க ஜப்பான் போன்ற நாடுகள் தயாராக இருக்கின்றன.

அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு இந்தக் கடல் பகுதியில் தீவிரவாத அச்சுறுத்தல்களைத் தடுக்க வேணடிய தேவை காணப்படுகிறது.

இலங்கைக் கடற் படை விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை எதிர்கொண்ட அனுபவத்தைக் கொண்டது என்பதால், அமெரிக்காவுக்கு கூடுதல் நம்பிக்கையை கொடுத்திருக்கிறது.

இதனால், இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா ஏற்கனவே பல்வேறு பயிற்சிகளை வழங்கத் தொடங்கிவிட்டது.

இது, அடுத்த கட்டத்துக்கு கடற்படையைப் பலப்படுத்தும் வழி தெரியாமல் முழித்துக் கொண்டிருந்த இலங்கை அரசாங்கத்துக்கு, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல அமைந்து விட்டமை ஆச்சரியம் தான். (முற்றும்)

-சுபத்ரா-

நீங்கள் வாழ்வதோடு பிறர் வாழவும் வழி வகை செய்யுங்கள்.

- சர் ரேஞ்ச்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பேரினவாதப் பெருந் தீ மீண்டும் மூண்டெழுகுது

வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி என்பதற்குக் கூட தென்பகுதிப் பேரினவாதிகள் சீறிப்பாய்ந்து நாடு பற்றி எரியும் என எச்சரிக்கை செய்கின்றனர்.

கூடவே வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனை கைது செய்ய வேண்டும் என்றும் கோஷம் போடப் படுகிறது. இருந்தும் தமிழ்த் தலைவர்கள் அமைதி யாக இருக்கின்றனர். ஒரு காலத்தில் கொட்டியா என்ற சொல்லைக் கேட்டு மாடியில் இருந்து குதி த்து ஓடியதை தென்பகுதி மிகவேகமாக மறந்து விட்டது என்று சொல்வதற்கு எங்களிடமும் ஆட் கள் இல்லாமல் போய்விட்டனர்.

இந்நிலையில் சமஷ்டி என்பதற்கு இத்துணை தூரம் கொதித்து எழும் பேரினவாதிகளை அடக்கு வதற்கும் இவர்கள் நாட்டில் அமைதியைக் குலை க்கிறார்கள் என்று கூறி சிறையில் அடைப்பதற் கும் ஆட்சியாளர்கள் தயாரில்லை.

தமிழர்கள் தங்கள் உரிமை பற்றிக் கதைத்தால் அது பயங்கரவாதம்; அது நாட்டைக் கூறுபோடும் சதித்திட்டம் என்றெல்லாம் கூறி சட்டத்தின் பிடிக் குள் தமிழர்களை அகப்படுத்தி சிறையில் அடைப் பவர்களுக்கு, இனவாதத்தை யார் பேசினாலும் அது குற்றம் என்பது புரியாமல் போனமைதான் எங்கள் நாட்டின் மிகப்பெரும் துரதிர்ஷ்டமாகும்.

மிகப்பெரியதொரு யுத்தம் நடந்து அந்த யுத்தத் தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன் றொழிக்கப்பட்ட கொடும் செயல் நடந்தும் அது கண்டு பெரும்பான்மையினம் இரக்கம் கொள்ளா மல் இருப்பதன் காரணம்தான் என்ன?

இலங்கையில் ஒரு நீதியான ஆட்சி நடக்குமாக இருந்தால், தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை சிங்கள மக்கள் தாமாக வழங்க வேண்டும். அதுவே வன்னிப் போரில் தமிழ் மக்கள் அனுபவித்த இழப் புக்கான பரிகாரமாக இருக்க முடியும் என்று ஆட் சியாளர்களும் பௌத்த பீடங்களும் சிங்கள மக்க ளுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

ஆனால் நல்லாட்சியினரும் பெயரளவில் நல் லாட்சி என்று கூறிக் கொள்கின்றனரே தவிர, அவ ர்களிடமும் சூழ்ச்சிகளும் சூக்குமங்களும் நிறை யவே உண்டு.

சமஷ்டியை தந்தால் பேரினவாதம் சீற்றம் கொள் ளும் என்பது போல காட்டிக்கொள்வது,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் எழு ந்து கோலோச்சுவார் என்று பயப்படுத்துவது,

இவற்றின் ஊடாக தமிழ் மக்களின் உரிமை களை வழங்காமல் காலம் கடத்துவது என்ற நுட் பத்தை நல்லாட்சியும் பிரயோகித்து வருகிறது.

இதற்கெல்லாம் மூலகாரணம் சர்வதேச போர்க் குற்ற விசாரணையை கைவிட்டு அதற்குப் பதி லாக எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை பிச்சை யாக வாங்கிக் கொண்ட எங்கள் நாசகாரம் என் பதை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

தேர்தலில் யார் வென்றாலும் வன்னியில் நடந் தது இன அழிப்பு என்பதால், சர்வதேசப் போர்க் குற்ற விசாரணையை நடந்த வேண்டும். அந்த விசார ணை மிகுதியைத் தீர்மானிக்கும் என்று பகிரங்க மாகக் கூறியிருக்க வேண்டிய தமிழ் அரசியல் தலைமை எலும்புத் துண்டுக்கு ஆசை கொண்ட தால், இன்று வடக்கின் முதல்வர் விக்னேஸ்வ ரனை கைது செய்; சமஷ்டி என்றால் தமிழரை அழிப்போம், தொலைப்போம் என்றெல்லாம் பேரினவாதம் பெரும் தீயைக் கக்குகிறது.

என்ன செய்வது! இழந்த தமிழினத்தை தொடர்ந் தும் அதட்டுகின்ற அநீதியை சர்வதேசமும் பார்க்க வில்லை. அந்த ஆண்டவனும் கண்டுகொள்ள வில்லை என்றால் எங்கள் தலைவிதி எப்படியா கும் என்பதுதான் தமிழர்களின் இப்போதைய பெரும் கவலை.

# பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு பங்குகளை விற்க சவுதி அரேபியா முடிவு

(ரியால்)

சர்வதேச சந்தையில் பெற்றோலின் விலை தொட ர்ந்து கடும்சரிவைச் சந்தித்து வருவதால் ' எண்ணெய் வளத்தை மட்டுமே நம்பியு ள்ள சவுதி அரேபியா உள்ளி ட்ட வளைகுடா நாடுகள் அண் மைக்காலமாக பொருளா தார மந்தநிலையை சந்தி த்து வருகிறன.

இதற்கிடையில், சவுதி அரேபியாவில் வாழும் மக்க ளின் மின்சாரத்தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த தேவையை நிறைவு செய்ய கச்சா எண்ணெயை எரித்து மின்சாரம் தயாரிக்கப்படுவ தால் அவ்வகையிலும் அந் நாடு பெரும் இழப்பை சந்தி த்து வருகிறது.

இந்த நிலையை மாற்ற, பல்வேறு பொருளாதார சிக் கனம் மற்றும் சீர்திருத்த நட வடிக்கைகளை எடுப்பது தொடர்பாக சவுதி மன்னர் முஹம்மது பின் சல்மான் தலைமையிலான நிபுணர் கள் குழு விரிவாக ஆலோ சனை நடத்தியது. இதன் விளைவாக, அமைச்சர்க ளின் செலவினங்களில் ஒரு பகுதியை குறைத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதம் வெளியான தேசிய பட்ஜெட் டில் பல ஆண்டுகளுக்கு பின் னர் மின்சார கட்டணம் மற் றும் பெற்றோல் விலை உய ர்த்தப்பட்டது

மேலும், வெளிநாட்டில் கடன்வாங்கும்நிலைக்குசவுதி அரேபியா தள்ளப்பட்டுள் ளது. பல்வேறு சர்வதேச வங்கிகளில் இருந்து ரூ.60 ஆயிரம் கோடி கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளனர். கடனை வாங்கினால் தான் நாட்டை நடத்திச்செல்ல முடி யும் என்ற நிலை ஏற்பட்டு ள்ளது.

இந்நிலையில், பொரு ளாதார நெருக்கடியை சமா ளிக்க சவுதி அரசுக்கு சொந் தமான 'அரம்கோ' எண் ணெய் நிறுவனத்தின் பங்கு களை விற்க சவுதி பட்டத்து இளவரசரும், பாதுகாப்புத் துறை அமைச்சருமான முஹ ம்மது பின் சல்மான் தற் போது முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பாக, செய் தியாளர்களுக்கு நேற்று முன்தினம் சுமார் ஒருமணி நேரம் பேட்டியளித்த அவர், எண்ணெய் வளத்தின் மூல மாக மட்டுமே நாட்டுக்கு வரு மானம் என்ற பழக்கத்துக்கு பலகாலமாக நாம் அடிமைப் பட்டு கிடக்கிறோம். இத னால், பல துறைகளில் அடைந்திருக்க வேண்டிய முன்னேற்றத்தை நாம் எய்த முடியவில்லை.

இந்த மனநிலை மாற வேண்டும். எண்ணெய் வள த்தின் மூலமாக கிடைக்கும் வருமானத்தை மட்டுமே சார்ந்திராமல் பிறவகைகளி லும் வருமானத்தை ஈட்டக் கூடியாக நாடாக வரும் 20 20-ம் ஆண்டுக்குள் சவுதி அரேபியாவை முன்னேற்ற வேண்டியுள்ளது எனத் தெரி வித்தார். (இ-5)

# குளிரூட்டி வசதியின்றி யோக்கட் விநியோகம்

## கைதானவருக்கு மூவாயிரம் அபராதம்

(கரணவாய்)

குளிரூட்டி வசதியின்றி யோக்கட் மற்றும் தயிர் என் பவற்றை விநியோகிப்பதற் காக வான் ஒன்றில் எடுத்துச் சென்றவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் கைப்பற்றப்பட்ட பொருட் களை அழிக்குமாறும் பருத் தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தர விட்டார்.

பருத்தித்துறைப் பகுதி யில் வாகனம் ஒன்றில் குளி ரூட்டப்படாமல் எடுத்துச் செல் லப்பட்ட பெருமளவு யோக் கட் மற்றும் தயிர் என்பன நேற்று முன்தினம் பருத்தித் துறை சுகாதாரப் பகுதியின ரின் சோதனையில் சிக்கி யது.

இந்நிலையில் பருத்தித் துறை சுகாதாரப் பகுதியின ரால் அன்றைய தினம் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றத்தை ஒப்புக் கொண் டதையடுத்து 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதி பதி கைப்பற்றப்பட்ட யோக் கட் மற்றும் தயிர் என்பவ ற்றை அழிக்குமாறும் உத்தர விட்டார். (இ-60)

# குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு

(கரணவாய்)

வடமராட்சியின் சில பகு திகளில் குடி தண்ணீர் பற் றாக்குறை ஏற்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சியின் கரை யோரப் பிரதேசமான சக் கோட்டை திக்கம் மற்றும் வடிசாலைப்பகுதி, அல்வாய் மத்தி போன்ற பகுதிகளில் வசிப்போரே குடிநீர் பெறுவத ற்கு நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இப் பகுதிகளில் வசிப் போர் ஒன்றரை கிலோ மீற் றர் தூரத்தில் உள்ள தேவரை யாளி கண்ணகி அம் மன் கோவிலடிப் பகுதிக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது.

வெயில் மேலும் அதிகரி க்குமாயின் வடமராட்சிப் பகுதியில் குடிநீருக்கு பற்றாக் குறை ஏற்படும் எனத் தெரி விக்கப்படுகிறது. (இ-60)

# குப்பைத் தொட்டிகளாக பராமரிப்பற்ற காணிகள்

(கரண்வாய்)

துன்னாலை வடக்கு சோழி யவத்தைப் பகுதியில் பராம ரிப்பின்றிக்காணப்படும்காணி களில் கொட்டப்படும் கழிவுக ளால் அப்பகுதி குப்பை மேடா கக் காட்சியளிப்பதாகத் தெரி விக்கப்படுகிறது.

துன்னாலை வடக்கு ஜே/ 417 கிராம அலுவர் பிரிவுக் குட்பட்ட பகுதியில் உள்ள சோழியவத்தைப் பகுதியில் உள்ள காணிகள் சில பரா மரிப்பின்றி பற்றைகள் சூழ் ந்து காணப்படுகின்றது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வீடுகளில் சேரும் குப்பைகளைச் சிலர் வீசி விட் டுச் செல்கின்றனர்.

குப்பைகள் மட்டுமல்லாது சாராயப் போத்தல்கள், பியர் ரின்கள், தகரப்பேணிகள், மருந்துப் பொருட்களின் கழி வுகள் என்பன வீசப்படுவ தால் அப்பகுதி குப்பை மேடா கக் காணப்படுகின்றது.

இப்பகுதியில் சட்ட விரோ தமான முறையில் வெட்டப்ப டும் மாடுகளின் கழிவுகளும் கொட்டப்படுவதாக தெரிவிக் கப்படுகிறது.

காணிகளில் வெற்றுப் போத்தல்களைக் கொட்டி விட்டுச் சென்றோர் தற்போது வீதிகளிலும் வெற்றுப் போத் தல்களை கொட்டிவிட்டுச் செல் வதனால் வீதிகளால் பயணி க்கும் வாகனங்கள் ஏறி வீதிக ளில் பீங்கான் துண்டுகள் பரவிக் காணப்படுகின்றன.

எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுக்கவேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-60)

# கோஷ்டி மோதலில் ஈடுபட்டு கைதான 16 பேருக்கும் இன்றுவரை மறியல்

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமர பாகு பகுதியில் கோஷ்டி மோத லில் ஈடுபட்ட 16 பேரையும் இன்று புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கு மாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

கடந்த புதுவருட தினத்த ன்று சமரபாகுப் பகுதியில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் 10 பேர் வரையில் படுகாய மடைந்திருந்தனர். இது தொட ர்பில் விசாரணை செய்து வந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் முதற்கட்டமாக 15 பேரைக் கைது செய்து நேற்று முன்தினம் திங்கட் கிழமை பருத்தித்துறை நீதி மன்றில் முற்படுத்தியபோது அவர்களை இன்றுவரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார்.

நேற்று செவ்வாய்க்கி ழமை மேலும் ஒருவரைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போது அவரையும் இன்று புதன்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதி பதி உத்தரவிட்டார். (இ-60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை வவுனியா பிர தேசத்தில் இரட்டைப் பெரிய குளம், கல்குண்டமடு, அழ கல்ல, அவுசதாப்பிட்டிய, தீர வீர கம, பூ ஓயா, இரட்டைப் பெரிய குளம்இராணுவ முகாம ஆகிய இடங்களிலும் மன்னாா பிர தேசத்தில் அரிப்பு, சவேரியார் குளம், வெள்ளிமலை CE CB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தூய்மை காப்போம்



✦ இளமையான மூங்கிலை எளி தில வளைக்க முடியும். அதுபோல, இளம்வயதிலேயே மனதை கடவுள் பக்கம் திருப்பி விடுங்கள்.

✦ மனித மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. உலகவிஷயத்தில் ஈடுபட்டு சிதறி நாலாபுறமும் ஓடினால் ஒன்று சேர்ப்பது எளிதல்ல.

✦ பேசுவது யாருக்கும் எளிமையானது. ஆனால், அதைப் பின்பற்றி நடப்பது மிகவும் கடினமானது.

✦ மனமே கடவுள் குடியிருக்கும் வீடு. எப்போதும் அதன் தூய்மை காப்பது அவசியம்.


✦ தன்னைத் தானே ஒருவன் திறமைசாலி என்று கருதிக் கொள்வது மூடத்தனமான செயல்.

# கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்திய யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

## கம்பர்மலை யங்கம்பன்ஸ் வெற்றி









பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கலைவாணி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய 9பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியை வீழ்த்தியது சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட் டுக்கழகம்.

மேற்படி போட்டியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இப்போட்டியில் 3:1 என்ற ரீதியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றிருந்தது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி சார்பாக ரதன் 2கோலினையும் நிறோ ஒரு கோலினையும் போட்டார்கள்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ரதனும் சிறந்த கோல்காப்பாளராக மகிந்தனும் தெரிவாகினர். (கு)

## உதயசூரியன் வி.க.நடத்தும் கடற்கரை உதைபந்தாட்டம்

உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் கடற்கரை உதைபந்தாட்ட தொடரின் நேற்று நடைபெற்ற D பிரிவு ஆட்டத்தில் சைனிங்ஸ் A அணி நேதாஜி அணியுடன் தோல்வியுற்று உதயசூரியன் அணியுடனான போட்டியில் 7:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றியுடன் காலிறுதிக்கு நுழைந்தது.

சைனிங்ஸ் B அணியும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (கு)

## யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

### கோப்பாய் பிரதேச அணி சம்பியன்




யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண்கள் கரப்பந்தாட்ட போட்டியில் கோப்பாய் பிரதேச அணி வெற்றி பெற்றது. இப்போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆவரங்கால் மத்திய வி.க. மைதானங்களில் நடைபெற்றது.

7பிரதேச அணிகள் பங்குபற்றிய இப்போட்டியில் பருத்தித்துறை அணியை அரையிறுதியில் வென்ற கோப்பாய் அணியும் உடுவில் அணியை வென்ற தெல்லிப்பழை அணியும் இறுதியில் மோதின.

சென்ற ஆண்டு சம்பியனாகிய தெல்லிப்பழையை வீழ்த்துவதற்காக வீறுகொண்ட கோப்பாய் 3:0 என்ற நேர் செற்களில் வென்று 2016 இல் சம்பியனாகிய்து.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான பெண்கள் கரப்பந்தாட்ட போட்டியில் கோப்பாய் பிரதேச அணியை 3:0 என்ற நேர் செற்களில் வென்று 2016 இல் சம்பியனாகியது. (கு)

# இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான 11பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறும் போட்டியில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகமும் மாலை 4.30மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ்.பொற்பதி அணியை எதிர்த்து நவாலி சென்பீற்றர்ஸ் அணி மோதவுள்ளது.

◆◆◆◆


தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமம் லீக் மட்டும் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவாலி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும் மற்றும் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நிக்கலஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

◆◆◆

கலைஒளி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மின்னொளியிலான கரப்பந்தாட்ட போட்டி கலைஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழகமும் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சண்டிலிப்பாய் யூத் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும்

இரவு 8.30மணிக்கு நடைபெறும் போட்டியில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

# மல்லாவி பீனிக்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனாகியது பாலிநகர் ஸ்கைலாப்



பாலிநகர் வன்னி உதயம் அமைப்பின் ஒழுங்கமைப்பில் கடந்த 24 ஆம் திகதி பாலிநகர் ஸ்கைலாப் மைதானத்தில் அணிக்கு ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெற்றது.

இதில்11அணிகள் கலந்து கொண்டன. இறுதிப்போட்டியில் பாலிநகர் ஸ்கைலாப் அணியும் மல்லாவி பீனிக்ஸ் அணியும் மோதிக்கொண்டன.

இதில் பாலிநகர் ஸ்கைலாப் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (கு)

## எனது மகளை மீட்டுத்தாருங்கள்
# நம்பிக்கையுடன் தாய் சாட்சியம்

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தில் காயமடைந்த நிலையில் காணாமல் போன தனது மகளை ஜனாதிபதி ஆணைக்குழுவினர் கண்டுபிடித்து தருவார்கள் என தாய் ஒருவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் நாள் அமர்வுகள் நேற்று செவ்வாய்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது. அதன் போதே குறித்த தாய் இவ்வாறு கூறியுள்ளார்.

யுத்தத்தின் போது காயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தனது மகளை தாம் பார்வையிடச் சென்ற போது அவரை பதவியாவிற்கு மாற்றியதாக அறிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து தாம் பதவியா, புல்மோட்டை மற்றும் பூந்தோட்டம் முகாமிற்கு சென்ற போது பம்பைமடு ஏ பிரிவில் மகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அங்கு தமது மகள் காணப்படவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் காணாமல்போன மகள் உயிருடன் இருப்பதாக நம்பிக்கை வெளியிட்ட அவர், தனது மகளை ஆணைக்குழுவினர் கண்டுபிடித்து தருவார்கள் என தெரிவித்துள்ளார். (செ-281)

# யாழிலுள்ள வீடு ஒன்றின் மீது இரு நபர்கள் கல் வீசி தாக்குதல்
## யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீதுநேற்று அதிகாலை இரண்டு நபர்கள் கல்வீசி தாக்குதல் மேற்கொண்டதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதி பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது அதிகாலை 12.30 மணியளவில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் வீட்டின் யன்னல் மற்றும் கதவுகளுக்கு கற்கள் மற்றும் போத்தல்களால் எறிந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். சத்தம் கேட்டுவீட்டில் உள்ளவர்கள் வெளியில் வந்தபோது தாக்குதல் மேற்கொண்டவர்கள் தப்பிசென்றுள்ளனர். இத் தாக்குதலில் வீட்டுக் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்ததற்கு அமைவாக வருகை தந்தபொலிஸார் விசாரணை மேற்கொண்ட நிலையில் வீட்டில் தாக்குதல் நடத்திய இரு நபர்களையும் தமக்கு தெரியும் என்றும் அவர்களுடைய பெயர் மற்றும் மோட்டார் வாகன இலக்கம் என்பவற்றை வீட்டு உரிமையாளர் பொலிஸாரிடம் தெரியப்படுத்தியுள்ளார். சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

# அழைத்தது...

லாம் என தெரிவித்துள்ளார்.

யாழ்பாணத்துக்கு நேற்றையதினம் வருகைதந்த அவரிடம் முன்னாள் போராளிகளை மீள்குடியேற்ற அமைச்சு சார்பாக எதிர்வரும் முப்பதாம் திகதி கொழும்புக்கு வருமாறு அழைத்தமை தொடர்பாக அவரிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேதினநிகழ்வை எதிர்வரும் மேமாதம் முதலாம் திகதி கொழும்பில் நடத்தவுள்ளோம். மேதின நிகழ்ச்சிக்காக நாம் அனைத்து மக்களையும் கொழும்புக்கு வருமாறு அழைத்துள்ளோம். அந்தவகையில் யாழ் மாவட்டத்திலிருந்தும் மக்களை அழைத்துள்ளோம். யார் வந்தாலும் எமக்கு பிரச்சினை இல்லை.

முன்னாள் போராளிகளைநான் விசேடமாக அழைக்கவில்லை. ஆனால் புனர்வாழ்வுப் பிரிவுபடைத்தரப்பினர் அவர்களை அழைத்திருக்கலாம் எனதெரிவித்தார்.(செ-9)

# ஐ.நா சிறப்பு...

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் இரண்டு சிறப்பு அறிக்கையாளர்கள் இலங்கைக்கு உண்மை கண்டறியும் பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

சுயாதீன நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் மொனிக்கா பின்ரோ, சித்திரவதைகள், மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் ஜுவான் மென்டேஸ் ஆகியோரே நாளை மறுதினம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு வரவுள்ளனர்.

இவர்கள், அடுத்த மாதம் 07ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து, நீதித்துறை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான மதிப்பீடுகளை செய்யவுள்ளனர்.

சுயாதீன நீதித்துறை, நீதித்துறையின் தொழில்சார் தன்மை, நாட்டின் சட்ட கட்டமைப்பு ஆகியன தொடர்பாக மதிப்பீடுகளை செய்யும், இந்த இரண்டு சிறப்பு அறிக்கையாளர்களும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு தமது அறிக்கைகளை முன்வைக்கவுள்ளனர்.

இலங்கையில் போருக்கு பின்னரான காலத்திலும் சித்திரவதை மற்றும் இதர துஷ்பிரயோகங்கள் தடுக்கப்படுகிறதா எனவும், அது தொடர்பில் என்னென்ன நெருக்கடிகள் உள்ளன எனவும் அந்த இரு வல்லுநர்களும் விவாதிக்கவுள்ளனர்.

இலங்கை தற்போது சரித்திரத்தின் முக்கியமான திருப்புமுனையில் உள்ளது எனக்கூறும் ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் செய்திக் குறிப்பு, தமது வல்லுநர்களின் பயணம் மற்றும் பரிந்துரைகள் மூலம் எதிர்காலத்துக்கு தேவையான சரியான பாதையை இலங்கை வகுத்துக் கொள்ள முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென தெரிவித்துள்ள மனித உரிமை கண்காணிப்பகம் அரசியல் சாசனத்தில் திருத்தங்களைச் செய்வதற்காக மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் அரசாங்கத்தின் முனைப்பு வரவேற்கப்பட வேண்டியது எனவும் குறிப்பிட்டுள்ளது. (செ-12)

# பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் மக்களுக்கு சேவை ஆற்றுகிறோம்
## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் பொது மக்களுக்கு எமது சேவையை வழங்கி வருகிறோம் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டம் நேற்றையதினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ள பல இடங்கள் பொது மக்களுக்குரியது. பொலிஸாருக்கு என உகந்த இடம் இல்லை.யாழ் பொலிஸ் நிலையத்தில் மேலதிகமாக 150 பொலிஸார் தேவைப்படுகின்றனர். அவர்கள் வந்தாலும் இடவசதி இல்லை. மேலும் கடந்த காலத்தில் பொலிஸாரில் 50 பேருக்கு மேலாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டும் 20 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டும் உள்ளார்கள்.

இவ்வாறாக பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் கடமையாற்றி வருகிறோம். இருந்தும் மக்களுக்கு எம்மாலான உதவிகளை செய்து வருகிறோம். சில குறைபாடுகள் இருக்கும் அவற்றை உங்களிடம் இருந்து தெரிந்து கொண்டு நிவர்த்தி செய்வோம்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களில் பனை மரங்கள் வெட்டியது தொடர்பாக 18 வழக்குகளும், மிருகவதை தொடர்பாக 37 வழக்குகளும், மணல் அகழ்வது தொடர்பாக 127 வழக்குகளும், கஞ்சா தொடர்பாக 95 வழக்குகளும், சட்டவிரோத மது அருந்தியமை தொடர்பாக 127 வழக்குகளும், சட்டவிரோத சாராய விற்பனை தொடர்பாக 68 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பாரியகுற்றம் தொடர்பாக சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் பெண் பொலிஸ உத்தியோகத்தர்கள் அதிகம் தேவையாக உள்ளது. விசேடமாக தமிழ்மொழி தெரிந்தவர்கள் தேவையாக உள்ளது. ஏனெனில் யாழ் மாவட்டத்தில் அதிகளவு சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெறுகிறது. இவ்வாறான முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு பெண் பொலிஸார் தேவை. மேலும் அதிகளவான துஷ்பிரயோகங்கள் இருவரின் சம்மதத்துடன் நடைபெறுகிறது. எனவே சிறுபிள்ளைகளுக்கு விழிப்புணர்வும் அவசியம்.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் படி வட மாகாணத்துக்கு தற்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.கணேசநாதன் விசேடமாக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைகளை இனம்கண்டு அதற்குரிய தீர்வை பெற்றுக் கொள்வதற்கும் தமிழ் பொலிஸாரின் பிரச்சினைகளை இனம்கண்டு தீர்ப்பதற்கும் அவர் விசேடமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே எதிர்வரும் காலங்களில் அனைவரின் ஒத்துழைப்புடனும் யாழ்.மாவட்டத்தில்* குற்றச்செயல்களை இல்லாது ஒழிக்க ஒன்றாக செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# வெளிநாடு செல்ல முயற்சித்து துருக்கி கடத்தல்காரர்களிடம் சிக்குண்ட முல்லைத்தீவு இளைஞன் உயிரிழப்பு
## மகனின் செய்தி கேட்டு தாயும் அதிர்ச்சி மரணம்

(பனிக்கன்குளம்)

வெளிநாடு செல்வதற்காக சென்று துருக்கியில் கடத்தல்காரர்களிடம் சிக்குண்டு சித்திரவதைகளுக்குள்ளான 5 பேரில் முல்லைத்தீவினைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் மகன் இறந்த செய்தியைச் கேள்வியுற்ற அவரது தாயாரும் அதிர்ச்சியுற்று நேற்று மரணமாகியுள்ளார்.

வடக்கு, கிழக்குத் தமிழர்களில் பெருமளவானவர்களுக்கு இருக்கும் வெளிநாட்டு மோகத்தைப் பயன்படுத்தி கனடா, சுவிஸ், லண்டன் என பல இடங்களுக்கு அவர்களைக் கொண்டு சென்று விட்டுவிடுவதாக பெருமளவு பணத்தைப் பெற்று அவர்களை நடுத்தெருவில் விடுவது மட்டுமல்லாது கடும் சித்திரவதை செய்து உயிர்களையும் பறிக்கும் அவலம் தற்போது பெருமளவு நடந்து வருகின்றது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் முல்லைத்தீவு வட்டுவாகலைச் சேர்ந்த நாகராசா காண்டீபன் என்பவரையும் அவருடன் சேர்ந்த இன்னும் நான்கு பேரையும் வெளிநாட்டு ஆசை காட்டி கள்ள வழியால் புலம்பெயர் தமிழர் ஒருவர் கூட்டிச்சென்றுள்ளார். இவர் காண்டீபன் உட்பட்ட 5 பேரையும் துருக்கியில் இறக்கி அந்நாட்டைச் சேர்ந்த நாடு கடத்தும் குழுவிடம் ஒப்படைத்ததாகத் தெரிய வருகின்றது.

ஆனால் இவர்களை சுவிட்சர்லாந்துக்கு அனுப்புவதற்கான பணத்தை அந்தக் குழுவிடம் கையளிக்கவில்லை.

அதற்கு முன்னரும் இவ்வாறானவர்களால் சுவிட்சர்லாந்துக்கு கூட்டிச் செல்லப்பட்ட ஏனையவர்களின் பணத்தையும் புலம்பெயர் தமிழர் குழுவினர் கொடுக்கவில்லை. இதனால் கடும் கோபத்திற்குள்ளான துருக்கியைச் சேர்ந்த கடத்தல்காரர்கள் நாகராசா காண்டீபனையும் அவருடன் சேர்ந்த ஏனைய நான்கு பேரையும் கொடூர சித்திரவதைகளுக்கு உள்ளாக்கியுள்ளார்கள்.

இச் சித்திரவதை தாங்க முடியாது நாகராசா காண்டீபன் நேற்றுமுன்தினம் மரணமாகியுள்ளார். ஏனைய நான்கு பேரும் கடத்தல்காரர்களிடம் இருந்து தப்பிச் சென்று துருக்கிப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

இந்நிலையில் வெளிநாடு செல்வதற்காக சென்று துருக்கியில் கடத்தல் காரர்களிடம் அகப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு இறந்த முல்லைத்தீவு வட்டுவாகலைச் சேர்ந்த காண்டீபனின் தாயாரும் மகன் இறந்த காரணத்தால் நேற்று அதிர்ச்சியுற்று மரணமாகியுள்ளார்.

நாகராசா புவனேஸ்வரி 65 வயது என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். மகன் இறந்ததை அறிந்து தாயார் மரணமான சம்பவம் அப்பகுதி மக்களை பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. அத்துடன் தாய், மகனின் பாசம் நெஞ்சை நெகிழ வைப்பதாக அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். தற்போது காண்டீபனின் சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்காக உறவினர்கள் துருக்கித் துதரகத்தில் காத்திருப்பதாக தெரியவருகின்றது. (செ-281)

# வடக்கு பிரேரணையின் சிங்கள பிரதி தேவை

தமிழ் மொழி பேசும் மக்களுக்கு வடக்கில் வேறாக மாநிலம் கோரி வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் சிங்கள பிரதியொன்றை பெற்றுத்தருமாறு கோரி நேற்று உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணியொருவரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த மனுவின் பிரதிவாதிகளாக வட மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட நான்கு பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ் அரசு கட்சி ஆகியவை இலங்கையினுள் தனித்து அரசாங்கமொன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதா என விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-12)

## சகோதரர்களு...

பள்ளிவாசலுக்கு முன்பாக நின்று இருவர், புகைப்பிடித்துக் கொண்டிருந்ததை அவதானித்த அண்ணன், தம்பி இருவரும் அவர்களின் அச்செயலை தடுக்க முயன்றபோது கையில் வைத்திருந்த கத்தியினால் இரு சகோதரர்களையும் காயப்படுத்திவிட்டு அவர்கள் தப்பிச் சென்றனர்.

காயப்பட்ட இருவரும் தப்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிகப்பட்டுள்ளனர்.

சாருஹான் அபூகார் (வயது 19) என்ற அண்ணனும், சாருஹான் பர்சான் (வயது-16) என்ற தம்பியுமே மேற்படி சம்பவத்தில் காயங்களுக்குள்ளானவர்களாவர்.

இதுதொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-89)

## சனல் 4 வெளி...

காட்சியில் வெளியிடப்பட்டது என இராணுவத்தில் சரணடைந்து காணாமற்போன கண்ணன் என்று அழைக்கப்படும் ஞானச்செல்லம் உதயராசா (காணாமற்போகும் போது வயது 40) என்பவரின் மனைவி அருந்தவச்செல்வி சாட்சியமளித்தார். காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு இரண்டாவது நாளாக நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி பெண் இவ்வாறு சாட்சியமளித்தார். அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில், விடுதலைப் புலிகள் அமைப்பில் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினராகவிருந்த எனது கணவர் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இராணுவத்தில் சரணடைந்தார்.

நானும் எனது இரண்டு பிள்ளைகளும் அதனை நேரில் கண்டோம். அதன் பின்னர் கணவர் பற்றிய தகவல் இல்லை. இந்நிலையில், சனல் 4 தொலைக்காட்சியில் வெளியிடப்பட்ட போர்க்குற்ற ஆதார புகைப்படம் எனக்கு கிடைத்தது. அதில் எனது கணவர் ஆடைகள் களையப்பட்ட நிலையில் இராணுவத்தினர் அழைத்து வருவது மற்றும் கிடங்கு ஒன்றின் அருகில் உட்கார வைத்திருப்பது தொடர்பான புகைப்படங்கள் உள்ளது.

இராணுவத்தினர் எனது கணவரைப் பிடித்து வைத்திருந்து சித்திரவதை செய்தமைக்கான ஆதாரங்களாக இது உள்ளன. இராணுவத்தினரே கணவரை வைத்துள்ளனர்.

அவரை மீட்டுத்தாருங்கள் என கண்ணீருடன் சாட்சியமளித்தார். இதன்போது புகைபடங்களை பார்த்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் எவ்வித பதிலும் கூறாமல் அமைதியாக இருந்தனர்.

இதேவேளை சனல் 4 வெளியிட்ட புகைப்படத்தில் ஐந்தாவது நபராக இவர் அடையாளம் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-4)

## சாள்ஸ் அன்ரனி...

நீர்வேலி தெற்கு பகுதியில் உள்ள அவருடைய வீட்டிலிருந்து பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2009-ம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் காணாமலபோயிருந்த சில தளபதிகளில் இவரும் ஒருவர் என கூறப்பட்டிருந்த நிலையில் நீர்வேலி பகுதியில் கடந்த சில வருடங்களுக்கு முன் இவர் திருமணம் முடித்திருந்தார். இந்நிலையில் நேற்றைய தினம் காலை 10 மணிக்கு சிவில் உடையில் நீர்வேலி கந்தசாமி கோவிலடி நீர்வேலி தெற்கு என்னும் விலாசத்தில் உள்ள இவருடைய இல்லத்திற்குச் சென்ற பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸார் கணபதிப் பிள்ளை சிறிசிவமூர்த்தி என்ற இயற்பெயர் கொண்ட நகுலன் என்ற முன்னாள் விடுதலைப புலிகளின் தளபதியை கைது செய்துள்ளனர். குறித்த நபர் ஒரு பிள்ளையின் தந்தை எனவும் கூறப்படுகின்றது.

போர் முடிவுற்று பல வருடங்களின் பின்னர் இவ்வாறான கைதுகள் தொடர்வதனால் முன்னாள் போராளிகளிடையே கடும் பதற்ற நிலை தோன்றியிருப்பதோடு, அரசாங்கம் மீதான அவநம்பிக்கை தோன்ற ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தமிழீழ வைப்ப...

நடவடிக்கையில் நேற்று மாலை 4 மணியளவில் இருந்து ஈடுபட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் இயங்கி வந்த தமிழீழ வைப்பகத்தின் தலைமைச் செயலகம், கேப்பாபுலவு வீதி, லூத்மாதா சந்தியில் உள்ள இரண்டாம் காணியில் 2009-ம் ஆண்டு வரை செயற்பட்டு வந்துள்ளது.

மேற்படி இடம் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வருவதற்கு முன்னதாக, குறித்த செயலகத்திற்கு முன்னே இருந்த தனியார் ஒருவரின் வெறும் காணியில் இருந்த ஆழமான மண் கிணற்றுக்குள் மக்கள் அடைவு வைத்த தங்க நகைகளை போட்டு கிணற்றை மூடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தமிழீழ வைப்பகத்துடன் தொடர்புடைய விடுதலைப்புலிகளின் உறுப்பினர் ஒருவர் நீதிமன்றத்தின் ஊடக குறித்த தகவலை வழங்கியுள்ளதாகவும், இதன் மூலமே இந்த அகழ்வு நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நில அகழ்வு நடைபெறும் இடத்தில் மாவட்ட நீதிபதி சமுகமளித்துள்ளதுடன், இலங்கை மின்சார சபையினர் இரவு நேரப் பணிக்காக மின்னிணைப்பு செய்துள்ளனர்.

அகழ்வை மேற்கொள்வோர் கிணற்றின் அடையாளம் சரியாகத் தெரியாததால்பெரும்சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் நேற்றிரவு அகழ்வுப் பணி நிறுத்தப்பட்டு ஒரு ஏக்கர் காணியைச் சுற்றி பொலிஸார் இரவுக்காவலில் ஈடுபட்டுள்ளனர்.

மீண்டும் அகழ்வு நடவடிக்கை இன்று காலை ஆரம்பமாகும் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (செ-281)

## பன்றிக்கு வைத்...

இவர் மின்தாக்கி சம்பவ இடத்தில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவந்த ஓமந்தை பொலிஸார் அரசமுறிப்பு ஓமந்தையை சேர்ந்த 43 வயதுடைய நபர் ஒருவரைக் கைது செய்து நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் கைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (செ-60)

## சமஷ்டி முறை...

டன் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் திருமதி மார்க்கொட் வால்ஸ்டொம் தலைமையிலான குழுவினர் வடமாகாண முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடலை மேற கொண்டனர். அக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் சுவீடன் நாட்டின் தூதரகம் இல்லை. டில்லியிலேயே உள்ளது. இருந்த போதும் அவர்கள் இங்குவந்தமை பெருமையளிக்கிறது.

இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள் எமக்கு தெரியும். தற்போது பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. இலங்கை நடுத்தர வருமானத்தை பெறும் நாடு என்ற வகையில் தங்களால் எந்த உதவிகளையும் செய்ய முடியாது என அவர் எமக்கு கூறினார்.

இந்நிலையில் நாங்கள் அவர்களுக்கு கூறியிருந்தோம், இலங்கை நடுத்தர வருமானத்தை பெறும் நாடாக இருக்கலாம். ஆனால் வடமாகாணம் போரினால் பாதிக்கப்பட்ட பகுதி என்பதால் அதிக உதவிகள் தேவை என்பதை கூறியிருக்கிறோம். மேலும் ஆட்சிமாற்றத்தின் பின் இங்கே பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளமையினை நாம் ஒத்துக் கொண்டோம்.

அவர்களுடைய கணிப்பு என்னவென்றால் யுத்தம் முடிவடைந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப நாட்களாகும் என்றும் அதற்கு உரிய காலத்தை தரவேண்டிய அவசியம் உள்ளது என்றும் தெரிவித்தார். அதற்குரிய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோமே தவிர அதற்கான நீதியை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என தெரிவித்தேன்.

வரும்காலத்தில் அரசியல் ரீதியாக எவ்வாறான ஒரு தீர்வு மாற்றம் வேண்டும் என கேட்ருந்தார்கள். அதற்கு நாம், சுவிட்ஸர்லாந்தில் இருந்து நிபுணர்களை அழைத்து அவரகளுடன் சமஷ்டி தொடர்பாக கலந்தாலோசித்த பின்னர் தான் நாம் சமஷடி முறையிலான தீர்வு வேண்டும் என்பதை கேட்டுள்ளதாக கூறியுள்ளோம். அவர் அதை ஏற்றுக்கொண்டார். ஆனால் சமஷ்டியை பெரும்பான்மையினத்தவர் விரும்பவில்லைபோல் தெரிகிறது என தெரிவித்தார்.

இதற்கு நாம் பதிலளிக்கையில், அது உண்மை. தென்பகுதி அரசியல்வாதிகள் சமஷடியை பிரிவினைவாதமாக கருதி வருகின்றனர். சமஷ்டி பிரிவினைவாதம் அல்ல. ஆனால் அதை பிரிவினைவாதம் என தென்னிலங்கை தலைவர்கள் கருத்து கொண்டுள்ளார்கள். அதனாலேயே இந்த முரண்பாடு என்பதை நாம் அவரிடம் கூறியுள்ளோம் என்றார்.

இந்நிலையில் வெளிநாட்டு பங்களிப்பு எவ்வாறு அமையவேண்டும்? எனகேட்டார்கள். அதற்கு வெளிநாட்டு பங்களிப்பு வடக்கிற்கு தேவை அவர்களின் உதவிகள் எமக்கு நன்மைபயக்கும் என நாம் தெரிவித்துள்ளதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (செ-9)

வீடு விற்பனைக்கு
இருபாலை டச்சு வீதியில் இருபாலை சந்திக்கு அண்மையாக 1 1/2 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
முகவர்கள் தேவையில்லை
நேரடியாக தொடர்பு கொள்ளவும்
(C-4443)
தொடர்பு - 077 512 4107

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-4438)
CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062

7 வருட கால கல்வி - தொழில் வழிகாட்டி சேவை
தொழில் வங்கிச் சேவை - SIKARAM HOTEL SCHOOL
விசா சேவை பணிகள் ஒருங்கிணைந்த புதிய உதயம்
SIKARAM ACADEMY
Business • Hospitality • English

(C-4445)
UK Certified
கற்கைநெறிகள்
Certificate – Diploma – Bachelors Degree
Leading to University of Sunderland – UK
O/L உடன் 3 - 4 மாத Entry Level கற்கைநெறியுடன் உள்நாட்டு - வெளிநாட்டு
கல்வி - தொழில் - விசா ஏற்பாடு
Dip. in Tourism & Hospitality Management
Dip. in Sales & Marketing Management
Up to 30% DISCOUNT May Intake
ஆங்கில மொழித் தேர்ச்சிக்கு சர்வதேச அங்கீகாரமிக்க சான்றிதழுடன் அவரவர் தராதரத்துக்கேற்ப வடிவமைக்கப்பட்ட விசேட ஆங்கிலக் கற்கைநெறிகள்
அனுமதிகளுக்கு:
077 36 16 798
021 222 0011
KET – PET – FCE CAMBRIDGE English Courses
IELTS
STUDENT VISA – SPOUSE VISA
SKILLED MIGRATION ஏற்பாடுகளுடன்
<<<< Scholarships Available
மேலதிக விபரங்களுக்கு
wwww.sikaram.lk
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)

பண்டிகைக்கால விசேட சலுகைகள்
220க்கு மேற்பட்ட உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிததபால்கள் பொதிகள் சேவைகள்!
வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், உணவுப் பொருட்கள், கருவாடு, மருந்து, எண்ணெய் வகைகள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம்
11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kgக்கு மிக குறைந்த கட்டணம்.
UK-600/= Canada-900/= France-700/= Germany-650/=
(4230)
மற்றைய நாடுகளுக்கும் மிகக்குறைந்த கட்டணத்தில் அனுப்பி கொள்ள முடியும்
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
திருமுருகன் கொம்நெற் (PVT) Ltd
271A, K.K.S Road, Jaffna.
46, Aadiyapatham Road, Thirunelvely.
18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, பருத்தித்துறை. (பஸ் நிலையம் முன்பாக)
பிரதான வீதி, சங்கானை (ஆசைப்பிள்ளை நகைக்கடை முன்பாக)
021222 7835

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.